
# கலைமுகம்

காலாண்டுக் கலை இலக்கிய இதழ்



கலைவழி இறைபணி

ஐப்பசி - மார்கழி 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


## கவிதைகள்

* வாழ்வு பெற எழுந்திடு
* நீ மீண்டும் வரவேண்டும்
* கவனம்
* வறுமை
* அவன் செயலே
* சமாதானத்தோடு ஒரு சந்திப்பு
* கவிதைத்துளிகள்
* ஆறாவது இதயத்திலிருந்து . .

## கட்டுரைகள்

* மனிதம் மலர்ந்திடவேண்டும்
* மனிதத்துவத்துவப்போரின் முதல் மாவீரன்
* அரங்கவலை- பீற்றர் ஷாவ்வர்
* பழங்கால தமிழ் இசையும் கலையும்
* சிறுவர் நாடகம் -ஓர் நோக்கு

## நேர்காணல்

* 'இசைத்தென்றல்' எம். யேசுதாசன்

## சிறுகதைகள்

* நம்பிக்கை வெல்லும்
* மேட்டுநிலத்தில ஒரு பழங்களஞ்சியம்
* இருட்டுகள்

## இதர . . . .

* இறைமகன் பிறப்புவிழாவின் இனிய செய்திகள்
* பல்கலைவேந்தர் சில்லையூர் செல்வராசன் நினைவாக
* 'சுபமங்களா' கோமல் சுவாமிநாதனுக்குஅஞ்சலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமுகம்

## KALAIMUGAM

காலாண்டு இதழ்

1995
ஐப்பசி- மார்கழி
கலை - 6
முகம் - 4

தொடர்புகளுக்கு :

Centre For Performing Arts
Hotel Imperial
14/14 A-1 Dupilication Road
Colombo-4
Sri Lanka.

திருமறைக் கலாமன்றம
238, பிரதான வீதி
யாழ்ப்பாணம்
இலங்கை


# வணக்கம்

அன்று-
நிறைமாதப் பெண் மரியும்
கறை வாழாத் துணை வளனும்
இடம் தேடினார்கள்,
இறைவனின் வருகைக்கு!
கிடைத்ததோ
மாட்டுத் தொழுவம்!
பாவம்! அவர்கள் அகதிகள்!
அரசகோபம் வெடித்தபோது
அயல்நாட்டுக்குஓடினார்கள்,
அகதிகளாகத்தான்.

இன்று-
அவள், மூன்று குழந்தைகளின்
தாய்,
கணவனை (அகால மரணம்!)
இழந்தவள்,
இடம்விட்டு இடம்பெயர்ந்து
வாழ்கின்றாள்.
வீடுவாசலைவிட்டு ஓடி
மாதங்கள்,இல்லை,ஆண்டுகள்
ஆகின்றன.
தனது இறுதி ஓட்டத்தில் ,
கதறியழும் பாலகருடன்
களைத்து இளைத்து,
சோர்ந்து துவண்டு,
நடுங்கி நலிந்து,
தள்ளாடித் தடுமாறி, வீழ்ந்தாள்
ஓர் அகதிமுகாம் வாயிலில்.
"ஐயா கொஞ்சம் தேத்தண்ணி
தாருங்கோ!
ரெண்டு நாளாய் தண்ணிகூடக்
கிடைக்கையில்லை,
தயவு செய்து கொஞ்சம் சுடச்சுடத்
தாருங்கோ!
எனக்குத் தாற தேத்தண்ணியிக்கை
....
சீனி போடாதையுங்கோ....கொஞ்சம்
நஞ்சு போட்டுத் தாங்கோ...."
அம்மா-
உயிர் உள்ளவரை உறுதியை
இழக்காதே!
உனக்கு மட்டுந்தானா இவ்வாழ்வு?
அமைதியைத் தரவந்த அண்ணலும்
அகதியாக இருந்ததை
நினைவில் கொள்

பேராசிரியர் நீ.மரிய சேவியர் அடிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதம் மலர்ந்திட வேண்டும்

மண்ணில் மனிதம் மலர்ந்திட வேண்டும். மனித மாண்பு உயர்ந்திடவேண்டும். இந்த உயரிய நோக்கை உயிர் பெறச் செய்ய பிறந்தது குழந்தை ஒன்று.

*''பூவுகில் நல்மனத்தோர்க்கு அமைதி உண்டாகுக''*

என்ற சமாதானச் செய்தியை அது சுமந்து வந்தது. நீதி என்ற அத்திவாரத்தில் சமாதானம் என்ற கட்டிடத்தைக் கட்டப்பணித்தது. நீதி இன்றி அமைதி, சமாதானம், சகவாழ்வு, சகோதரத்துவம் கட்டி எழுப்பமுடியாது என்பதை ஆணித்தரமாக எடுத்துச் சொன்னது. இந்த உண்மையை இசையாஸ் என்ற இறைவாக்கினர் பறைசாற்றுவதை நாம் குறைவறப் புரிந்துகொள்ள வேண்டும்.

*''நேர்மை பாழ்வெளியில் குடிகொள்ளும்*
*நீதியானது செழிப்பான வயல் வெளியில் வீற்றிருக்கும்*
*நீதியால் விளையும் பயன் சமாதானம்;*
*நீதியின் பயன் அமைதியும்*
*என்றென்றும் நீடிக்கும்*
*அச்சமில்லா வாழ்வுமே.*
*சமாதானமான இருப்பிடத்திலும்*
*அச்சமறியாத் கூடாரங்களிலும்*
*அமைதி நிறைந்த இல்லங்களிலும்*
*நம் மக்கள் குடியிருப்பார்கள்''*
(இசை 32: 16-18)

பகைமுகில் மூட்டங்கள், போர் முழக்கங்கள் அச்சம், அவலம் இவைகளுக்கு அகப்பட்டுப் போன மனிதம். இந்த இடிபாடுகளிலிருந்து மனிதம் மீட்புபெற வேண்டின் நீதி என்ற அத்திவாரத்தை நாம் உறுதியாகச் செப்பனிடப்பட வேண்டும். மனிதனுக்கு மனிதன் தாழ்ந்தவனல்ல. சரிநிகர் சமானமானவன். இந்த எண்ணக்கரு, திண்ணமாக, வண்ணக்கோலம் போடும்போதுதான் மண்ணில் சமாதானம் பிறக்கும்.

அகதிமுகாம்களிலும், வீதிகளிலும், மரநிழல்களிலும், காகக்கூட்டில் பொரிக்கப்பட்ட குயில்குஞ்சுகளையும் விட அல்லலுற்று ஆற்றாது அழுது புலம்பும் மக்களுக்கு ஆறுதல் தருவது இந்த நீதிதான்

நாளைய பொழுது எப்படி விடியும் என்ற ஏக்கம் நெஞ்சில் இருக்கும்வரை, எத்தனை சமாதானப் புறாக்களை விண்ணில் பறக்கவிட்டாலும், அவை கண்ணில் மண்ணைத் தூவித்தான் செல்லும். மக்களை வழிநடத்து பவர்கள், தலைவர்கள் நல்ல மேய்ப்பர்கள் போல விளங்க வேண்டாமா?

ஒரு நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளைப் பசும் புற்றரையில்மேய விடுகிறான். நீரோடையில் தண்ணீர் காட்டுகிறான். முறிந்த ஆட்டுக்கு கட்டுப்போடுகிறான். நோயுற்ற ஆட்டுக்கு மருந்து கொடுத்துக்குண மாக்குகிறான். காணாமல் போன ஆட்டைக்கண்டு பிடிக்கிறான். வழிதவறிய ஆட்டை வழிக்கு கொண்டு வருகிறான். குழியில் விழுந்ததைத் தூக்கிவிடுகிறான்.

கள்வரிடமிருந்தும், கொடிய விலங்குகளிடமிருந்தும் அவற்றைப் பாதுகாக்கிறான். அவை அச்சமின்றி அமைதியுடன் உறங்க வழிசெய்கிறான்.

*''நானே நல்ல மேய்ப்பன்''*

என்று கிறிஸ்து ஒரு நீதியின் தலைமைத்துவத்தை முன்மொழிந்தார். நீதி இல்லாத இதயம் மிகக் கடினமானது. புண்ணுக்கு புனுகு தடவுவது நீதியாகாது. இதனால் உருவாகும் வேதனை மிகவும் ஆபத்தான விளைவுகளையே கொண்டுவரும்.

போர்கள் எமக்குப் புதிதல்ல. மரணங்களும், அவலங்களும், துன்பங்களும் புதிதல்ல.. பசி, பட்டினி, பிணி இவைகளும்புதிதல்ல. இவை கடந்த கால உலகின் வரலாற்றுப் பக்கங்களை நிரப்பியுள்ளன என்பதும் புதிதல்ல. எதுபுதுமை? எது புதிது? இந்த துன்பங்கள் எதிர்காலத்திலும் இடம் பெறாமல் இருப்பதே. இதுவே இன்று எமக்கு முன்னுள்ள சவால். நீதி என்ற வித்து இதயவயல்களில் விழுந்து முளைத்து, செழித்து வளர ஆவனசெய்வதே புதுமை, புரட்சி. நல்மனதுடையோர் அனைவரும் இதற்காகத் தங்களை இதயசுத்தியோடு அர்ப்பணித்து வாழத்தயாராக வேண்டும். தியாகங்கள் இல்லாமல் உயர்ந்த மனித இலட்சியங்கள், வெற்றி பெறமுடியாது. இதில் விட்டுக்கொடுப்பனவுக்கு இடமிருக்காது.

**ஜெயந்தி யேக்கப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதத்துவப் போரின் முதல் மாவீரன்



ம. சாம்பிரதீபன்

"வார்த்தை மனுவுருவானார்" இது யேசுவின் பிறப்பைச் சுட்டிநிற்கும் விவிலிய கூற்றாகும். இறைவனின் திருவார்த்தை மனித உருக்கொண்டு உலகிற்கு வந்தது .இதை நாம் இன்று ஒளிவிழா, நத்தார், யேசுவின் பிறப்புவிழா, கிறிஸ்மஸ் எனப் பல பெயர்களில் கொண்டாடுகின்றோம் .அன்று ஒதுக்குப்புறமான மாட்டுத் தொழுவிலே ஆடுகளினதும் மாடுகளினதும் சலமும் சாணமும் துர்நாற்றம்வீச பழைய துணிகளிடையே சுற்றப்பட்டு சூழ நின்ற குளிரின் இடையேயும் வைக்கோல் கந்தைகளின் சிறிய கணகணப்பில் அவதரித்த இறை மகனுக்கு இன்று கோலாகலமான விழாஎடுப்பு.

நத்தார்பண்டிகையின் களை எடுப்புகள் உலாவரத்தொடங்கிவிட்டால் வீசும் காற்றிலும் அதன் மணம் கலந்துவிடும். சவுக்கு மரங்கள் சிலவற்றிற்கு பாசக்கயிறு எறியப்படும். கசாப்புக் கடைமுதல் நகைமாளிகைவரை அலங்கார சோடனைகள், வாழ்த்து மடல்கள் வண்ணவண்ணமாய் தொங்க விடப்படும். தத்தம் வசதி நிலைக்கேற்ப மணல்வெளி, புற்றரை, பஞ்சுமெத்தை என சகல இடங்களிலும் பாலன் சொரூபங்கள் நவீனரக மின் விளக்குகள்.

மண்ணுலகில் அவதரித்த இந்த தேவமகனுக்கு இத்துணை வரவேற்பு விழா எடுக்கும் நாம் அவரின் வாழ்வுப் பின்னணியை, கொள்கைகளை, தத்துவங்களை, மாதிரிவாழ்வை எந்தளவிற்கு உள்வாங்குகின்றோம். மனுவுருவான அந்த "வார்த்தை" வெறும் வார்த்தைகளை மட்டும் பேசவில்லை. அந்த வார்த்தைகளின் பின்னால் உறங்கிக்கொண்டு இருக்கும் மனிதத்துவத்தைப் பேசுகின்றது. இயேசு சமூகம் என்னும் கருவூலத்தில் பல விதமாக தம்மை, தம்வார்த்தையை உருமாற்றிக் காட்டுகின்றார். ஒரு தனி மனிதனாக, ஒரு இளைஞனாக, தாயாக, தந்தையாக, சோதரனாக, நண்பனாக, அரசியல் ஆசிரியனாக, தத்துவாசிரியனாக, பொருளியலாளனாக, சமூகவியலாளனாக, போராளியாக இன்னும் பலபல வெட்டுமுகங்களில் தோன்றி நம்முடன் பேசுகின்றார்.

கிறிஸ்துவின் வார்த்தைகள் உயிருள்ளது என கூறப்படுகின்றது. இதையிட்டு நாம் ஏதாவது சிந்தித்திருக்கின்றோமா? எது எப்படி உயிருள்ளது? ஒருவனுடைய பிரச்சனைக்கு இறைவார்த்தை ஒன்று நிச்சயமாகஅவனுக்கு பதிலளிகின்றது. ஆயினும் அதே வார்த்தை இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அவனது வேறு பிரச்சனைக்கு அதற்கேற்ப பதில் தருகின்றது. வார்த்தை ஒன்று; ஆனால் அதனை எந்தப்பிரச்சனைக்காக தேடுகின்றோமோ அதற்கு ஏற்ப பதில் தரவல்லது .இதனால்தான் இது உயிருள்ளதாக இருக்கின்றது.

"மனிதன் என்பவன் சமூக வாழ்க்கையை மேற்கொண்டு விட்ட ஒருமிருகம்" என்கின்றார் ஒரு மேற்கத்தைய அறிஞர்; இந்த மனிதனை மையப்படுத்தியதாகவே உலகில் பல எண்ணக்கருக்களும், சித்தாந்தங்களும், மொழி, மதம், பண்பாடு போன்ற சகலதும் அமைகின்றன. மனிதன் இருக்கும் இடங்களில் பிரச்சனை என்பது தவிர்க்கமுடியாத தொன்றாகிவிடவே அவற்றிற்கு ஓரளவேனும் தீர்வுகாண முற்படும் பொழுது நடைமுறைகள்முளைவிடத் தொடங்கின எனலாம்.

இன்றைய காலகட்டத்தில் எம் மண்ணின் மனித சமுதாயத்தை எடுத்து நோக்குவோமானால் பிணக்குகளையே எம்வாழ்வுக்கு அத்திவாரமாக்கிக் கொண்டு ஆட்டம் கண்டு கொண்டிருக்கும்இன்றைய மனிதன் சிந்தனைப் பெருக்கினாலும்,அறிவியல் முதிர்ச்சியினாலும், விஞ்ஞான அழுத்தங்களாலும் அறிந்தோ அறியாமலோ மனிதத்துவத்திற்கு கல்லறை அமைத்துவிடுகின்றான். மனிதனுக்காகவே மதங்கள் தோன்றின. எனவே மனிதனை ஆக்கிரமித்துள்ள ஒவ்வொரு பிரச்சனைகளும், பிணக்குகளும் மத ரீதியிலும் அவனைத் தாக்குகின்றது. இந்த வகையில் இம்மண்ணில் சமூக, அரசியல், பொருளாதாரச் சிக்கல்களுக்கு கிறீஸ்தவ ரீதியில் விடுவிப்பு எப்படி என்பதை சிந்திப்பது நல்லது.

ஆதிக்கிறீஸ்தவர்கள் ஒரே குழுமமாக வாழ்ந்தார்கள். சொத்துக்களை விற்று பொது உடமையாக்கி ஒன்றாக செபிப்பதிலும் ஒன்றாக உணவு உண்பதிலும் இறைமகன் காட்டிய அன்பு வாழ்வை யதார்த்தமாக்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருசிறிய வட்டத்துக்குள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவு கிறீஸ்தவர்கள் இவ்விதம் வாழ்ந்ததாகக் கூறப்படும் வரலாறு பல்கிப் பெருகி பெருந் தொகையாக திக்கு திசைகளில் பரவிவாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய கிறீஸ்தவ உலகுக்கு சொல்லும்செய்தி என்ன? அவர்களின் வாழ்வை இன்றைய வாழ்வோடு ஒப்புநோக்குவது எந்தளவிற்கு பொருத்தமானது என்பதனை நாம் சிந்திக்கவேண்டும்.

இலத்திரனியல் யுகத்தில் இன்று பூமி சுழன்றுகொண்டிருக்கும் வேளையில் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளைக்கொண்டு வீறு நடைபோடும் மனித இனத்தின் புதிய போக்கின் வளர்ச்சி; கடவுள் என்ற ஒன்று உண்டா இல்லையா என்ற சர்ச்சையை கூட கடந்து அவ்விடயத்தைத் தொடுவதற்கும் அவகாசம் கொடுக்கப்படாத அளவிற்கு பரிணாமத்தின் வேகமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. இத்தகைய காலகட்டத்தில் எம்மத்தியில் ஆதிக்கிறீஸ்தவ வாழ்வு முறை ஓரளவிற்கு மட்டுமே பொருந்து மெனினும் அதன் காத்திரத் தன்மையைப்புரிந்து கொள்வதன்மூலமும் உள்ளங்களில் அப்பகிர்வு, அன்பு ஏற்படவாய்ப்பு உண்டு. இங்கு ''உன்னிடம் மேலாடையைப்பறிப்பவனுக்கு உன் உள்ளாடையையும் மறுக்காதே" என்ற இறைவார்த்தை எதையோ சொல்ல முனைகிறது. இதன் கருத்து ஒருவன் கேட்பவற்றைவிட மேலதிகமானவற்றை நீ கொடு என்பதல்ல. மாறாக ஒருவனின் தேவையை அறிந்து அதன்படி பகிர்வு நடைபெறவேண்டும் என்பதையே இது குறிக்கின்றது. அதாவது ஒருவன் மேலாடையைக் கேட்கின்றான் என்றால் அம்மேலாடையை அணிவதற்கு உள்ஆடையும் அவசியம் என நாம் உணர்ந்து அத்தேவைக்கு உதவுதல் பொருந்தும். இங்கு தேவை நிறைவு செய்யப்படும்போது ஒரு ஆதிக் கிறீஸ்தவ பண்பினை நாம் தொட்டுவிடுகின்றோம். ஏதோ கேட்டு விட்டானே எப்படி இல்லை என்று மறுப்பது என்பதற்காக கேட்டவற்றைமட்டும் கொடுத்து அதிலிருந்து நழுவிக் கொள்வது என்பது தவறானதாகும். ஒருவன் கேட்டதை அவனது தேவையோடு நிறுத்துப்பார்த்து நிறைவு செய்வதில்தான் உண்மையான நிறைவு தங்கியுள்ளது.

ஒரு சந்தர்ப்பத்தில் யேசு யெருசலேம் தேவாலயத்தில் வணிகம் செய்த வியாபாரிகளை கலைத்து அடிக்கின்றார். ''உன்னைப்போல் உன் அயலானை அன்பு செய்," ''உன் சகோதரனை ஒருமுறையன்று ஏழு எழுபது முறையும் மன்னிப்பாயாக" என்று கூறிய இறைமகன் இவ்வாறு தன்வார்த்தைக்கு புறம்பாக தானே நடந்து கொண்டதன் விந்தை என்ன? என நாம் பார்த்தால்; அங்கு அவர் தம் செய்கையால், நமக்கு ஒரு செய்தியைத் தருகின்றார். யேசு இவ்விதம் நடந்து கொண்டமை ஒரு பயங்கரவாதம் என கூறிக்கொள்ளலாமா? அல்லது அது ஒரு சர்வாதிகாரப் போக்கா எனப்பார்த்தால் தன் தந்தையின் இல்லத்தை வாணிபக்கூடமாக்குகிறார்களே என உள்ளங்கொதித்த யேசு உள்ளெழுந்த உணர்வால் உந்தப்பட்டு ஒரு நன்மையை செய்யவிளைந்தது பயங்கரவாதமோ அல்லது சர்வாதிகாரமோ அல்ல. நீதியின்பால் அவர் செயல் இப்படி இருந்தது. 'காற்று' என்பது உயிர் வாழ அவசியமான ஒன்றாகும். இது நாம் அனைவரும் அறிந்ததே. இந்தக்காற்று எல்லா இடங்களிலும் இருந்தபோதிலும் நாம் காற்று வாங்க கடற் கரைக்குத்தானே செல்கின்றோம். அங்கு காற்றின் பரிமாணத்தை சற்று அதிக அளவில் உணர்வதால் ஏற்படும் உளரீதியான திருப்தியே இதற்கு காரணமாகும். அதேபோல் கடவுள் எங்கும் தரிசனமாகி இருக்கின்ற போதிலும் ஆலயம் என்பது சற்று அதிக மான பக்தி உணர்வை ஏற்படுத்தும் வகையில் விசேடமாக இறைவனுக் கெனஅமைக்கப்பட்டு புனிதமும் அமைதியும் பேணுகின்ற ஒரு இடமாகும். அதற்கு அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் அவற்றுக்குரிய பண்புகளோடு கடைப்பிடிக்க வேண்டும். எனவே யேசு தனக்கு உரிமையான தன் வார்த்தை யைக்கேட்டு தந்தையை விசுவசிப் பவர்களுக்கு உரிமையான அந்த ஆலயத்தை மாற்றார் மாசுபடுத்துவதை பொறுக்கவில்லை. அதனால் உரிமைக்கு குரல்கொடுத்தார்; அதற்காக தனிமையாகப் போராடினார்; சினந்து கொண்டார். இது தவறல்லவே.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் சமூக வாழ்வின் வேறொரு கோணத்திலிருந்து யேசு பதில் தருகின்றார். பாழ்வெளியொன்றில் யேசுவின் போதனையைக் கேட்க மக்கள் திரள் கூடுகின்றது. இம்மக்களில் ஆண்கள்மட்டும் ஐயாயிரம் பேராகும். இவர்களிற்கு யேசுதமது போதனையைப் போதித்துக் கொண்டிருந்தார். மாலை நேரமானதும் அவர்களுக்கு உணவு வழங்க வேண்டிய தேவை ஏற்படவே அங்கு கைவசமிருந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் அந்த மக்களுக்கு பங்கிடவே அனைவரும் வயிறார உண்டு மிகுதியும் சேர்க்கப்பட்டது. இங்கு யேசு தம்மை ஒரு பொருளியலாளனாகக் காட்டிக் கொள்கிறார். பொருளாதாரவளங்கள் பற்றியும், அவற்றின் அருந்தல் தன்மை பற்றியும் கூறும் பொருளியல் நோக்குகளை அன்றே இறைமகன் நோக்கியிருக்கின்றார். மனித தேவைகளோடு ஒப்பிடும் போது வளங்கள் பற்றாக் குறையாகவே காணப்படுகின்றன. எனவே வரையறுக்கப்பட்ட வளங்களைக்கொண்டு வரையறையற்ற மனிததேவைகள் நிச்சயமாக ஈடு செய்யப்பட வேண்டியவையாகும் என்பதனை அவர் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் பகிர்வதன்மூலம் எடுத்துக்காட்டுகின்றார். ஆகவே வளங்களின் பங்கீடு என்பது மிக அவசியமானது என அவர் இதன்மூலம் வலியுறுத்துவதை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது.

20ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை தன் கால்களை அகலப்பதித்து வந்த 'கார்ல்மாக்ஸ்' இன் பொதுவுடமைக் கொள்கை தனி மனிதன் சொத்துக்களை வைத்திருத்தலாகாது. சகலதும் பொதுவுடமையாக்கப்பட வேண்டும் என்ற அவரது முழக்கம் மேற்குறித்த காலப்பகுதியின் பின் தன் குரலை உயர்த்த முடியாது அமிழ்ந்து போனது. இது அறிவியலாளர்களாலும்; புத்தி ஜீவிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுக் குறிப்பாகும். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முதலே யேசு கூறினார் ''உண்மையிலும் உண்மையாக உங்களுக்கு சொல்லுகின்றேன் பணக்காரன் விண்ணரசில் நுழைவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது" என்று, இங்கு அவர் இடித்துரைத்து கூறுவது என்ன வென்றால் செல்வம் ஓரிடத்தில் குவிதல் ஆகாது என்பதாகும். அதாவது சொத்துக்கள் மனிதனுக்கு உதவவேண்டும். அவை பங்கீடு செய்யப்படவேண்டும். தனிமனிதன் தனது தேவைக்கு அளவாக சொத்துக்களை வைத்திருக்கலாம். ஆனால் மிகுதியானவை மறு பங்கீட்டுக்கு உட்படுத்தப்படவேண்டும், என்பதையே யேசு இதன்மூலம் உணர்த்துகின்றார். பரம்பரை பரம்பரையாக பணக்கார வர்க்கத்திடம் செல்வம் குவிவதாலேயே பொருளாதாரரீதியில் வர்க்க வேறுபாடுகள் தோன்றுகின்றன. இதனைக் களைவதே யேசுவின் நோக்கமாக இருந்திருக்கின்றது. 'கார்ல்மாக்ஸ்'இன் கொள்கை நீரில் குமிழியாக நேற்றுத்தோன்றி இன்று மறைத்துவிடலாம் ஆனால் தன் வார்த்தைமூலம் யேசு வெளிப்படுத்திய கொள்கை இன்று 2000 ஆண்டுவரை மட்டுமல்ல இன்னும் எத்தனையோ ஆண்டுவரை நிமிர்ந்து நிற்கப் போகின்றது. ஏனென்றால் அவ்வார்த்தைகள் உயிருள்ளது.

"இச்சின்னஞ்சிறுவரில் ஒருவருக்கு நீங்கள் செய்வதெல்லாம் எனக்கே செய்கிறீர்கள்".

''சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத்தடுக்க வேண்டாம் ஏனெனில் விண்ணரசு அவர்களதே "

''குழந்தை உள்ளங்கொண்டவர்களாக மாறாவிட்டால் நீங்கள் விண்ணரசை சேர முடியாது" குழந்தைகள் பற்றி யேசு கூறிய வார்த்தைகள் இவை. யேசு குழந்தைகள்மட்டில் அதிக அக்கறை உடையவராக இருந்தார். காரணம் எதிர்கால சமுதாயத்தின் வளர்ச்சி இவர்களின் கைகளையே நம்பியுள்ளதால் அவர் தூரநோக்கில் இவர்கள்பால் அப்படி ஒரு பற்றுதலைக் கொண்டிருந்தார். இன்றைய குழந்தைகளே நாட்டின் நாளைய தலைவர்களாகவும், அறிஞர்களாகவும். ஆய்வாளர்களாகவும், வழிகாட்டிகளாகவும் ஆசான்களாகவும் விளங்கப் போகிறவர்கள். எனவே இவர்களிடம் மனிதத்துவ மனித நேய விதைகளை விதைப்பதில் அவர் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். மேலும் மழலைகளின் உள்ளம் வித்தியாசமான ஒருபார்வையைக் கொண்டிருக்கும். கள்ளம், கபடம், பொய், காமம், போட்டி, பொறாமை, பழிவாங்கும் தன்மை போன்ற பலவிதமான இழிகுணங்களும் அவர்களிடம் காணப்படாதது குறிப்பிடத்தக்கது. இத்தகைய வெள்ளை உள்ளங்களையே இறைவன் விரும்புவதால் குழந்தை உள்ளம் உடையவர்களே விண்ணரசுக்கு தகுதியுள்ளவர்கள் என அவர் கூறுகின்றார் இருந்தும் சிறார்கள் செய்யும் குறும்புகள்; இன்னதென்று அவர்கள் அறியாமல் செய்வதொன்றாகும். இவை பாவமாகாது. அறியாமல் செய்யும் பிழைகள் எத்தனையாயினும் அவற்றை மன்னிக்க இறைவன் சித்தம் கொண்டிருக்கின்றார். என்பதே இதன்மூலம் புலப்படுவதொன்றாகும். மழலை உள்ளங்களின் இத்தகைய களங்கமற்ற பார்வை இறைசாயலை வெளிக்கொணர்வதாக அமைகின்றது. அதாவது குழந்தை உள்ளம் கொண்டவராகவே இறைவனும் இருப்பதாலேயே "இச்சின்னஞ் சிறுவரில் ஒருவருக்கு நீங்கள் செய்வதெல்லாம் எனக்கே செய்கிறீர்கள்"என்று ஆணித்தரமாகக் கூறுகின்றார். ஒருமுறை யேசு தம் சீடரை நோக்கி "அன்புக்குழந்தைகளே இன்னும் சிறிது காலமே நான் உங்களோடு இருப்பேன்....." என்று கூறுவதை அருளப்பர் நற்செய்தியில் காணக் கூடியதாக உள்ளது. யேசு இவ்வாறு "அன்புக்குழந்தைகளே" என்று தம் சீடரை அழைத்தமைக்கு வலுவான நியாயப்பாடு உண்டு. ஏனெனில் அவரின் சீடர் தம் அழைப்பை ஏற்று தம்முடைய அனைத்தையும் துறந்து அவரைப்பின் தொடர்ந்தார்கள். இறைவனுக்கு பிரமாணிக்கமாய் இருந்தனர். அவர்களின் உள்ளங்களில் தீயனவற்றின் தாக்கங்கள் இருந்திருக்கவில்லை. இதனால் உள்ளத்தின் ஆழத்தில் குழந்தையைப் போலிருந்த அவர்களைப்பார்த்து யேசு இப்படி அழைத்ததில் வியப்பொன்றும் இல்லைதான்.

இன்றைய சமகாலப் பின்னணியில் இச்சிறுவர்களின் நிலைப்பாடு என்ன? பெரியவர்கள் குழந்தை உள்ளம் கொண்டவர்களாக மாறுவதற்குப் பதிலாக அம்மழலைகளுக்கு ஒவ்வாத சமூக சீர்கேடுகளைத் திணித்து வருகின்றோம். அடுத்த வீட்டவருடன் சண்டையிட்டுக்கொண்டு அதன் விஷமத் தன்மைகளை எமது குழந்தை களுக்கும் ஊட்டி அடுத்த வீட்டாருடனான குழந்தையின் உறவையும் துண்டித்து விடுகின்றோம். அவன் அந்த சாதி, இவன் இந்தசமயம், அவன் அப்பிடி, இவளிடம் போனால் கெட்டுவிடுவாய், அவனுக்கு விட்டுக் கொடுக்காதே, இவன் யாரு உனக்குச்சொல்ல? இப்படியான சாக்கடை நீரில் குழந்தைகளையும் நீராட்டி அவர்களிடம் வன்மத்தை வளர்த்து விடுகின்றோம். நஞ்சு கொடியது எனக்கூறும் பெற்றோர் பெரியோராகிய எமது அறிவுரை வழிகாட்டல் நஞ்சைவிட கொடியதாக இருக்கின்றது. எனவே குழந்தை உள்ளங்களில் கிறுக்கல் விழாதபடி காப்பது எம் ஒவ்வொருவரினது கடமையாகும். நாமும் குழந்தையாக மாறவேண்டும் என்பதே யேசுவின் ஆவலும் அவாவும் ஆகும்.

ஜெஸ்தமனி தோட்டத்திலே யேசு தந்தையை பார்த்து ஜெபித்தார். இந்த ஜெபத்தின் மூலம் தனது ஆன்மீக, மனிதத்துவ யுத்தத்துக்கான பயிற்சியினை அவர் மேற்கொள்ளுகிறார். மனத்துணிவும் கீழ்ப்படிதலுமே அவரது போராட்டத்துக்கான வலிமை மிக்க ஆயுதமும் பயிற்சியுமாகும். "ஒருமணி நேரம் என்னுடன் விழித்திருக்க உங்களால் முடியவில்லையா?" என்று தம்சீடரைப்பார்த்து யேசு கேட்கின்றார். துரோகி காட்டிக் கொடுக்க வருகின்றான், யுத்தப்பயிற்சியை யேசுமுடித்துவிட்டார். எதிரிகளின் வரவு அண்மித்துவிட்டது. விழிப்பாயிருங்கள் மனிதத்துவ மீட்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்திற்கு என யேசு அவர்களைத் திடப்படுத்துகின்றார்.

மனிதத்துவம் புதைக்கப்பட்ட இந்த மண்ணிலே அதை மீட்டெடுப்பதே யேசுவின் முக்கிய பணியாக விளங்கியது. அதற்காக அவர் ஒரு நீதியான, சமாதானமான யுத்தம் ஒன்றை அன்று ஆரம்பித்தார். 12 சக போராளிகளுடன் ஆரம்பித்த இந்த மனிதத்துவ மீட்பு யுத்தமானது, பல நெருக்குதல் மத்தியிலும் தன் பாதையிலும் திடகாத்திரமான பயணத்தைத் தொடர்ந்தது. இந்த யுத்தத்தின் தேவைபற்றி அங்கு அவர் பிரச்சாரத் தொனியில் கூட பல கருத்தரங்குகளை நடத்தியுள்ளார். மலைப்பொழிவுகள், உவமைகள், புதுமைகள, அருங்குறிகள் வழியாக.

மனிதத்துவத்துக்கான விடுதலைப் போராட்டத்தின்ஒரு கட்டத்தில் அக்கால அரசியல்வாதிகளால் கைது செய்யப்பட்ட யேசு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுகின்றார். கேள்விக்கு மேல் கேள்விகள், வசைக்கு மேல் வசைகள், குற்றச் சாட்டின் மேல் குற்றச்சாட்டாக நீண்டவிசாரணை அவர்மீது தொடுக்கப்பட்டது. சமுதாய சாக்கடையில் இருக்கக்கூடிய போலிமுகமூடிகளான சிலரால் அவர் இந்நிலைக்கு தள்ளப்பட்டார். சக போராளி யூதாஸ் துரோகியாக மாறினான். இராயப்பர் கட்சி மாறினார், மறுதலித்தார், இவ்வளவிற்கும் யேசு விசாரணையில் உறுதியுடன் பதில் தருகின்றார். தன் கொள்கையில் இறுக்கமாகவே இறுதிவரை நின்றிருந்தார். கடைசித்துளி இரத்தத்தையும் மனிதத்துவ விடுதலைக்காக சிந்த தயாராக நின்றார். அதிகமான குற்றச்சாட்டு கேள்விகளுக்கு மௌனமாக இருந்த அகிம்சைவழியில் தன் எதிர்ப்பைத் தெரிவித்த அவர்; ஒரு சந்தர்ப்பத்திலே அக்கால அரசியல் தலைவன் ஒருவனின் கேள்விக்கு தகுந்த பதில் ஒன்றை தருகின்றார். பதில் சொல்லிமுடியவும் இன்னொருவன் அவர் கன்னத்தை தன்கைகளால் பதம் பார்க்கவும் சரியாக இருந்தது. "தலைமைக்குருவுக்கு இப்படியா தட்டிப் பதில்சொல்வது" அவர் கன்னத்தில் அறைந்ததற்கு அவன் காட்டிய காரணம் இது: "ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறுகன்னத்தையும் காட்டு" என்று கூறிய இறைமகன் கேட்கின்றார் அவனிடம் ஒரு கேள்வி!

"நான் சொன்னது தவறென்றால் எது தவறென்று காட்டு. சரியென்றால் ஏன் என்னைஅடித்தாய்" அந்நியனான முறையில் எவனும் தண்டிக்கப்படலாகாது என்பதனையே அங்கு அவர் சுட்டிக் காட்டுகின்றார். நீதியற்ற முறையில் தண்டனை வழங்கப்படும் போது நாம் எமது கன்னங்களை மாற்றி மாற்றி காட்டியபடி இருப்பதால் அவர் சொன்னதன் பொருள் மாறாக தண்டனைக்கான காரணத்தை அறிந்து அது நீதியானதெனில் எமக்குரிய தண்டனையைப்பெற நாம் தயாராக இருக்கவேண்டும். அநீதி யானதெனின் அதை உரிய வகையில் உணர்த்த வேண்டும். இதுவே "மறுகன்னத்தைக் காட்டு" என்பதன் உள் அர்த்தமாகும்.

இத்தகைய இந்த விடுதலைவீரன் எதிரிகளால் தாக்கப்பட்டு, உடைக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு, கீறி கிழிக்கப்பட்டு, நெரித்து உரிக்கப்பட்டு வஞ்சம் தீர்க்கப்படுகின்றார். இறுதிவேளையிலும்அவ்வீரன்"இவர்கள் அறியாது செய்கின்றார்கள், இவர்களை மன்னியும்" என தந்தையை வேண்டி தன் மனித நேயக்கொள்கைக்கு உயிர்கொடுத்து அச்சிலுவை மரத்திலே வீர மரணமடைகின்றார். இயற்கை அழுதது, அன்றைய மானுடம் சிரித்தது, பூமி ஒருகணம் அதிர்ந்தது; மனிதத்துவப் போரில் முதல் மாவீரன் யேசுவின் இறப்பால், அவரது இறப்பால் சிலுவை உயிர்பெற்றது. அது விடும் மூச்சில் இருந்து பலமுறைகள் வெளிவந்து இன்றுவரை ஆன்மீக யுத்தம் எத்தனையோ யுகங்களை தாண்டிய நீண்ட யுத்தமாக நடைபெறுகின்றது. யேசு அன்று புதைக்கப்படவில்லை விதைக்கப்பட்டார். அதனால்தான் சின்னப்பர் என்றும் முடியப்பர் என்றும் எத்தனையோ ஆன்மீக போராளிகள் அவரது புனித கல்லறையில் இருந்து முளைவிட்டு இன்று பரிசுத்த பாப்பரசர், ஆயர் குழுக்கள் எனஇவ்யுத்தம் உலகளாவிய ரீதியில் நடைபெறுகிறது.

அன்று மனிதர்களிடம் கையளிக்கப்பட்ட யேசு இன்றும் மனிதராகிய எம் ஆக்கிரமிப்பில் இருந்து விடுபடவில்லை. எம் செயல்கள் ஒவ்வொன்றும்அவருக்கு கசையடியாக, முள்முடியாக,ஈட்டியாக, ஆணியாக சித்திரவதை செய்கின்றது. இத்தனைக்கும் பின்பும் "இவர்கள் அறி யாது செய்கின்றார்கள்....." அவரது இந்த வார்த்தை மனித விடுதலையை அவர் இன்றும் கைவிடாமல் உறுதியாக நிற்பதைக் காட்டுகின்றது. 20 நூற்றாண்டுகளாக நடைபெற்றுவரும்இவ்யுத்தத்தினை நாம் எப்பொழுது முடிவுக்கு கொண்டுவரப் போகின்றோம். எம் உள்ளங்களில் அன்பு,பகிர்வு, பணிவு ஒற்றுமை, தாழ்ச்சி போன்ற நற்குணங்கள் பெருகி உண்மையான மனிதத்துவத்தை உணர்ந்து முழுமனித ஆத்மீக விடுதலையை அடையும் போது இத்தனை நூற்றாண்டாக அவ்விடுதலைக்கு சிந்திய இரத் தங்களுக்கு நாம் புதிய பரிமாணத்தைக் கொடுப்பவர்களாக மாறுவோம்.

## நன்றி

எமது மன்றத்தால் நடாத்தப்பட்ட நாடக அரங்கியல் கண்காட்சிக்கு ஒத்துழைப்பும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த பாடசாலைகள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆலோசகர்கள், கருத்தரங்குகளை நடாத்தியோர், கலைநிகழ்வுகளை நடாத்தியோர் நலன்விரும்பிகள் மேலும் பல வழிகளிலும் உதவிய அனைத்து நல் உள்ளங்களையும் இதயமதில் நினைந்துஎமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமறைக்கலாமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையே வெல்லும்



செல்வி. டி. கவிதா

நத்தார்!

இன்னும் இரண்டு நாட்களில் வந்துவிடும். அக்கம்பக்கத்துப் பெரியவர்களோடு, சிறுவர்களும் நத்தாரையும் நத்தார் தாத்தாவையும் வரவேற்க ஆயத்தமாகிவிட்டனர். மரங்களினாலும், பெலூன்களினாலும் கிரேப் பேப்பரினாலும் தங்கள் வீடுகளை அலங்கரிக்க ஆரம்பித்துவிட்டனர்.

எனினும் ......

சிறுமி எலிஸபெத் வீட்டில் மட்டும் நத்தாரையோ, நத்தார் தாத்தாவையோ வரவேற்கக் கூடிய நிலையில் அவளோ, அவள் தாய் மார்கிரேட்டோ இல்லை.

காரணம் !

எலிஸபெத்தின் தந்தை ஜோன், கடந்த ஆறு வாரங்களாக பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றான்.

ஜோன், சாதாரணமான நாட்டாமை வேலை செய்யும் ஒரு கூலி.

எதிர்பாராத விதமாக, தள்ளுவண்டி பின்னோக்கி நகர்ந்ததால் அவன் காலொன்று நசுங்குண்டு காயமாகிவிட்டது.

ஜோனை ஆஸ்பத்திரிக்கு பார்க்க போவதற்கு பஸ் செலவுக்கே திண்டாட்டம். பெற்றோரின் கஷ்டநஷ்டங்களைப் புரிந்துகொள்ளும் மனநிலையில் எலிஸபெத் இல்லை.

சதா தன் தாயை நச்சரித்துக் கொண்டே இருந்தாள் எலிஸபெத். சிலவேளை தன் ஒரே குழந்தையை மார்க்கிரட் அதட்டினாலும் தன் அக்கம்பக்கத்து குழந்தைகள் கொண்டாட்ட வைபவ ஏற்பாடுகளில் மூழ்கி இருப்பதைக் கண்டு தன் மகள் எலிஸபெத்தும் ஆசைபடுவதில் தவறு என்ன என எண்ணிய மார்க்கிரட், தனது வறுமை நிலையை தன் குழந்தை அறியாதே என எண்ணிக் கலங்கினாள்.

"நமக்கு யேசு பிரான் தருவார்!" என தன் மகளுக்கு ஆறுதல் கூறி பல தடவைகள் சமாளித்துவிட்டாள். நாள் நெருங்க, நெருங்க "அம்மா! யேசுபிரான் நமக்கு புத்தாடை, பட்டாசு.. எல்லாம் தருவார்". நச்சரிப்பது அதிகமாகிக் கொண்டே வந்தது.

'நமக்கும் புத்தாடை, பட்டாசு எல்லாம் யேசுபிரான் தருவாரா? எப்போது தருவார்? " என்ற எலிஸபெத்தின் நம்பிக்கை வளர,வளர மார்க்கிரட்டின் நிலை தளர்ந்துகொண்டே வந்தது.

நாளை விடிந்தால் நத்தார். இரவு பன்னிரண்டு மணிக்கு சேர்ச்சுக்கும் போகவேண்டும். என்ன செய்வது, தனது ஒரே குழந்தையின் ஆவலை க்கூட நிறைவேற்ற இயலவில்லையே என ஆதங்கமுடன் மகளையும் அழைத்துக்கொண்டு மார்க்கிரட், மாலை கணவனைப் பார்க்க ஆஸ்பத்திரிக்குச் சென்றாள்.

கணவனைப் பார்த்தபின் மகளின் நச்சரிப்பையும் சொன்னாள். "கர்த்தர் தருவார்" என்று ஜோன் தன்னையறியாமலேயே சொன்னான்.

திடீரென்று அடுத்தக் கட்டில்காரர் ராஜமணியின் உறவினர் ஒருவர் வந்தார். அன்று பக்கத்துக் கட்டில்காரரர் நீண்ட நாட்களுக்குப் பின்னர் டிக்கட் வெட்டி வீட்டுக்குப் போகிறார். அந்த மகிழ்ச்சியை கொண்டாடும்முகமாக அவர் மகள் அந்த வார்டிலுள்ள அனைவருக்கும், அவரைப்பார்க்க வந்தவர்களுக்கும் நத்தார் பரிசாக துணிமணி பொட்டலங்களை வழங்கினார்.

அதில் ஜோன் , அவர் மனைவி மார்க்கிரட், மகள் எலிஸபெத்துக்கும் துணிமணி பொட்டலங்கள் கிடைத்தன.

பரிசு பொட்டலம் கிடைத்தவர்களில் மிகவும் மகிழ்ந்தவள் எலிஸபெத்தான்.

ஆம் ..அவள் இறைவன் தருவான் என்ற அசைக்க இயலாத உறுதியோடு இருந்ததால் , கர்த்தர் , அவருக்கு மட்டுமல்ல, அவள் பெற்றோருக்கும், மற்றோருக்கும் நத்தார் பரிசு கொடுத்தார்.

### கவனம்

நண்பனே
காதைக் கொடு
கவனம்
உனது சேட்

எனக்குத் தெரியும்
வானத்தில்
ஒரு
நிலவுபோல
உனக்கு
அந்தச்சேட்

தர்காலிகமாக
நீ
குந்திருக்கும் கதிரையில்
மற்றவர்கள்
இருந்து விடுவார்களோ
என்ற
அச்சத்தினாலா
உனது
அந்த
ஒரு சேட்டையும்
கதிரையில்
தொங்கவிட்டிருக்கிறாய்

நண்பனே
நீ
இழக்கப்போவது
உனது
கதிரையைமட்டுமல்ல
சேட்டையுந்தான்

இன்பராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைமகன் பிறப்பு விழாவின்
## இனிய செய்திகள்

கிறிஸ்து இயேசு இவ்வையகத்தில் பாலகனாய் வந்துதிந்த 'கிறிஸ்மஸ்' விழாவின் மகிழ்வில் உலகமே இணைந்து நிற்கும் இவ் வேளையில் இவ் விழாவோடு தொடர்புடைய இத் தகவல்களையும் அறிந்து கொள்ளுங்கள்

தொகுப்பு:
கி.செல்மர் எமில்

### CHRISTMAS ISLAND

இந்தப் பெயருடன் ஒரு தீவு அவுஸ்திரேலியாவுக்கு அருகில் உள்ள இந்தியப்பெருங் கடலில் உள்ளது .இத்தீவு 1615 இல் 'ரிச்சார்ட் ரோல் 'என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது . கண்டுபிடிக்கப்பட்ட தினம் கிறிஸ்மஸ் தினம் என்பதால் அதற்கு "கிறிஸ்மஸ் தீவு"என்றே பெயரிடப்பட்டது . இத்தீவு வெளியிடும் முத்திரைகளில் 'CHRISTMAS ISLAND என்று இருப்பதைக் காணலாம்

### SILENT NIGHT

கிறிஸ்மஸ் இரவின் இனிமையில் பரவும் (அமைதி இரவு) என்ற உலகப் புகழ் பெற்ற பாடல் முதன் முதலில் 1818 ஆம் ஆண்டில் ஒஸ்ரியா நாட்டின் குருவான வண. ஜோசவ் மோஹர். என்பவரால் எழுதப்பட்டது அன்று முதல் இன்றுவரை இப் பாடல் அகிலம் முழுவதும் இந்நாட்களில் மங்காப் புகழுடன் ஒளிக்கிறது .

### 'X' MAS

CHRISTMAS என்பதை நாம் ஆங்கிலத்தில் 'X' MAS என்றும் சுருக்கி எழுதுகின்றோம் அல்லவா? இது எப்படி வந்தது தெரியுமா? கிறிஸ்து என்பதின் முதல் எழுத்து X'MAS என்பதை கிரேக்கமொழியில் 'X' என்று எழுதினார்கள் . அதிலிருந்து தான் இச்சொல் தோன்றியது .

### வேறு பெயர்களிலும்...

நமது நாட்டில் கிறிஸ்தோதய தினத்தை 'கிறிஸ்மஸ் தினம்' என அழைக்கின்றோம். ஆனால் வேறு பல நாடுகளில் இத் தினம் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. ஸ்பெயினில் 'நேவிட்ட' என்றும், ஜேர்மனியில் 'வெய் நேக்ஷன்' என்றும், இத்தாலியில் 'டால்லே' என்றும், பிரான்ஸில் 'நோயல்' என்றும், ஸ்காட்லாந்தில் 'யூல்' என்றும் இதர மேலை நாடுகளில் 'பீஸ்ற் ஒவ் லைற் என்றும் அழைக்கின்றார்கள் .

### மாட்டுத் தொழுவத்தில் எழுந்த ஆலயம்

இயேசு நாதர் பிறந்த பெத்தலகேமில் ஏராளமான ஆலயங்கள் இருப்பினும் மிகவும் புகழ் பெற்றது. 'சேர்ச் ஒப் நேட்டிவ்' என்ற ஆலயமே. இது இறைமகன் பிறந்த மாட்டுத் தொழுவத்தின் மீது கட்டப்பட்டதாகும்.

### குடிலும் நட்சத்திரமும்

நத்தார் குடில்களில் தொங்கவிடப் படும்நட்சத்திரங்கள் இயேசுவின் பிறப்பின் போது அவரைத் தரிசிக்க சென்ற ஞானிகளுக்கு வழிகாட்டியாக அமைந்த விண் மீனைத் தான் குறிக்கின்றன .

### கிறிஸ்மஸ் குடில்

முதன் முதலில் 'கிறிஸ்மஸ் குடில்" அமைக்கும் வழக்கத்தை 1223 ஆம் ஆண்டில் புனித பிரான்சிஸ் அசிசியார் தான் அறிமுகப்படுத்தினார். அன்றிலிருந்து தான் கிறிஸ்மஸ் விழாவில் 'கிறிஸ்மஸ் குடில்" அமைக்கும் முறை நடைமுறைக்கு வந்தது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PIONSETTIA

நத்தார் தின இரவு ஒன்றில் சிறு குழந்தை ஒன்று அழுதுகொண்டிருந்தது குழந்தை இயேசுவுக்கு பரிசு ஏதாவது கொடுக்க வேண்டும் என்பதே அதன் ஆவல். அப்போது திடீரென தோன்றிய உருவமொன்று , கொடுக்கும் பொருளைவிட மனதிலுள்ள அன்பே பெரிதென கூறி பக்கத்திலிருக்கும் புதரிலிருந்த சில இலைகளை பறித்து எடுத்துச் செல்லுமாறு கூறியது. குழந்தையும் அவ்வாறே செய்தது. இயேசுவின் அருகே சென்றதும் பச்சை இலைகள் சிவப்பாக மாறியதாம். அன்றிலிருந்து தான் 'போயின் செற்றியா" (POINSETTIA) கிறிஸ்மஸ் ' மலர் எனஅழைக்கப்' படுகிறது.

## முதல் வாழ்த்து மடல்

கிறிஸ்மஸ் விழாவின் வாழ்த்துக்களை காவிச் செல்வதில் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. இதில் 1843 இல் இங்கிலாந்தைச் சேர்ந்த 'ஹென்றி கோல்" என்பவரால் தயாரிக்கப்பட்டது தான் முதல் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை என்றும், 1842 இல் லண்டனில் 16 வயதுச் சிறுவனால் தயாரிக்கப்பட்டது தான் முதல் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை என்றும் இரண்டு மாறுபட்ட தகவல்கள் உண்டு.

## பெயர் வந்தது எப்படி?

கிறிஸ்மஸ் என்ற பெயரினை வைத்தவர் யார் தெரியுமா? 'டேஸ்" என்னும் அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவரே இப்பெயரை வைத்தார். 'மாஸ்" என்ற ஆலயத் திருப்பலியைக் குறிக்கும் பெயரையும், கிறிஸ்மஸ் என்று இறைமகனின் பெயரையும் இணைத்தே இப் பெயர் உருவானது.

## கிறிஸ்மஸ் பரிசு

கிறிஸ்மஸ் நாளில் பரிசு கொடுக்கும் வழக்கம் எதிலிருந்து ஆரம்பித்தது தெரியுமா? இயேசு பிறந்த போது அவரை பார்க்கச் சென்ற மூன்று ஞானிகள் தூபம், பொன், வெள்ளைப் போளம் என்பவற்றை பரிசாக கொடுத்தனர் அல்லவா? அதிலிருந்து தான இவ்வாறு பரிசு கொடுக்கும் முறை ஆரம்பமானது.

## கிறிஸ்மஸ் மரமும் அலங்காரமும்

கிறிஸ்மஸ் மரத்தை சோடிக்கும் முறை பத்தாம் நூற்றாண்டில் இருந்து தொடர்கிறது. தற்போது போன்று அலங்கரிக்கும் முறையை ஏற்படுத்தியவர் அமெரிக்காவைச் சேர்ந்த 'அல்பிரட் கூக்கா" என்பவர் ஆவார்.

## கிறிஸ்மஸ் மரம்

கிறிஸ்மஸ் நாட்களில் ஆலயங்களிலும், இல்லங்களிலும் 'கிறிஸ்மஸ் மரம்" வைத்து அதனை வண்ண வண்ண மின் விளக்குகளாலும் சோடனைகளாலும் அலங்கரிக்கின்றோம் அல்லவா? இவ்வாறு கிறிஸ்மஸ் விழாவில் 'கிறிஸ்மஸ் மரம்" வைக்கும் நடைமுறை முதன் முதலில் 1605 இல் ஜேர்மனியின் 'ஸ்டிராஸ்பர்க்" நகரில் நடந்த கிறிஸ்மஸ் விழாவில் தான் தோன்றியது.

## நட்சத்திரக் கூடுகள்

நத்தார் நாட்களில் கிறிஸ்தவர்களின் இல்லங்களில் கண்ணைக் கவந்த வண்ணம், காட்சி தரும் நட்சத்திரக் கூடுகளை முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடு சுவிடன் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமாதானத்தோடு ஒரு சந்திப்பு

*[போர்ப்புயலில்
வீழ்ந்துபோன
சான்றோர் அவர்
ஒருநாள்
திருவாளர்
சமாதானத்தைச்
சந்திக்கின்றார்..
சல்லாபிக்கின்றார்]*

சான்: சமாதானமே
நீங்கள் தான்
எங்களுக்குச்
சகலமும்.
உங்களைச்
சந்தித்ததில்
எனக்குச் சந்தோஷம்
அதுசரி.....
எங்கள் தேசத்தில்
உங்கள் வாசம்
எப்போது?

சமா: இலங்கை
எனக்கு இனிக்கும்
அங்கு
வரத்தான் வேண்டும்
ஆனால்
வாயிற்கதவு?

சான்: திறப்பதார்?
இதுதானே
எங்கள்
திண்டாட்டம்.

இரு துருவங்கள்
இணையுமா?
நீரும் நெருப்பும்
நெருங்குமா?
புயலைக்கண்டு
தென்றல்
புன்னகைக்குமா?
தத்துவங்கள்
இப்படித் தாராளம்
ஆனால்
தக்க வழிதான்
தருவார் இல்லையே.

சமா: சமத்துவமும்
சமரசமும் தானே
சமாதானத்தின்
சந்நிதானம்.

சான்: சரியான வார்த்தை
ஆனால்-
இது
தெரியாதவர்கள் தானே
இந்தத்
தேசத்தில் அதிகம்

சமா இல்லை
எல்லாம்
தெரிந்தவர்கள்தான்
இந்த நாட்டில்
ஏராளம்.

என்றாலும்
சுயநலம்
சும்மா இராது
எதையாவது
சுரண்டிக்கொண்டே
இருக்கும்
இன விரோதமே
இலங்கை அரசியலின்
இதயபீடம்
இந்த மண்ணின்
'எயிட்ஸ்'
இதுதான்.

சான்: வருத்தம் நீங்க
வழிஎன்ன?
திருத்துங்கள்
இந்த தேசத்தை!

சமா: உன்னைப் போலவே
ஒவ்வொருவரும்
இந்த உண்மையை
ஏற்காத
எந்த நாடும்
இறந்துபோகும்.

பிரிவினைக்குக்
காரணம்
இந்தப் பிறப்பில்
நீங்கள் செய்த
கர்ம வினை.
இதுதான்
உங்கள் எதிரி.


சான்: உண்மைதான்.....
பகையை விட்டுவிட்டு
எதை எதையோ
பந்தாடுகின்றார்கள்.

சமா: வினையை
நீங்களே
விலக்குங்கள்.
விடியல்நான்
விஸ்வரூபம்
எடுப்பேன்!

**வாகரைவாணன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேட்டு நிலத்தில் ஒரு பழங்களஞ்சியம்

ஆங்கிலமூலம்: ஓ.ஜே. றொபர்ட்ஸன்    தமிழாக்கம்: கு. இராமச்சந்திரன்

நகரத்திலிருந்து சற்றுத்தள்ளி ஒரு மேட்டுநிலத்தில் பழங்களஞ்சியம் ஒன்று இருந்தது. அது அங்கு எவ்வளவு காலமாக இருக்கிறது என்பது ஒருவருக்குமே தெரியாது. அந்தக் கட்டிடத்தைக் கட்டியதுயார் என்பதுகூட எவர் ஞாபகத்திலாவது இருப்பதாகவும் தெரியவில்லை. ஆனால் அதைக்கட்டியவன் நல்ல கைதேர்ந்தவன் என்பதை அத்திவார த்தில் கட்டுறுதியோடு எழுந்து நிற்கும் பழங்களஞ்சியம் உறுதிப்படுத்தியது.

வைரம்பாய்ந்த கதவுகள் மரமுளையாணியில் தொடுத்துக்கொண்டிருந்தன. ஒழுங்கு முறையாகத் தொட்டிகள் பயன்படுத்தப்படாததால் பூஞ்சணம் பிடித்ததுபோல் காணப்பட்டது. அதனுடைய காலத்தை ஒட்டிப்பார்க்கையில் இதென்னவோ சாதாரண விஷயம்தான். வெயிலும் மழையும் காற்றும் நெடுங்காலமாக தாக்கியதால் கட்டிடத்தையே சோபை இழக்கவைத்துவிட்டது.

பழங்களஞ்சியத்தை கண்ணெடுத்துப்பார்ப்பவர்கள் கூட அற்பசொற்பமானவர்கள்தான். அடிக்கடி சிறுவர்கள் வேடிக்கை விளையாட்டாக கற்களை தடதடவென்று எறிந்து மங்கிப்போன சுவர்கள் மீதும், கூரைமீதும்பட்டு எழும் சத்தத்தை காதாரக் கேட்டு மகிழ்ந்தார்கள். " வயதுக்கு மீறிய தோற்றத்துக்கு ஆளாகிவிட்டேன். அவர்கள் எறியும் கற்கள் எனக்கு எவ்வளவு பெரிய பாதகத்தை உண்டு பண்ணுகிறது என்பதை அவர்கள் கொஞ்சமாவதுஎண்ணிப்பார்ப்பதில்லை. அவர்களது சந்தோசத்தை மட்டும்தான் பார்க்கிறார்கள்" பழங்களஞ்சியம் ஆதங்கப்பட்டுக்கொண்டது.

பசுக்கள், ஆடுகள், கழுதைகள் ஆகியவற்றிற்கு பழங்களஞ்சியம் ஒதுக்கிடமாவதுமுண்டு. சில வேளைகளில் இரவில் குளிர் காற்று வீசினால், மழை அடித்துப்பெய்தால் பழங்களஞ்சியத்துக்குள் வந்து அவை அங்கிருக்கும் அறைகளில் தங்கிவிடுவதுமுண்டு.

" கால்நடைகள் வந்து தங்கிப்போகாவிட்டால் நான் எப்பொழுதோ இடிந்துபோயிருப்பேன்," என்று சொல்லிக்கொண்ட பழங்களஞ்சியம், "நான் எதற்கும் பயன்படாத உதவாக்கரையாகிவிட்டேன். நான் மட்டும் நகரத்தில் இருந்திருந்தால், அதன் எல்லையை அண்டி ஒட்டி இருந்தால்கூட, யாராவது ஒரு வியாபாரி தனது பொருட்களைப்போட்டு வைக்கும் பண்டகசாலையாக என்னைப் பயன்படுத்தியிருப்பான்." என்று எண்ணிக்கொண்டது.

நகரம் எப்பொழுதும் பரபரப்பாகக் காணப்படும் இடமாகும். பழங்களஞ்சியம் எத்தனையோ ஆண்டு காலமாக அங்கு நடப்பதைக் கண்காணித்து வந்திருக்கிறது. ஒவ்வொருநாளும் சந்தையில் மொய்மொய்யென்று ஒரே மக்கள் நெரிசல். சிலர் வாங்குவார்கள், சிலர் விற்பார்கள், சிலர் சுற்றிச்சுற்றி வருவார்கள், சிலர் தோழர்களோடு கதைத்துக்கொண்டிருப்பார்கள்.

தொலைதூரத்துப் பாலைவனத்திலிருந்து ஒட்டகப்பயணிகள் கூட்டம் கூட்டமாக வருவார்கள். ஒட்டகத்தின் கால்கள் மண்ணையும் புழுதியையும் வாரிக்கிளப்பும். கடைகளுக்கும் அங்காடி வியாபாரிகளுக்கும் கொடுக்கவென்று பொதிபொதியாக பொருட்களை ஏற்றிவருவார் கள். ஒட்டக ஒட்டிகள் அணிந்துவரும் வெள்ளை வெளேரென்ற அங்கிகள் நகரத்தின் அடைசலான கூட்டங்களில் கூட தொட்டுக்காட்டிவிடும்.

காவிநிற பிடரிமயிர்க்கழுதைகள் முரட்டுத்தனமான முதுகில் விறகைக் கட்டுக்கட்டாய்ச் சுமந்தவண்ணம் தள்ளாட்டத்தோடு வந்தன. தெருவில் போவோர் வருவோர்மீது முட்டுவதுபோல் முண்டிச்செல்லவே அவர்கள் காதைத் திருகினார்கள், வாலை முறுக்கினார்கள்.

இடுக்கு முடுக்கான, குறுகலான தெருவில் நடைபெறும் வியாபாரமும் போக்குவரத்தும் , ஆண்களும் பெண்களும், குழந்தைகளும் அழகழகான அங்கிகளையும் முக்காடுகளையும் அணிந்து நடமாடித் திரிவதும் கண்கொள்ளாத காட்சியாக இருந்தது.

"நான் ஒண்டியாக இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேட்டுநிலத்தில் இருக்கின்றேன். என்மீது கல்லெறியும் சிறுவர்களும் கால்நடையும் தவிர யாருமே என்னைக் கணக்கிலெடுப்பதில்லை. ஏதாவதொரு நாள் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கும் சம்பவம் நடந்துவிட்டால் அதிலேயே நான் பரிபூரணதிருப்தியடைந்துவிடுவேன். அதற்கு மேல் எனக்கு எதுவுமே நடக்கவேண்டியதில்லை."

பழங்களஞ்சியம் இப்படியும் நினைத்துப்பார்த்துக்கொண்டது.

பல கழுதைகளை ஓட்டிக்கொண்டு வந்த ஒரு மனிதன் நின்றான். கழுதைகளில் ஒரே ஒரு கழுதைக் குட்டிமட்டும் அதன் முதுகில் வைக்கோலைச் சுமந்துகொண்டு வந்தது. அதன் முதுகிலிருந்த வைக்கோல் நழுவி விழுந்துதரையில் கந்தறு கோலமாய்க் கிடந்தது.

கழுதைக்குட்டியின்மீது மனிதனுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது.

" நான் எதற்கு உன்னைக் கூட்டி வந்தேன், நகரத்துக்கு வைக்கோல் கொண்டுபோகத்தானே?" என்று கழுதையைப் பார்த்துக்கத்திய மனிதன்பிட்டத்தில் ஒரு போடுபோட்டான்.

"வழியெல்லாம் குதியாட்டம் போட்டு வந்தாய், இப்போது பார்! வைக்கோலைக் கீழே போட்டுவிட்டாய். பழையபடி வைக்கோலை உன் முதுகில்தான் ஏற்றணும்... ஆனால் அது இப்போதைக்கு ஆகக் கூடிய காரியமா என்ன?... நேரமெடுக்கும். ஒட்டக ஒட்டிகள், வேறு யாரிடமிருந்தாவது வைக்கோலை வாங்கினாலும் வாங்கிவிடுவார்கள். உன்னாலே என் வியாபாரமே பாழாய்போனாலும் போய்விடும்."

வைக்கோல் கட்டைக்கட்டியிருந்த கயிற்றைப்பார்த்தான். கோபம் பொங்கி முட்டி மோத, வைக்கோலைக் காலால் எட்டி உதைத்தான்.

"முடிச்சுக்களை அவிழ்த்துக்கட்ட எனக்கு நேரமா இருக்கு? நகரத்துக்குப் போயாக வேண்டுமே"- கூச்சல் போட்டான்.

அவன்முன் குவிந்துகிடக்கும் வைக்கோலை ஒரு கணம் பார்த்தான்.

" இந்த வைக்கோலை கைப்பார்த்துக் கட்டுவதென்றால் இன்றைய பொழுதே காணாது. இந்த பழங்களஞ்சியத்தில் வாரிக்கொண்டுபோய் போட்டுவிடவேண்டும். அப்படியே கிடக்கும். இரண்டொரு நாள் கழித்துவேலைவெட்டியில்லாத நேரத்தில் திரும்ப வந்துஎடுத்துக்கொள்வோம்."

தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

சிதறிக்கிடந்த வைக்கோலை வாரிக்கொண்டு தொட்டிக்குள் குவித்தான்.

"இரண்டொருநாளில் வந்துவிடவேண்டும் "

வாய்க்குள் மீண்டும் சொல்லிக்கொண்டான்.

ஆனால் அவன் அந்தப் பக்கம் தலைவைத்துப் படுக்கவே இல்லை.

" இனி இந்த வைக்கோல் எனக்குத்தான். பசு, ஆடு, கழுதைகள் குளிர் காலத்திலோ, மழை நேரத்திலோ சாப்பிட ருசியாக இருக்கும்"

பழங்களஞ்சியம் ஆனந்தப்பட்டுக்கொண்டது.

கால்நடைகள் பழங்களஞ்சியத்திற்கு வந்த நேரத்தில் தரையில் கொட்டிக்கிடந்த வைக்கோலைச் சாப்பிட்டன. ஆனால் தொட்டியில் கிடந்த வைக்கோலை மட்டும் அவை தொடவே இல்லை.

பருவங்கள் மாறின. வேனில் கழிந்தது. இலையுதிர் காலம் மாயமாகிவிட்டது. குளிர்காலம் புகுந்தது. வெகுவேகமாக ஆண்டின் எல்லையை நெருங்கியது. தெருவின் போக்குவரத்தால் நகரமே சுறுசுறுப்படைந்தது. நூற்றுக்கணக்கான மக்கள் தங்களுடைய வரிகளைச் செலுத்துவதற்காக வந்துகொண்டிருந்தார்கள். வரி செலுத்தியே ஆகவேண்டும் என்பதுசட்டம். மக்களில் சிலர் கால்நடையாகப் போனார்கள். சிலர் ஒட்டகத்தின் மீதுசென்றனர். சிலர் கழுதைகளில் சவாரி செய்தனர். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் வண்ண வண்ண ஆடைகளை அணிந்துகொண்டு கதைத்தவாறு நடந்தனர். நகரமெங்கும் மக்களின் பேச்சொலியே அலைமோதிக்கொண்டிருந்தது.

வரிசெலுத்துவோரில் யாராவதுசிலர் வந்துதங்கிச்செல்லவேண்டும் என்ற





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நப்பாசை பழங்களஞ்சியத்திற்கு உண்டானது. எவராக இருந்தாலும் சரி, ஒரே ஒருவர் மட்டும் கண்ணெடுத்துப்பார்த்து ஒதுங்கிக்கொண்டாலேஅதற்குப் போதும், அல்லது அறைகளில் இருக்கும் தொட்டிகளைத் தொட்டுப்பார்த்தாலே போதும். யாராவது அலுத்துக்களைத்துப் போய் வந்தால் தொட்டியில் நிறைந்துகிடக்கும் வைக்கோல் மீது இரவுமுழுவதும் கண்ணயரலாம் ஆனால் தெருவில் நடக்கும் ஒவ்வொருவரும் நகரத்தை நோக்கி விரைந்தார்கள்.

''நான் பார்வைக்கு வசதியானவன் போல் தோற்றமளிக்கவில்லை என்றுதான் நினைக்கிறேன். குளிரடிக்கும் இரவில், அதுவும் வெளிச்சமே இல்லாத இந்த இடத்தில் யார்தான் தங்குவதற்கு விரும்புவார்கள். நகரத்தில் இருக்கும் சத்திரம் தங்குவதற்கு நல்ல வசதியானது. உண்ணவும் குடிக்கவும் கிடைக்கும். இங்கு வந்துயாராவதுதங்குவார்கள் என்ற எதிர்பார்ப்பையே விட்டுவிட வேண்டியதுதான்.''

பழங்களஞ்சியம் ஏக்கத்தோடு சொல்லிக்கொண்டது.

அந்தி சாயும்பொழுது மேட்டுநிலம் பக்கமாக நிழல்கள் விழுந்தன. இருவர் தன்னருகே வருவதைக்கவனித்தது. கபிலநிறக்கழுதையின் அருகே நடந்துவந்துகொண்டிருந்த ஒரு மனிதன் களைத்துப்போயிருந்தான். அடுத்து, வெண்ணிற உடையணிந்த பெண்ணொருத்தி கழுதை மீது உட்கார்ந்திருந்தாள். அவளும் மிகவும் சோர்ந்துகாணப்பட்டாள். நடை தளர்ந்த அப்பயணிகள் மேட்டுநிலத்திலிருந்த பழங்களஞ்சியத்தை ஏறெடுத்துப் பார்த்தனர். ஆனால் அவர்களின் கால்கள் தரிக்கவில்லை. நகரத்திலுள்ள சத்திரத்தை நோக்கி நடந்தார்கள். தெருவில் நடமாடும் மக்களோடு மக்களாகக் கலந்துவிட்டனர்.

சடுதியில் இருள் கவிழ்ந்தது. நட்சத்திரங்களால் பல்கிப்போன வானம் பிரகாசித்தது. கால்நடைகள் மேய்ச்சல் தரையிலிருந்து வந்து அறைகளில் தங்கிக்கொண்டன. என்னவோ, உள்ளே நுழைந்தவற்றில் எதுவுமே வைக்கோல் நிறைந்த தொட்டிப்பக்கம் போகவே இல்லை.

சற்று நேரத்துக்கெல்லாம் கழுதையின் குளம்பொலி வெளியில் கேட்டது.

யாராக இருக்கும்? ஏன் அவர்கள் வருகிறார்கள்?

கழுதைமீதுசவாரி செய்த பெண்ணும் ஆணுமான பயணிகள் கணத்தில் திரும்பிவிட்டார்கள்.

களஞ்சியத்தின் முன்வாசலில் கழுதையின் குளம்பொலி

''நில்''– மனிதனின் குரல். அவன் அந்தப் பெண்ணை இறக்கிவிட்டான். கனிவன்போடு அவளை அணைத்துக் கைத்தாங்கலாக உள்ளே அழைத்துச் சென்றான். வழியில் படுத்துக்கிடந்த கால்நடைகள் எழுந்து ஒருபுறமாக ஒதுங்கி பயணிகளுக்கு இடம் கொடுத்தன.

'' மன்னிக்கவேண்டும், சத்திரத்தில் இடமில்லை. இரவுக்கு தங்க இந்தப் பழங்களஞ்சியம்தான் கிடைத்தது. தொட்டிகளில் ஒன்றில் வைக்கோல் கிடக்கிறது. வந்து படுத்துக்கொள்'' என்றான் அந்த மனிதன்.

''கவலைப்படாதீர்கள்.''என்று கூறிய அந்தப்பெண், ''எல்லாமே ஒழுங்காக, நல்லபடியாக நடக்கும். இந்த வைக்கோல் மென்மையாகவும் இதமாகவும் இருக்கும். இதுஅருமையான படுக்கை'' என்றாள்.

''என்னால் உதவமுடியாமற் போய்விட்டது பார்.''என்று ஆதுரத்துடன் சொன்ன அந்த மனிதன், '' நேரங்காலத்தோடேயே நகரத்துக்கு வந்து, நம்முடைய வரியை கட்டியிருக்கவேண்டும். என்னால் ஆகக்கூடிய உதவி ஏதாவது இருக்கிறதா?நான் நகரத்துக்குப்போய் உதவி ஒத்தசை ஏதாவதுதேடவேண்டுமா?'' என்று கேட்டான்.

''வெளிச்சம் மட்டும் இருக்குமேயானால் நன்றாகவே இருந்திருக்கும்.''–அந்தப் பெண் சொன்னாள்.

திடீரென்று வானம் ஒளிமயமாகியது. ஒரு பிரகாசமான ஒரு நட்சத்திரம் வானத்தின்குறுக்கே பாய்ந்து பழங்களஞ்சியத்திற்கு நேர்உச்சியில் நின்றது..

இதற்கு முன் இப்படி ஒரு காலமும் நிகழ்ந்ததே இல்லை.

''கூடிய விரைவில் புதுமை ஒன்று நடக்கப்போகிறது. அது எனக்கு எப்படியும் தெரியத்தானே போகிறது''– பழங்களஞ்சியம் அப்படி ஒரு நினைப்பில் இருந்தது.

அமைதியாக அந்தப் பெண் தொட்டிப்பக்கம் போனாள். அந்த மனிதன் அவளைத் தாங்கிக்கொண்டான். கால் நடைகள் அவளருகே சென்றன. தலையைப் பணிவாக தாழ்த்திக்கொண்டன. அறையை நோட்டமிட்டன.

''நமக்கு மகன் பிறந்திருக்கிறான்''அந்தப் பெண் அந்த ஆணிடம் சொன்னாள்.

அவன் அவளுக்கு குனிந்துமுத்தமிட்டான். கையிலிருந்த பாலனை தொட்டியில் போட்டாள். பசுக்கள் சன்னமாகக் குரல் கொடுத்தன. ஆடுகள் கத்தின. கழுதைகள் பிடரிமயிர் தலையை ஆட்டின. பழங்களஞ்சியம் அதிர்ச்சியால் அத்திவாரம் முதல் உச்சிவரை ஆடிப்போனது. வெளியில் பிரகாசமானநட்சத்திரத்தின் ஒளியினால் தரையில்நிழல்கள் படிந்தன. மந்தைகளை மேய்த்துக்கொண்டிருந்த இடையர்கள் அருகில் தெரியும் பிரகாசமான நட்சத்திரத்தைக் கண்டனர்.

''பழங்களஞ்சியத்தின் மீது ஒளி''– ஒருவன் சுட்டிக்காட்டிச்சொன்னான்.

'' இவ்வளவு பிரகாசம் ஏன்?''– ஆச்சரியத்தோடு கூறியவன், ''ஏதோ ஒரு புதுமை நடந்திருக்கிறது. நாங்கள் போய் பார்ப்போம். நமதுமந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒய்வெடுக்கின்றன. அவை மேயப்போவதில்லை" என்றான்.

இடையர்கள் மேட்டுநிலத்திற்கு விரைந்தார்கள். பழங்களஞ்சியத்தின் மீது பிரகாசித்துக்கொண்டிருந்த அந்த நட்சத்திரம் வழிகாட்டியது. அவர்கள் செல்லுகையில் வானோர் கூட்டம், ஒன்று சேர்ந்துபுகழ்ந்து பாடும் ஆனந்தப்பாடல் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தது.

"வானோர்கள் பாடுவதாகத்தான் இருக்கும். எந்த ஒரு மனிதராலும் இவ்வளவு இனிமையாகப் பாடவே முடியாது" பழங்களஞ்சியம் தீர்மானமாக சொல்லிக்கொண்டது.

ஒவ்வொருவராக பழங்களஞ்சியத்திற்குள் நுழைந்தார்கள்.

"என்ன நடந்தது என்று தயவுசெய்து எங்களுக்குச் சொல்லுங்கள் சுடர்மிகுந்த இந்த விண்ணொளி நிச்சயமாக தேவனின் அடையாளமாகத்தான் இருக்கும்"- அவர்கள் பணிவாகக்கேட்டார்கள்.

"என் மனைவிக்கு ஒரு பாலன் பிறந்திருக்கிறான்."என்ற மனிதன், " வாருங்கள் வந்துபாருங்கள். தொட்டியில் கிடத்தப்பட்டிருக்கிறார்"என்று அழைத்தான்.

அமைதியே உருவாய் தொட்டியில் கிடக்கும் பாலனைக்கண்ட இடையர்கள் அதிசயமும் ஆச்சரியமும் ஆட்கொள்ள அப்படியே அந்த அறையில் முழந்தாளிட்டார்கள்.

"இதுசாதாரணக்குழந்தையல்ல." ஒருவன் இரகசியமாகக் கூறினான்.

"இவர் விண்ணரசிலிருந்து வந்திருப்பார்"-இரண்டாவது இடையன் சொன்னான்.

"ஆண்டவர் உலகிற்கு வாக்குறுதி கொடுத்தபடி இரட்சகர் வந்துவிட்டார்."- இன்னொருவன் குரல்.

இதைக்கேட்டதும் அந்தப்பெண் பாலனைக் கையிலெடுத்துமார்போடு அணைத்துக்கொண்டாள்.

மெதுவாக இடையர்கள் எழுந்தனர். "நகரத்துக்கு நாங்கள் போவோம். இங்கு நடந்த இந்த மாபெரும் நிகழ்ச்சியை அறிவிப்போம்." -அவர்களுக்குள்ளே இவ்வாறு சொல்லிக்கொண்டனர்.

"தொழுவத்தில் பிறந்த பாலனைப்பற்றி மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ஒரு புதிய அரசர் பிறந்திருக்கிறதையிட்டு மக்கள் பேருவகைக் கொள்வார்கள்."- இப்படியும் கூறிக்கொண்டனர்.

" ஆ!ஒரு அரசர்!.."------ பழங்களஞ்சியம் மீண்டும் அதிர்ச்சிக்குள்ளாகியது.

"இன்றிரவு ஒரு அரசருக்கு நான் இடம் கொடுத்திருக்கிறேன். அவர் சாதாரண அரசர் அல்ல. இந்நாளில எங்கினும் இருக்கும் எல்லா மக்களுக்கும் அன்பின் அரசர், நம்பிக்கையின் அரசர், அமைதியின் அரசர் இன்றுபோல் என்றும் இருப்பதாக. நல்ல காலம் பிறந்துவிட்டது."



# நீ மீண்டும் வரவேண்டும்

இன்பராஜன்

அது
ஒரு
சனந்த இரவு;
நீ
வாழ்வைப் பலிகொடுத்து
வாழ்வுகொடுக்க
வதைபடத் துணிந்த
உறந்த இரவு.

சின்ன மனிதரின்
கூர நினைவுகள்
கூரிய அம்புகளாய்
உன்மேல் பொழிய
நீயட்டும்
நிதானமாக
உன்னவர்களுடன்
அந்த
இறுதிவிருந்தில்....

உனது
பாடுகள்
மரணம்பற்றியும்
பற்பல சொல்லி
துயர்மிக அடைந்தாய்.

கடலோரம் கிடந்த
கூழாங்கற்களை
ஒவ்வொன்றாய்ப் பொறுக்கி
பவளக்கற்களாய்
பட்டைத் தீட்டி
ஞானஒளி
வீசும்படிக்கு
வாழ்வின் தடங்களில
வைத்து மகிழ்ந்த
வையத்துவிளக்கே!
சோகம் சுமந்திருந்த
அந்த
பிரியாவிடையின் போது
உனது
திருமுன்னுமா
பதவிஆசை என்னும்
நச்சுப்பாம்பு
உன்னவர்களின்
சித்தையைத் தீண்டும்?

உனக்கோ
நாளைய
மரணக்கலக்கம்
உன்னவர்களோ
நாளை மறுதினம்
யார் பெரியவன்
யாருக்குப் பதவி
என்று கலகம்

சாட்டைகளால்
கடித்துக்குதறப்பட்டு
இரத்தப் பால்வடித்த
விண்ணக விருட்சமே!
சிந்தைநொந்து
நெஞ்சு பொறுக்காது
நெருப்பான
சோகத்தை நெட்டுயிர்த்து
முந்து முத்தாக
நீ
கொட்டிய வார்த்தைகளில்
பட்டமரமும்
தளிர்விடும்.

பணிவை
தலைமைக்கு இலக்கணமாய்
பரிந்துரைத்து
பிறர்க்கு
பணிசெய்து கிடப்பவனே
தலைவன்
எனச் சாற்ற
சீடர் பாதங்களை
கழுவி
முத்தமிட்டு
அன்பைச் சொரிந்த
அண்ணல் பெருந்தகையே!
உன்னைப்போல்
ஒரு
தலைமைக்காக
விண்ணைப் பார்த்தபடி
நெஞ்சு பிரார்த்திகிறது;
இங்கு
நீ
மீண்டும் வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசைத்தென்றல் யேசுதாசனின் நேர்காணல்

*பொதுவாக ஈழத்தமிழ் இசை உலகிற்கும், குறிப்பாக கத்தோலிக்க உலகிற்கும் நன்கு அறிமுகமானவர் 'இசைத்தென்றல்' எம்.யேசுதாசன் அவரது இசை ஒலிக்காத தேவாலயங்களும், கிறிஸ்தவ இசை அரங்குகளும் இல்லை என்றே கூறலாம். இசை உலகில் முப்பது வருடங்களுக்கு மேலான அநுபவ முதிர்ச்சியுடையவர். ஒரு கலைஞனுக்குரிய கவர்ச்சியும், பேச்சில் இனிமையும் உடையவர் கலைவழி இறை பணியாற்றும் திருமறைக்கலாமன்றத்தின் இசையாசிரியர் அவரையும், அவரது இசையுலக அனுபவங்களையும், கண்டறிந்தோம். அதை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் ஒரு மகிழ்ச்சி.*

**நீங்கள் கலையுலகில் காலடி எடுத்துவைக்க பின்புலமாக இருந்தவை எவை என்று கூறமுடியுமா?**

சிறப்பாக எனது குடும்பப்பின்னணி என்றுதான் சொல்வேன். எனது அப்பாவும் அவரது சகோதரரும் நாட்டுக்கூத்தில் அண்ணாவிமார்களாகத் திகழ்ந்தவர்கள் எனது பெரியப்பா 'சட்டம்பி' என்று அழைக்கப்பட்டவர். பலநாட்டுக் கூத்துக்களை யாத்துப் பழக்கியவர். இன்னுமொரு பெரியப்பா யோசேப்பு என்பவர் இதற்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர்.அவர்கள் இன்று உயிரோடு இல்லை.எனது அப்பா நாட்டுக்கூத்தில் மிருதங்க விற்பன்னராகத் திகழ்ந்தவர். இவ்வாறு பரம்பரையாக வந்த கலைஞானம் தான் எனக்கு இசைஞானம் ஏற்படக்காரணமாக இருந்தவை எனக்கூறலாம். எனது இயற்கையான ஆவல் அதற்கு என் தந்தை தந்த ஆதரவு. முயற்சித்தேன், முடிந்தது.

**எத்தனை வயதில் நீங்கள் கலையுலகில் காலடி எடுத்து வைத்தீர்கள்?**

ஆறாம் வகுப்பு படிக்கும் பொழுது, அதாவது எனக்குப் பத்துவயதாக இருக்கும்பொழுது எனது இதை ஆர்வத்தைக்கண்ட எனதுதந்தை எனக்கொரு ஆர்மோனியம் வாங்கி தந்தார். சிவகுரு என்பவரைக் கொண்டு பதினோராவது வயதிலேயே நன்றாக ஆர்மோனியம் வாசிக்கத்தொடங்கி விட்டேன். ஆதரவு தந்தனர், பலர், ஆர்வம் மேலிட்டது. 14வது வயதிலேயே கோயில் திருவிழாக்கள், நாடகங்கள் முதலிய வற்றிற்கு வாசிக்கத் தொடங்கி பலரது பாராட்டுக்களையும் பெற்றேன்.

**இசையுலகவாழ்வில் உங்கள் பாதையை சற்று பின்நோக்கிப் பார்ப்போமா?**

எனதுபள்ளிப்படிப்பை முடித்த பின்னர் தொழில்தேடிக்கொண்டிருந்தேன். இசையோடு இணைந்து ஓவியமும் என் மனதைக் கவர்ந்தது. ஓவியக் கலையில் ஒரு சில நாட்களைக் கழித்தேன். அப்பொழுது யாழ் ஆயராக இருந்த மகா வந்தனைக்குரிய எமிலியானுஸ் ஆண்டகை அவர்கள் இல்லறத்தில் இருந்து கொண்டே திருச் சபையில் இறைவனுக்குப் பணியாற்றக் கூடிய வாலிபர்களைத் தேடிக்கொண்டிருந்தார். அவர்களில் நானும் ஒருவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சிக்காக இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டேன். எனக்கிருந்த இசை ஆர்வத்தைக்கண்ட ஆயர் அவர்கள் இந்தியாவிலே நான் இறையியலோடு இசையையும் முறைப்படி கற்பதற்கான வசதிகளைச் செய்து தந்தார்.

திண்டிவனம் இறையியல் கல்லூரியில் கேரளாவைச் சேர்ந்த இசைவிற்பன்னர் யோசவ் (கிருஷ்ணப்பிள்ளை) என்பவரிடம் இரண்டு வருடம் இசைபயின்றேன்.இவரே கர்நாடக இசையை முதன்முதலில் கத்தோலிக்கத்தில் புகுத்தியவர். மீண்டும் இந்தியாவில் உள்ள அடையாறு கலாச்சேத்திரத்தில் இசையில் சிறப்புப் பயிற்சி பெற்றேன்.மேலும் சென்னையிலுள்ள லூத்திரன் ஸ்டூடியோவில் பரமசிவம் என்ற இசையமைப்பாளரிடம் ஆறுமாத காலம் பயிற்சி பெற்றேன். அச்சந்தர்ப்பத்தில்தான் நான் இசையமைத்த 'அலை மோதும் மனமே நில்' என்ற பாடலை பிரபல பாடகர் யேசுதாசன் பாடினார். நானே இசை அமைத்து நானே பாடிய முதல் பாடல் திருமறைக்கலாமன்றத்தின் தயாரிப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காட்டிக் கொடுத்தவன்' என்ற நாடகத்தில் வரும் "யார் நீ இறைவா" என்ற பாடலாகும். இன்றுவரை 1500 பாடல்களுக்கு மேல் இசையமைத்து உள்ளேன். பல படைப்புகளைஒலிப்பதிவு நாடாவிலும் வெளி யிட்டுள்ளேன்.

***உங்கள் வளர்ச்சிப்பாதையில் திருமறைக் கலாமன்றத்தின் பங்கு என்னவாக இருந்தது?***

மன்றம் தான் என்னை வளர்த்தது. எனது திறமையை வெளிக்கொணர களம் அமைத்துக் கொடுத்தது. இன்றுவரை கொடுத்துக் கொண்டேயிருக்கின்றது. 'இசைத்தென்றல்' யேசுதாசன் என என்னை இசையுலகம் அறிய வைத்தவர் மன்ற இயக்குனர் நீ.மரியசேவியர் அடிகளார் என்பதை நான் மறக்கமுடியுமா? அவருடைய யேசுமறை நாடகங்கள் அனைத்திற்கும் நானே இசையமைத்துள்ளேன். எனது இசைஞானம் தேங்கும் ஒரு சாக்கடையாக இல்லாமல்பாய்ந்து செல்லும் ஒரு நீரோடையாக நிலவச்செய்து கொண்டிருப்பது யாழ். திருமறைக் கலாமன்றமேதான்.

***நீங்களும் இசையும் சம்பந்தப் பட்டமட்டில் ஏதாவதுசிறப்பியல்புகளைக் கூறமுடியுமா?***

கர்நாடக, மெல்லிசைமேடை நாடகங்களில் மட்டுமல்ல இசைநாடக மேடை, நாட்டுக்கூத்துமேடை, நவீனநாடகமேடை இவ்வாறு வேறுபட்ட இசைமேடைகளிலும் எனதுபங்களிப்பு ஒரு சிறப்பியல்பு என்று கூறலாம் போல் தெரிகிறது. அது மட்டுமல்லாது வயலின், ஆர்மோனியம், ஓர்கன், தபேலா போன்ற வாத்தியக் கருவிகளை சரளமாக வாசிப்பேன். நாட்டியநாடகங்கள் பலவற்றையும் நெறிப்படுத்தியுள்ளேன். மேலும் எனது இசையமைப்பில் வயலினுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம். வயலின் ஒரு நரம்புக்கருவி. இந்த நரம்பிலே உயிரூட்டமான இசை எழுகின்றது. பல வயலின்கள் இணைந்து ஒரு சுரத்தொகுதியை வாசிக்கும்பொழுது கேட்பவர் இதயத்தை புல்லரிக்கச் செய்கிறது.

***உங்கள் இசையமைப்பு அனுவங்களை எங்களோடு பகிர்ந்து கொள்ளமுடியுமா?***

ஒரு குழந்தையை பிரசவிக்க வேதனைப்படும் தாய் அந்தக் குழந்தையை கண்டவுடன் எவ்வளவு



மகிழ்ச்சியடைவாளோ, அந்த நிலையையே ஒரு படைப்பாளன் அதாவது இசையமைப்பாளனும் அடைகின்றான். இசை, படைப்பாளனின் மனநிலையைப் பொறுத்தே உருவாகுகின்றது. அந்த உணர்வாக்கம் அதாவது (mood) மூட் என்று சொல்லப்படுவது எந்த வேளையிலும் வரலாம். துவிச்சக்கரவண்டியில்போகும் பொழுதோ, வீட்டில் அதிகாலை வேளையிலோ, அன்றேல் படுத்திருக்கும் பொழுதோ, அந்த மூட் ஏற்படலாம். அதுவந்து விட்டால் மடைதிறந்த வெள்ளம்போல ஒரு படைப்பு உருவாகிவிடும். மனதில் அமைதியும் நினைவில் தூய்மையும் கூட இந்தப்பணியை இலகுவாக்கும். சிலபல வேளைகளில் எப்படி மண்டையைப் போட்டுஉடைத்தாலும் மனதுக்குப் பிடித்தமான இசை அமையாதுவிடலாம். என்னைப் பொறுத்தவரையில் நானே பாடல்களையும் எழுதுகின்றேன். இது இசையமைப்பை ஓரளவு சுலபமாக்குகிறது. இசையைப் பொதுவாக இரண்டு வகைப்படுத்திப் பார்க்கலாம். கர்நாடகஇசை, மெல்லிசை கர்நாடக இசையமைக்கும் பொழுது அந்த இராகத்தில் இருந்து வழுவாமல் அமைப்பது, சாஸ்திரீகம்தான்அங்கே மேலோங்கிநிற்கிறது. கட்டுப்பாட்டுக்குள் அமைந்தே இது ஆக்கப்படுகின்றது. மெல்லிசை என்பது கர்நாடக இசையை எல்லோரும் இரசிக்கும் வண்ணம் உருமாற்றம் செய்வது. ஆனால் எல்லாப் பாடல் களுக்கும் அடிப்படை ஏழு சுரங்களேதான். ஆகையால்தான் மெல்லிசையில் இசையிலக்கணம் இல்லையென்று சொல்லமுடியாது. இசையின் அடிநாதம் இராகங்களே. அதை தாளபாவத்துடன் சொற்களினூடு வெளிக்கொணரும் பொழுது மயங்காதோர் யாரோ? முன்பெல்லாம் பாடல்கள் எழுதப்பட்ட பின்னரே இசையமைப்பதுவழக்கம், இப்பொழுது சந்த ஓசைகளுக்கு இசையமைத்து பின்னர் அதற்கேற்றவாறு சொற்களை அமைக்கின்றேன். இப்படி அமைக்கும் பொழுது கற்பனை வளம் விரிந்து இன்னும் சிறப்பான பாடல்கள் உருவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபிறக்கின்றது. நாடகங்களுக்கு இசையமைக்கும பொழுது நாடகப்பாத்திரங்களையும், கதையமைப்பின் போக்கினையும் இசையாசிரியன் உள்வாங்க வேண்டும். இசையும் ஒரு மொழி. வாயால் சொல்லமுடியாத உணர்வுகளை இசைக்கருவி மூலம் துல்லியமாக வெளிக்கொணர ஒரு இசைக்கலைஞனால் முடியும். கொழும்பில் இடம் பெற்ற வார்த்தைகளற்ற நாடகமாகிய 'அசோகா', 'தர்சனம்' என்பவற்றில் எனதுஇசையே பேசியது.

***இசைத்துறையில் உங்களால் மறக்க முடியாததும், உங்களுக்கு புகழ் தந்ததுமானநிகழ்வினைக் கூறமுடியுமா?***

கொழும்பு நகரில் திருமறைக் கலாமன்றம் மேடையேற்றிய 'அசோகா', 'தர்சனம்' எனும் வார்த்தைகளற்ற, இசையை மட்டுமே பின்புலமாகக் கொண்டு மேடையேற்றப்பட்ட நாடகநிகழ்வினை என்னால் மறக்கமுடியாது. இசையின் மூலமே இந்நாடகக்கதை நகர்ந்தது. தொடக்கத்தில் இதுஒரு விஷப்பரீட்சையோ என்று கூட எண்ணினேன். வெளிநாட்டவர் முதலாக மெய்மறந்தனர். சிம்பனி இசையென்றே பலர் பாராட்டினர். சில்லையூர் செல்வராசன் மற்றும் கொழும்பு முற்போக்கு எழுத்தாளர் பலர் இந்நாடகங்களின் இசையமைப்பை வியந்து பாராட்டினர்.

***உங்கள் இசைஞானம் 'இறைவழிபாடு' என்ற வட்டத்திற்குள் மட்டும் வலம் வருகிறது... ஆனால் இந்த மண்ணுக்கு?***

ஏன் 'மண்ணின் இராகங்கள்' என்ற இசைநிகழ்ச்சி இந்த மக்களுக்காகவே பாடப்பட்டது. அங்கே ஒலித்த "செந்தமிழ் ஈழத்தில் எம்மினம் படும் துயர் பார்த்திட மாட்டாயா?" என்ற பாடல் இன்றும் எங்கும் ஒலிக்கின்றது. மற்றும் கைலாசபதி அரங்கிலும், இந்து மகளிர் கல்லூரி அரங்கிலும் இவ்வருடம் பல மெல்லிசை நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளேன். மயானகாண்டப் பாடல்களை காலத்திற்கு ஏற்றவாறு நவீன இசைக்கருவிகளால் மெருகேற்றி இசைவேந்தன் தைரியநாதனின் மேடைகளில் ஒலிக்கவைத்தேன். அதேவேளை கலைவழி இறைபணி செய்யும் தொண்டனாகவும் வாழுகின்றேன். கத்தோலிக்க திருவழிபாட்டு இசைக்கு பல பாடல்களை யாத்து இசையமைத்துள்ளேன். பஜனைப் பாடல்களும் ஒலிப்பதிவு நாடாவில் வெளியிடடுள்ளேன். தாவீதரசரின் தியான சங்கீதங்களுக்கு இசையமைத்து வெளியிட்டுள்ளேன். இப்பணிகளை யாழ் கத்தோலிக்க திருவழிபாட்டு நிலையத்தினுடாக ஆற்றுகின்றேன். இவ்வாறு கடந்த முப்பது ஆண்டுகளாக இசையினுடாக இறைவனோடு ஒன்றிக்கின்றேன். இதுவே தமிழ்ப்பண் பாடும் கூட இல்லையா? ஏன் தமிழிசை யின் மும்மூர்த்திகளாகிய தியாகராஜர், சியாமா சாஸ்திரிகள், முத்துஸ்வாமி தீட்சிதர் போன்றவர்களும் இதையே செய்தார்கள்,

***கர்நாடக சங்கீதம் இப்பொழுது இறந்து கொண்டிருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா?***

சங்கீதத்திற்கு இறப்பில்லை. மனிதனும் மனிதமும் நிலைக்குமட்டும் சங்கீதம் வாழும். ஆனால் கால ஓட்டத்தின் வேகத்தில் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. செம்பை வைத்தியநாத பாகவதரும், செம்மங்குடி சீனிவாச ஐயரும், மதுரை மணி ஐயரும் பாடியதையே இன்றைய இளைஞனும் பாடிக்கொண்டிருந்தால். இசையின் வளர்ச்சியை, அதில் நவீன மயம் என்பதை எங்கே நாம் காண்பது. இப்பொழுது நாம் கொம்பியூட்டர் யுகத்திலும்,பின் நவீனத்துவ உலகை நோக்கியும் நகர்ந்து கொண்டிருக்கிறோம்; தமிழ் இசை உலகமும் அந்த மாற்றத்திற்கு ஈடு கொடுக்க வேண்டியது தவிர்க்க முடியாததுதான். அதன் காரணமாகத் தான் தமிழர்களுக்கு மூன்றாவது இசை ஒன்று தேவை என்ற ஒரு புரட்சிகர சிந்தனை எமது இனச் சந்ததியிடம் கருக் கொண்டுள்ளது. மாற்றமும், புதுமையும் வரவேற்கப்பட வேண்டியதாயினும் அவை எமது தமிழ் இசை மரபின் வேர்களில் நின்று துளிர்ப்பனவாக இருத்தல் வேண்டும்.

***இன்றைய தமிழ் சினிமாவும் இசையும் பற்றி என்ன கூறுகிறீர்கள்?***

இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கின்றதுஎன்றுதான் சொல்ல வேண்டும். ஆங்காங்கே அழகிய கிராமிய பாடல்களுக்கு இளையராஜா, கங்கை அமரன் போன்றவர்களின் இசை உயிர்த்துடிப்பைத் தந்து உள்ளத்தில் பதிந்தாலும் ஏனையவை மேலைத் தேயமும் கீழைத்தேயமும் கலந்த ஒரு சாம்பாராக இருக்கின்றது. இருபக்கத்தாரும் அந்த இசையை முறையாக இரசிப்பார்களா என்பது சந்தேகமே. இதனால்த்தான் நேற்றைய பாடல் இன்றே மறக்கப்படுகின்றது. நல்ல கவிஞர்கள் கூட இந்தக் கலப்புக்கு இரையாகி தங்கள் கவித்துவத்தை இழக்கின்றார்கள். மலையாளப் பாடல்களும் இசையும் இந்த நிலையில் இல்லை. அங்கே புதுமை புகுத்தப்படுகின்றதுதான் ஆனால் அங்கே எப்படியும் மலையாள கிராமிய வாடையும் அந்த மண்ணின் அடிநாதமான இசையும் வந்து கொண்டேயிருக்கும். யப்பான் நாட்டுத்திரைப்படப் பாடல்களை கேட்கும் பொழுது மனக்கண்முன் நிச்சயமாக யப்பான் நாடுதான் தோன்றும். ஆனால் இன்றைய எமது தமிழ் சினிமாப் பாடல்களை கேட்கும் பொழுது அமெரிக்காவோ, இங்கிலாந்தோதான் எமது மனக்கண்ணில்........இது எமக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் ஒரு மேல் நாட்டவனுக்கு சிரிப்பாக இருந்து விட்டால்,......?

**இசைத்துறையில் கடந்த முப்பது ஆண்டுகளாக பணியாற்றும் உங்களுக்கு உங்கள் குடும்பமும், குழந்தைகளும் தரும் ஆதரவு**

அவர்கள் அனைவருமே இசைப் பிரியர்கள். கலையார்வம் உள்ளவர்கள். எனது மூத்தமகன் கலைச்செல்வன் பல்கலைக்கழக விவசாய பீட மாணவன், அவர் ஓர்கன், கிற்றார் மிருதங்கம் ஆகிய இசைக்கருவிகளை முறையாகக் கற்றுத் தேறியுள்ளார். பல்கலைக் கழகத்திலும் பல இசை நிகழ்ச்சிகளை நடாத் தியுள்ளார். இரண்டாவது மகள் சாருமதி வாய்ப்பாட்டு வீணை ஆகிய துறைகளில் பயிற்சி பெற்றுவருகிறார். திருமறைக்கலாமன்றத்தின் பிரதான பாடகியாகவும் இருக்கின்றார். அடுத்த மகள் திரேஸ் லதாங்கி வயலின் நடனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய துறைகளில் பயிற்சி பெற்று வருவதுடன், மன்றத்தின் இசைக் குழுவில் வயலின் வாசித்து வருகின்றார். ஆறாம் வகுப்பில் படிக்கும் மகன் அருண் செல்வன் ஓர்கன், மிருதங்கம் ஆகிய துறைகளில் பயிற்சி பெற்று வருகின்றார்

*நீங்கள் இசை உலகிற்கு சொல்ல விரும்புவது?*

இசை அனைவரையும் இணைக்கின்றது. இனபேதம் அங்கே மறைகின்றது. இதயத்திற்கு புத்தொளி கொடுக்கின்றது, பேதங்களை மறைத்து மனித மனத்தை ஆற்றுப்படுத்தி ஒரு மோன நிலைக்கு இட்டுச் செல்லுகின்றது. இசை ஒரு பரந்த அழகான கடலுக்குச் சமம் இதைக் கரை கண்டவர் யாருமிலர். எல்லாமே நான் தான் என்று கலைஞன் இறுமாப்புக் கொள்ளலாகாது. அனுபவம் தான் பெரிய ஆசான் கால ஓட்டத்தில் அனுபவவாயிலாக கலைஞர்கள் எவ்வளவோ கற்றுக் கொள்கிறார்கள். இதைப் பயன்படுத்தி ஒவ்வொரு கலைஞனும் முன்னேற வேண்டும். கலையில் போட்டியை வரவேற்போம் ஆனால் பொறாமையை அகற்றுவோம். இசை இசைக்காக மட்டுந்தான் என்ற நிலைமாறி இசை மானுடமேம்பாட்டுக்கான ஒரு ஊடகமாகவும் மாறிவரும் இன்றைய காலகட்டத்தில், தமிழ் இசையில் ஒரு புதிய பாாவையும், திருப்பு முனையும் நிச்சயமாக வேண்டும். அது காலத்தின் தேவை.

"அல்வி"




வறுமை நிறம்
கறுப்பு
அந்த வீட்டின்
சுவர் வெடிப்புகளிலும்
உக்கிப்போய்
நிறம் மாறிய
கூரை பயிலும்
வறுமை பல்லிளிக்கிறது.

அவர்களின் கலைந்த்
கேசத்திலும்
வெடித்த பாதத்திலும்
வறுமை
தரிசனம்
தருகிறது.
வெளிறிய முகமும்
வெண்ணிற விழியும்
வாழ்க்கைக்காய்
ஏங்கி ஏங்கி
மேலும்
வெளிறுகின்றன.

காய்ந்து போனவை
காயகல்பமாகவும்
உழுத்துப் போனவை
உயிர் காப்பனவாகவும்
உள்ளன.
அவர்களின் வயிறு
முதுகொடு ஒட்டி
வெகுநாளாகிவிட்டது
கவிதையும் கட்டுரையும்
அவர்களுக்கு கருத்தாய்த்
தெரியவில்லை.
ஒருவேளை சோற்றிற்கே
காவியம் படைக்கின்றனர்

அவர்கள்
சமூகத்திலிருந்து
தொலைக்கப்பட்டு
வெகுநாளாகிவிட்டது
அவர்களிடம்
மறுபடி மறுபடி
ஜீவிப்பதெல்லாம் என்னவோ
வறுமைதான்.
அவர்களது
காணவில்லை எனும்
விளம்பரம் இப்படித்தானிருக்கும்.


காணவில்லை
பெயர்:நல்வாழ்வு
வயது: பூமி உருவான ஆண்டு
நிறம்:: சிவப்பு
அவர்கள்
அணிந்திருக்கும்
ஆடையில்
இனிக் கிழிவதற்கு
இடமேயில்லை
அவர்களது
கைகளும் கால்களும்
குச்சியாய்
மாறினாலும்
அடுப்பை எரிக்கவும்
உதவாது
அவர்களது வீட்டில்
அடுப்புகள்
இருந்த சுவடுகளே
இல்லை

துரை. மதுரமதி
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பாரிஸ்
கலைவண்ணம்
1995





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# நீங்கா
# 1995
# நினைவு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நீங்காத 1995 னைவுகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









லண்டன்
கலை
நிகழ்வு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்க வலைகள்

பேராசிரியர் நீ. மரிய சேவியர் அடிகள்

## பீற்றர் ஷாவ்வர்

நவவேட்கைவாத நிழலில்நின்று ஜன ரஞ்சகமான நாடகங்களை எழுதும் ஆசிரியர் பீற்றர் ஷாவ்வர்

### வாழ்வும் வளர்ச்சியும்

இவர் லிவர்பூல் நகரில் 1926 மே12ல் ஆங்கிலநாட்டு யூத குடும்பத்தில் பிறந்தார். இவரும் அந்தனி ஷாவ்வர் என்னும் நாவலாசிரியரும் இரட்டையர்கள். புனிதபவுல் பாடசாலையில் கல்வி பயின்று, 1944ல் சுரங்கத் தொழில் செய்து 1950ல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று, சில ஆண்டுகள் அமெரிக்காவில், குறிப்பாக நியோர்க் நகரப் பொதுநூலகத்தில்,வேலை செய்தபின், சொந்த நாட்டுக்குத் திரும்பி ட்ருத் (உண்மை) சஞ்சிகையில் எழுத்தாளனாகப் பணிபுரிந்தார். நாவல்கள், வானொலி-தொலைக் காட்சி நாடகங்கள் சில எழுதிய பின், "வைவ்விங்ஹர் எக்செசைஸ்" என்னும் மேடை நாடகத்தை தமது முதல் படைப்பாக 1958ல் ஆக்கி அளித்தார். அன்றிலிருந்து1990 வரை பதினொரு நாடகங்கங்களை எழுதி மேடையேற்றியுள்ளார். அவைகளுள் புகழ் பெற்றவையும் பலருடைய பாராட்டைப் பெற்றவையும் என மூன்று நாடகங்களைக் குறிப்பிடலாம்.

1. த றோயல் ஹன்ற் ஒவ் த சண்(1958)
2. ஏக்குஉஸ் (1973)
3. அமாதேயுஸ் (1979)

தோல்வி அளித்த நாடகங்கள்எனப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுவர்.

1. த பற்றிள் ஒவ் ஷ்றைவிங்ஸ் (1970)
2. ஜோனதாப் (1985)

ஷாவ்வரின் தனிப்பட்ட சொந்த வாழ்வைப்பற்றிய செய்திகள் வெளி உலகுக்கு தெரியாமையில், ஜோண் றஸ்ஸெல் ரெயிலர் என்னும் விமர்சகர்," தனது தலைமுறையின் அதிக மர்மமானவர்களில் ஒருவராக ஷாவ்வர் உள்ளார்" எனக்கூறி உள்ளார்.

### நவவேட்கை வாதம்

இவருடைய முதிர்ந்த படைப்புக்களில் ஆர்த்தோவின் அரங்கியற் கருத்துக்களின் சாயல்கள் சிலவற்றைக் காணலாம். மனித உள்ளத்தின் ஆழத்தில் தேங்கிக் கிடக்கும் வன்முறை உட்படப் பல உணர்ச்சிகளை அரங்கில் வெளிக்கொணர்வது, ஒருவனிடத்திலேயே உள்ள முரண்பட்ட குணங்களைச் சித்தரித்து அவைகளின் முறுகுநிலையையும் போராட்டத்தையும் புறத்தே காட்டுவது, ஒழுங்கு, ஒழுக்கம் என்பவற்றுக்கு முதன்மை கொடுக்கும் சமுதாயத்துடன் இயற்கை உணர்ச்சி களுக்கு மேன்மை கொடுத்து எதிர்த்துச் சமரிடுவது போன்ற ஆர்த்தோவின் கருத்துக்கள் அப்பட்டமாக அழுத்தம் பெறவில்லையாயினும், அவைகளின் தாக்கத்தை ஏதோ ஒருவகையில் ஷாவ்வரின் படைப்புக்களில் கண்டு கொள்ளலாம்.

அத்துடன்சடங்கு, ஒலி,அழுகை, முனகல், மோடிநடப்பு, நடனம் முதலியவைகள் பார்வையாளரின் உள்ளுணர்ச்சிகளையும் இயல்பூக்கங்களையும் நேரடியாகத் தொடும்வண்ணம் ஆசிரியர் அவைகளைக் கையாள வேண்டும் என்ற ஆர்த்தோவின் கருத்து, ஷாவ்வரின் ஆக்கங்கள் மூலம் மேடைவடிவம் பெறுகின்றது[3]. இருந்தும், ஆர்த்தோவின் கருத்துக்களை ஷாவ்வர் முற்றாக ஏற்றுக்கொண்டவரல்ல.

### கருத்துக்கள்

* "அரங்கு என்பது உண்மையும் உணர்ச்சியும் தத்தமது எல்லா வேறுபாடுகளுடனும், சிறப்புக்களுடனும் வெளிப்படுத்தப்படும் இடம்" 3

* "உளவியல்சார் நாடகம் இறந்துவிட்டது என ஆர்த்தோ கூறுவது முற்றிலும் தப்பு. அது இப்போதுதான்ஆரம்பித்துள்ளது." 4

* "நவீன அரங்கு அதி வியத்தகு நுட்பங்களை உருவாக்கி உள்ளது. குறிப்பாக, சொல்லாடலைச் சுட்டிக் காட்டலாம். ஹரல்ட் பின்ரர் என்பவர் இத்தகைய எழுத்தோவி யத்தில் அப்பட்டமான எடுத்துக்காட்டு" 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* (த றோயல் ஹன்ற் ஒவ் த சன் என்னும் நாடகம் எழுதப்பட்டது) கண்கவரும் காட்சியை அரங் கிற்கு மீண்டும் அளிப்பதற்கு; சவால், அருவப்பொருள் என்பனவற்றால் அரங்கைச் சிறப்பாக்குவதற்கு "[6]

* "முழுமையான அரங்கு என்பது அபிநயமும் சொல்லும் கலந்தது; கற்பனையுடன் அறிவும் கலந்தது; மந்திர வித்தைத் தன்மை உடையது என்றும் சொல்லலாம். "[7]

* "வாழ்க்கையின் முக்கியமானவை: ஒருவன் தன்னுடைய பிறப்பின் வரையறையைத் தாவி மேவி எழும்பும் ஆற்றல் ; ஒருவனுடைய பார்வையின் அகலம் ; அதிகா ரத்துக்கு அடிபணிய மறுத்தல்... அனுதாபம், நற்சுவை"[8]

* "(ஒழுக்கத்துறையில்) எல்லாவற்றையும் அங்கீகரிக்கும் சமுதாயத்தினால் ( அரங்கில்இடம் பெறும்) கேலி அழிக்கப்பட்டு விட்டது."[9]

* "காத்திரமான நாடகம் என்றால், அது ஒரு குறிப்பிட்ட செய்தியைச் சொல்லவேண்டும் எனப் பலரும் கருதுகின்றனர்.ஆயின், எந்த ஒரு நாடகத்தினதும் செய்தியை வடித்தெடுத்து ஒரு சூத்திரமாகக் கூறக்கூடுமாயின், அந்நாடகம் அவ்வளவு நல்லதாக இருக்க முடியாது....காத்திரமான நாடகம், ஒரு சில பகுதிகளில் கடவுளரை மந்திர தந்திர வகைகளில் ஈடுபட வைக்கிறது."[10]

## சிறப்புகள்

பீற்றர் ஷவ்வரின் ஆக்கங்களில் காணக்கூடிய சில சிறப்புக்கள் [11]

1. **மொழியாட்சி:** ஆங்கில மொழியின் நுட்பதிட்பங்களை நன்கு புரிந்து, அதை வியத்தகு முறையில் கையாளும் ஆற்றல், நாடக உரையாடல்களில் தென் படுகிறது. உரையாடல் நெஞ்சைவிட்டு அகலாதவை.

2. **கதை சொல்லும் ஆற்றல்:** ஒவ்வொரு படைப்பிலும், வெவ்வேறு விதத்தில், தான் கூறவிரும்பும் கதையை, அரங்கியலுக்குட்பட்ட அழகியல் வழுவாது, கவர்ச்சியான முறையில் நகர்த்திச்செல்லுவது போற்றுதற்குரியது.

3. **பல்சாயற் சங்கமம்:** உலக நாடக மேதைகளான இப்ஸன், ஷோ, ஒஸ்போர்ண், ப்றெஃற், ஆர்த்தோ போன்றவர்களின் எண்ணக் கருக்களின் கீறுகள், நிழல்கள் இவரது படைப்புக்களிலும் படிந்து அவைகளை அழகு செய்கின்றது.

4. **அறிவியல்சார் சிக்கல்கள்;** மெய்யியல் துறையைச் சேர்ந்த சிக்கல்களும், வினாக்களும் பல்வேறு நாடகங்களின் அடிநாதமாக இழையோடுகின்றன. அக்கிரமமும் அநீதியும் நிறைந்த இவ்வுலகில், பரம்பொருள் என்பது ஒன்று உண்டா? அப்படி இருந்தால் அதற்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு என்ன? அது இல்லை என்றால், எந்த விதிமுறையின்படி மனிதன் வாழ முடியும்? இவ்விதமான சங்கடமான கேள்விகளுடன் சதுராடும் ஷாவ்வர், இருப்பியல்வாதத்தின் ஒரு சில கருத்துக்களை ஏற்றுக்கொள்வது போலவும், இருண்ட கண்ணாடியுடன் உலகைப்பார்ப்பது போலவும் தென்படுகிறார். எது எதுவாக இருப்பினும், அவரதுநாடகங்களில், மனிதனின் அறிவுசார் சிக்கல்கள் சில, அரங்கமொழியில், மரபுசாரா அரங்குநுட்பங்களைக் கையாண்டு, அலசி ஆராயப்படுகின்றன.

5. **பல்வகைச் சுவை:** அவரது படைப்புகள், இயல்பு, குறியீடு, மோடி, கேலி, காத்திரமான உரையாடல், பல்லிசை ஒலிகள் போன்றவைகளாலான பல்வகைச் சுவைகொண்டவை.

## சில நாடகங்கள்

**+ பைவ் விங்ஹர் எக்செசைஸ்**

ஐந்து விரல்களுடன் பயிற்சி எனப்பொருள்படும் இந்நாடகம்,பல விமர்சகர்களுடைய தாராள வரவேற்பைப் பெற்று, சிறந்த விருதினைப்பெற்று, லண்டனில் 610 முறை மேடையேறியது.

இதை இயல்பு தழுவிய நாடகம் என்று அழைக்கலாம். பல அறைகள் கொண்ட வீடு ஒன்று மட்டும் காட்சியாக அமைக்கப்பட்டது. ஒவ்வொரு காட்சியும், கால ஓட்டத்திற்கு அமைய, ஒன்றன்பின் ஒன்றாக நகர்ந்தது. நினைவுக் காட்சிகள் மூலம் அல்லாது, உரையாடல் மூலம் கதை தொடர்ந்தது.

இதன் தலைப்பு பியானோ என்ற இசைக்கருவி வாசிக்கும் முறையிலிருந்து பெறப்பட்டது. இக்கருவியை ஒழுங்காக வாசிப்பதற்கு ஐந்து விரல்களும் ஒரேவிதமாக ஒத்துழைக்கவேண்டும். இந்நாடகக் கதையும் ஒரு குடும்பத்தின் ஐந்து உறுப்பினர்கள் பற்றியது. ஒருவர் சற்று விலகி வினையாற்றின், சமநிலை தவறிவிடும். ஹறிங்ரன் என்னும் ஆங்கிலக் குடும்பம் ஒன்றின் சமநிலை– சமாதானம்–எவ்வாறு கெட்டது என்பதையே இக்கதை விளக்கு கின்றது.

ஸ்ரான்லி (தந்தை), லூயிஸ் (தாய்), க்ளைவ் (மகன்), பமெலா (மகள்) என்பவர்கள் ஹறிங்ரன் குடும்பத்தினர். அவர்கள் வீட்டில் வாடகைக்குக் குடியிருக்க வருகிறான் உவால்டர் என்னும் ஜேர்மானிய இளைஞன்.

இவனுடைய வருகையுடன் அக்குடும்பத்தில் குழப்பம் ஏற்படுகிறது.ஒவ்வொருவரும் மற்றவர்பற்றி அவனிடம் முறையிடுகின்றனர். பமேலாவும், லூயிஸும் அவனைக் காதலிக்கிறார்கள்.க்ளைவ் முதலாக அவனைத் " தன்னுடையதாக்க முனைகிறான். பணம், பதவி போன்றவற்றுக்கு முதன்மை வழங்கிய தந்தைக்கும், கலை, பண்பாடு போன்றவற்றுடன் ஈடு பாடுகொண்ட தாய்க்கும் இடையில், எவர் சொல்லைச் செய்ய என கலங்கியிருந்த மகனுக்கு, வீட்டைவிட்டு வெளியேறின் சுதந்திரமாக வாழலாம் என்ற அறிவுரையை வழங்கியமைக்காக உவால்டர் ஸ்ரான்லியினால் வெளியேற்றப்படுகிறான். மனம் உடைந்த உவால்ட்டர் தற்கொலை செய்ய முனைவதுடன் நாடகம் முடிகிறது.

பெற்றோர்கள் பிள்ளைகள் பற்றியதும், காதல்பற்றியதுமான உறவுகளை யுத்தகாலத்துக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்காலப் பின்னணியில் (ஐம்பதுகளில்) சித்தரித்த இந் நாடகத்துடன் தனது படைப் புத்திறமையை ஷவ்வர் நிரூபித் துவிட்டார்.12

+ த றோயல் ஹன்ற் ஒவ் த சண்

கதிரவனின் அரசவேட்டை (கதிரவனை வேட்டையாடுவது) எனப் பொருள்படும் இந்நாடகம் சிச்செஸ்டர் நாடக விழாவில் அரங்கேற்றப்பட்டு (1964) பலருடைய பாராட்டையும் பெற்றது. டெயிலி மெயிலின் (லண்டன்) பேணாட் லெவின் என்னும் விமர்சகர், " என்னுடைய வாழ்நாளில் இப்படி ஒரு பெரிய நாடகம் வேறு எதுவும் எழுதப்படவுமில்லை, தயாரிக்கப்பட வுமில்லை" எனப் புகழாரம் சூட்டினார்.13

இப்படைப்புடன், ஷவ்வருடைய எழுத்தில் ஒரு சில மாற்றங்கள் தோன்று கின்றன.

1. சமூகக்கதைகள், சமூக நிகழ்ச்சிகள் கருப்பொருளாக்கப் படுவதுகைநெகிழப்படுகிறது.

2. அறிவியல்சார் மெய்யியல் கேள்விகள் நாடகமாந்தர் மூலம் எழுப்பப் படுகின்றன.குறிப்பாக கேட்கப்படுவது: இவ்வுலகத்தை நெறிப்படுத்தி நடத்தும் தெய்வம் உண்டா?

3. "ரோட்டல் தியேட்டர்" அல்லது முழுமையான அரங்கு என்னும் செய்முறைக்கு வடிவம் கொடுக்கப் படுகிறதுபார்வையாளரின் கண்களைக் கவரும் ஆடம்பரக் காட்சிகள், செவிகளை ஈர்க்கும் ஒலி அமைப்புகள் அரங்கில் புதியதோர் "சூழலை" உருவாக்குகின்றன. சடங்கு, இசை, முகமூடிகள், உடலசைவுகள், நடனம் முதலியவை சிறப்புப் பண்பு களாக மிளிரத்தொடங்குகின்றன.

பதினாறாம் நூற்றாண்டில் (1529-33) இஸ்பானிய பேரரசு தென் அமெரிக்காவில் திகழ்ந்திருந்த இன்காப் பேரரசை அழித்ததை கருவாகக் கொண்டது இந் நாடகம். ஐரோப்பிய பேரரசின் பிரதிநிதியாக பிஸ்ஸாரோ என்பவரும், இன்காப் பேரரசின் பிரதிநிதியாக அற்றஹுஅல்ப்பா என்னும் அரசனும் அறிமுகம் செய்து வைக்கப் படுகின்றனர். இவ்விரு பேரரசுகளின் உதயமும் வளர்ச்சியும் பொதுமக்களின் நலிவிலும் , அழிவிலும், இரத்த வெள்ளத்திலும் தங்கியுள்ளன என்பதை வலியுறுத்தும் இந்நாடகம், இருபெரும் காட்சிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் பன்னிரண்டு அங்கங்கள் கொண்டதாக அமைக்கப்பட்டது. முதலாவது காட்சியின் தலைப்பு; "தேடல்/ வேட்டை". இஸ்பெயின் நாட்டிலிருந்து படைவீரருடன் இன்கா நாட்டுக்கு (தற்போதைய ஏக்குவடோர், பெரு நாடுகளின் சில பகுதிகள்) அண்டீஸ் என்னும் மலையைச் சிரமத்துடன் தாண்டி, அற்றஹுஅல்பாவைத் தேடிச்சென்ற பிஸ்ஸாரோ, நிராயுத பாணிகளான இன்கா மக்களைக் கொன்று அவர்களின் அரசன் அற்றஹு அல்பாவை சிறைப்படுத் துகிறான். பிஸ்ஸரோ தேடிச் சென்றது தங்கத்தை. பொன்னைத் தேடும் இம்முயற்சியையும் , தனது மதத்தில் நம்பிக்கை இழந்து வேறொரு தெய்வத்தைத் தேடும் அவனது உளம்சார் முயற்சியையும் இக்காட்சி யின் தலைப்புக் குறிக்கின்றது.

இரண்டாவதுகாட்சி "கொல்லல்" என்னும் தலைப்புக் கொண்டது. அற்றஹுஅல்ப்பா சிறைப்பட்ட தையும், இறுதியில் கொடுத்த வாக்கை மீறிய பிஸ்ஸாரோ அவனைக் கொல்லு வதையும் இது சித்தரிக்கிறது. இத்தலைப்பும், இன்கா அரசனுடைய கொலையையும், பிஸ்ஸ ரோவின் புதிய சமய நம்பிக்கையின் அழிவையும் (இன்கா மக்கள் தமது அரசனை கடவுள் மகன் -கடவுள்- என்றே நம்பினர். அதனால், இவ்வுலகிலேயே கடவுள் இருக்க முடியும் என்ற நம்பிக்கை பிஸ்ஸாரோவில் துளிர்விட்டிருந்தது.) அது குறிக்கின்றது.

வரலாற்றுப் பின்னணியில் எழுதப்பட்ட இந்நாடகம்,மெய்யியல், இறையியல் துறைகளுட் புகுந்து, மரணத்தையும் அதற்குப் பின்வரும் வாழ்வையும்பற்றிய கேள்விகளை எழுப்புகிறது மட்டும் அல்லாது, அவைகளையே கருப் பொருளாகக் கொண்டது என்றும் கூறிவிடலாம்.

இந்நாடகம் மேடையேறிய போது, அதற்குரிய அரங்க அமைப்பும் அதன் வெற்றிக்குக் காரணமாக இருந்தது. மேடையின் மேல் உலோகத் தகட்டினாலான மிகவும் பெரிய வட்டம் தொங்கவிடப்பட்டது. இஸ்பானியரின் செயல்கள் நிகழும் போது, அது வாட்களினால் உருவாக்கப்படும் சிலுவை போல வும், இன்கா மக்களின் நிகழ்வுகளுக்கு தங்க இதழ்கள் விரித்த சூரியனாகவும் விரியும். (சூரியக் கடவுளை இன்கா மக்கள் வணங்கினர்) சூரிய, இதழ்களின் கீழ் அற்றஹு அல்ப்பாவின் அருண்மின், அவன் சிறைவைக்கப் பட்ட காலை தனக்களஞ்சியம் போன்றவை தோன்றும். மேடையின பின்புறம் உயர்த்தப்பட்டு இருந்தது. அதில் இன்கா மக்கள் நடமாடினர். அது, மலையேறித் தம்மை நோக்கி வரும் ஐரோப்பிய படைவீரரைத் தூர நின்று உற்று நோக்கும் பிரமையை கொடுத்தது. இப்படைவீரர் இன்கா மக்களைத் கொலை செய்யும் போது, இரத்தச் சிவப்பு நிறச் சீலை மேலே தொங்கும் வட்டத்திலிருந்து விழுந்து கொலைக்காட்சியை முற்றாக மறைக்கும்.

சீன அரங்கில் கையாளப்படும் போர்முறைகள், சிறகைகள் பொரு ந்திய பல் நிற ஆடைகள், உலோக நகைகள், அச்சுறுத்தும் முகமூடிகள், காட்டிலும் சுடுகாட்டிலும் கேட்கும் பயங்கர ஒலிகள் இன்கா மக்களின் திருச்சடங்கு முறைகள், மந்திரங்கள் முதலியன ஒருங்கிணைந்து பார்வையாளரின் கவனத்தை ஈர்ந்தன.

பாத்திரங்கள் தங்களை அறிமுகம் செய்யும் முறை, ஒருசில பாத்தி ரங்களின் மனக்குமுறல்கள், போராட் டங்கள் போன்றவற்றை உரைஞர் எடுத்தியம்பும் விதம், உரைஞன் நடிகனாக மாறுகின்ற தன்மை முதலி யவை நாடகத்துக்கு சிறப்பை அளித் தன. 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

+ ஏக்குஉஸ்

இலத்தீன் மொழியில் குதிரை எனப்பொருள்படும் இந்நாடகம், உண்மைநிகழ்ச்சி ஒன்றைத் தழுவி எழுதப்பட்டது. 73ல் லண்டனில் அரங்கேற்றப்பட்ட இந்நாடகம், நியூயோர்க் நகரில் 1209 முறை மேடையேறி சாதனை படைத்தது. இந்நாடகத்தில், உலகப் புகழ்வாய்ந்த றிச்சட் பேர்ட்டன், அந்தனிபேர்க்கின்ஸ் போன்றோரும் நடித்துள்ளனர். 75ல் ஐந்து மிக உயர்ந்த நாடக விருதுகளைத் தட்டிக்கொண்ட துடன் திரைப்படமாக்கப்பட்ட பெருமையும் இதற்கு உண்டு.

இதில் கருப்பொருளாக அமைபவை:

1. தனிமனித உரிமைகளுக்கும் சமுதாயக் கடமைகளுக்கும், இயல்பூக்கத்துக்கும் சமுதாயக் கட்டுப்பாட்டிற்கும் இடையில் உள்ள சிக்கல்கள், போராட்டங்கள்.

2. பால் உணர்ச்சிக்கும் சமயத்துக்கும் உள்ள உறவு

3. மனிதனுக்கும் தெய்வத்துக்கும் உள்ள தொடர்பு.

மனநோய் மருத்துவரின் உதவியுடன் எழுதப்பட்ட இந்நாடகம் மோடிப் படுத்தப்பட்ட, நடிப்பு, உரை, நினைவுக் காட்சிகள் போன்றவை சிறப்புச் செய்ய துப்பறியும் கதைபோல் விறுவிறுப்பாகவும் அறிவுக்கு விருந்தாகவும் மேடையேற்றப்பட்டது.

அவன் ஸ்ராங் என்பவன் ஓர் இளைஞன்; மாட்டீன் டிசாட் என்பவர் உளவியல் மருத்துவர். எஸ்தர் சலமோன் என்பவள் நீதிபதி; ஜில் என்பவள் இளம் பெண்.

குதிரை இலாயம் ஒன்றில் அலனும் ஜில்லும் உடலுறவு கொள்ள முயன்றது தோல்வியில் முடிகின்றது. ஆத்திரங்கொண்ட அலன் அங்கிருந்த குதிரைகளை ஈட்டியினால் குத்திக் குருடாக்குகிறான். அச்செயலைக் கண்டித்து நீதிபதி அவனைக் குணமாக்க மருத்துவரிடம் கையளிக்கிறாள். மருத்துவர் தனது ஆய்வில் கண்டுபிடிப்பவை:

1. கொண்டிருந்த முரண்பட்ட குறுகிய சமய நம்பிக்கை

2. குதிரையின் வடிவில் கடவுள் மேல் அலன் வைத்திருந்த இயற்கையுடன் ஒட்டிய சமய பக்தி.

3. அலன் முதன்முதல் குதிரையில் சவாரி செய்த போது அவன் பெற்ற பாலுணர்ச்சி அனுபவமும், இவ்வுணர்ச்சி கீழ்த்தரமானது, தவிர்க்கப்படவேண்டும் என்ற சமூக விதியினால் அவனில் எழுந்த வன்முறை உணர்ச்சியும்.

அலனின் குற்றத்தை அலசி ஆராய்ந்து குணமாக்க முனைந்த மாட்டீன், அலனிலுள்ள "வெறிபோன்ற உணர்ச்சியும் பக்தியும், சமூக விழுமியங்களைக் கட்டிக்காத்தும் அவைகளில் நம்பிக்கை யிழந்த தன்போன்றோரின் "பக்தியின்மை"யை உணர்த்திக்காட்டியதை புரிந்துகொண்டார். நாடக இறுதியில் குணமாக்க வந்த வைத்தியரே, கனவிலும் ''குதிரை"யின் நினைவாகவும் குதிரை ஒலியினால்பாதிக்கப்படும் 'நோயாளி" யாகவும் மாறுகிறார்.

இந்நாடகத்தின் மேடையமைப்பு: வட்டமாக வைக்கப்பட்டிருந்த மரக்குத்திகளின் மேல் குத்துச் சண்டை நிகழிடத்தை நினைவுபடுத்தும் சதுர வடிவத்தில் வேறு மரக்குத்திகள் வைக்கப்பட்டிருந்தன. கூரிய ஒளியூட்டப்பட்ட வட்டமான அரங்கைச் சுற்றி பார்வையாளரின் இருப்பிடங்கள் முக்கோணப்பட அமைக்கப்பட்டிருந்தன. அதனால் பார்வையாளருக்கு மருத்துவ மனை ஆய்வறையில் நிகழ்ச்சி ஒன்றி னைப் பார்ப்பதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது.

நடிகர்கள், குதிரையைப் போல் நடிக்காது, தமது தலைதெரியும்படி முகமூடி அணிந்து அதற்குரிய ஆடை அணிந்து அவர்களே குதிரைக்கு உருவம் கொடுப்பது பார்வையாளருக்கு தெரிய வேண்டும் என ஷாவ்வர் தனது நாடகக்குறிப்பில் எழுதியது கவனிக்கத்தக்கது.[15]

+ அமாதேயுஸ்

இது 1791ல் இறந்த ஒப்பற்ற இசைமேதாவி வொல்வ்காங் அமாதேயுஸ் மோசாட் என்பவரின் வாழ்க்கையைக் கூறுவது. லண்டனில் 1979 ல், போல் ஸ்கோவீல்ட், நெறியாளர் பீற்றர் ஹோள் போன்ற சிறந்த கலைஞர் பங்குபற்றி அரங்கேறிய இந்நாடகம் அங்கு பல விருதுகளைப் பெற்றது. அடுத்த ஆண்டு, அமெரிக்காவில் மேடையேற்றப்பட்டு, ஐந்து விருதுகளைப் பெற்று, 1984ல் திரைப்படமாக்கப்பட்டு, எண்பதுகளில் நடைபெற்ற மிகவும் சிறந்த கலாச்சார நிகழ்ச்சியாக பலராலும் கணிக்கப்படும் பெருமை பெற்றது. இதுவே ஷாவ்வரின் ஆக்கங்களில் சிறந்தது என்றும் பலர் கூறுவர்.[16]

நாடகத் தொடக்கத்தில் இசைவாணன் சலியேறி, வயது போனவராகக் கதிரையில் அமர்ந்து காட்சியளிக்கிறார். பின்னணியில் "கொலைகாரன்" "கொலைகாரன்" என்று முணுமுணுக்கும் குரல்கள் கேட்கின்றன. அமாதேயுஸைக் கொலை செய்த குற்றத்துக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, பார்வையாளர்களைப்பார்த்து தனது பாவசங்கீர்த்தனத்தைக் கேட்கும்படி உரக்கமாகக் கேட்டுக் கொள்கிறார். சலியேறி தனது இளமைபற்றியும், இலட்சியக் கனவுகள் பற்றியும் கூறி, தனது வாழ்வின் ஒரே ஒரு குறிக்கோள் இசைவாணனாக மாறவேண்டும் என்பன வலியுறுத்துகிறார். இக்கனவை நிறைவேற்ற உதவினால் தான் தூயவனாக வாழ்ந்து தெய்வப் புகழ்பாடுவேன் எனத் தன் தெய்வத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள கூறுகிறார். ஓரளவு வெற்றி பெற்றிருக்கையில், அமாதேயுஸ் உடைய வரவு தனது புகழுக்கும் வாழ்வுக்கும் இடையூறாக இருந்ததை அறியத்தக்கதும், வயதுமுதிர்ந்த சலியேறி கதிரையைவிட்டு எழுந்து, மேலாடையை அகற்றி இளமையான உருவத்தில் உரையாடலைத் தொடர்கின்றார். அக்கட்டத்திலிருந்து, அமாதேயுஸ், சலியேறி இருவரது வாழ்வும் பார்வையாளரின் கண்முன் நடமாடவிடப்படுகிறது. தன்னிலும் தலைசிறந்த மாமேதை அமாதேயுஸ் வியன்னா நகரத்துக்கு வந்துள்ளதை அறிந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைச் சந்தித்து அவரின் சிறப்புக்களை ஊசித்துக்கொள்கிறார் சலியேறி அதேவேளை, அமாதேயுஸின் "சிறுபிள்ளைத்தனமும"காட்டப்படு கிறது. அதைத் தொடர்ந்து அமா தேயுஸ் உடைய திறமை வெளி உலகுக்குத் தெரியாதவாறு செய்ய சலியேறி எடுத்த முயற்சிகள் காட்டப்படுகின்றன. தமது ஒப்பந்த த்தை அமாதேயுஸ் உடைய திறமைக்கு ஆதாரமாக இருக்கும் தெய்வமே அதை முறித்துவிட்டது என எண்ணிய சலியேறி தெய்வத்துக்கே சவால் விடுக்கிறார். நட்புக் காட்டி, தவறான ஆலோசனை வழங்கி அமாதேயுஸ் உடைய ஆக்கங்கள் அமுக்கப்பட வழி வகுத்தார் சலியேறி. அமாதேயுஸ் உடைய வாழ்வின் வெற்றியை தான் தடுத்ததன் மூலம் தானே தன் எதிரியைக் கொன்றேன் என ஒப்புக்கொண்டார். தனது பகை வனின் பெயர் வானளாவப் போற்றப் படு போது தனதுபெயரும் அதனு டன் இணைக்கப்பட வேண்டும் எனக்கூறி, தற்கொலை செய்ய முயற் சிக்கிறார்; அதில் தோல்வியும் காண் கிறார். தோல்வியின் கசப்பை உணர்ந்த சலியேறி மீண்டும் கிழவனாக மேடை யில் தோன்றி தன்னைப் போன்று சாதாரண திறமை கொண்டோர் பற்றிய குறிப்புக் கூறி "ஆமேன்" என்ற நிறைமொழியுடன் கதையை முடித்துக் கொள்ளுகிறார்.

இந்நாடகத்தின் ஒருசில சிறப்புக்கள்:

(1) இசைமாமேதை அமாதேயுஸ் உடைய வரலாறு அவரது எதிரியின் வார்த்தை, வாழ்க்கையால் காட்டப்படுகிறது.

(2) இரண்டு பாத்திரங்கள் நடமாடவிடப்படுகின்றன: ஒருவர் சாதாரணர்; மற்றவர் உலக மாமேதை. முன்னவர், தான் வாழ்ந்த காலத்தில் புகழ் உச்சியில் இருந்தவர்; மற்றவரோ இறந்த பின்னரே இறவாப் புகழ்பெற்றார். இதன் மூலம் சாதாரணமாகவும் மிகவும் சிறந்ததுமாக திறமைகளுக்குள்ள ஆக்கதாக்கங்கள்வெளிக் கொணர ப்பட்டுள்ளன.

(3) இவ்விருவருடைய முரண் பாடுகளின் பின்னணியில் மனிதனுக்கும் தெய்வத்துக்கும் உள்ள உறவு ஆராயப்படுகிறது.

(4) அன்றைய ஐரோப்பிய நாகரீகத்தின் உறைவிடமான வியன்னா நகரத்து அரசியல், ஒழுக்க, சமூக, சமயசீர் கேடுகள் சித்தரிக்கப்படுகின்றன.

(5) மேடையில் காட்டப்படும் நிகழ்ச்சிகளில் பார்வையாளரும் பங் காளிகளாக மாறுகிறார்கள்.

(6) துப்பறியும் கதைபோல், அமாதேயுஸை யார் கொன்றது என்ற கேள்வியை சலியேறி எழுப்பி தனது எதிரியின் உடலைத்தான் கொல்லாதுவிட்டாலும், துன்பங்களை வருவித்தமையின் மறைமுகமாகத் தானே கொன்றேன் என்று கூறுவதும், இறுதியில் முக்காடு போர்த்த உருவம் ஒன்று அமாதேயுஸ் உடைய வீட்டுக்கு அருகே நடமாடுவதும் விறுவிறுப்பைக் கொடுக்கின்றன.

(7) சலியேறி உரைஞனாகவும் மாறி நடிக்கும்போது மற்றைய பாத் திரங்கள் உறைநிலையில் நிற்பதும் நாடகத்தில் கையா ளப்பட்ட நல்ல நுட்பம். முழுக்க முழுக்க ஈற்றில், நவ வேட்கை வாதி என பீற்றர் ஷாவ்வரைக் கூற முடியாதுவிட்டாலும், "ரோட்டல் தியேட்டர்" என்பதை நடைமுறைப் படுத்தியது அவரின் பெருமைகளில் ஒன்றாகும்.

## அடிக்குறிப்புகள்

1. பார்க்க, ஏபேர்ள் தோமஸ் எழுதிய "பீற்றர் ஷாவ்வர்" அன் அன்னெற் றேற்றட் பிப்ளியோ கிறவி"முகவுரை, பக்XViii- XXii இந்நூல் ஏ. ரி. என்று இனி குறிக்கப்படும்.
2. 1964 ல் ஆர்த்தோவைப்பற்றிய வட்டமேசைக் கருத்தரங்கில், பீற்றர் ப்றூக், பீற்றர் ஹோல்,சார்ள்ஸ் மறவிற்ஸ் போன்றோருடன் பீற்றர் ஷாவ்வரும் கலந்துகொண்டது நினைவிற் கொள்ளப்பட வேண்டும்.
3. ஸ்ரேஜ் அன்ட் ரெலிவிஷன் ருடே என்னும் சஞ்சிகையில் ஆர். பீ மரியற்றிக்கு அளித்த பேட்டி,பார்க்க ஏ.ரி. பக்.22,
4. அங்கோர் (11.64)என்னும் சஞ்சிகைக்கு அளித்த பேட்டி. பார்க்க, ஏ.ரி பக். 28,
5. அதே இடம்.
6. ஈவினிங் ஸ்ராண்டட்டுக்கு (8-7-64) அளித்த பேட்டி. பார்க்க, ஏ.ரி. அதே பக்கம்
7. நியூயோர்க் ரைம்ஸ்க்கு (24.10.65) அளித்த பேட்டி பார்க்க ஏ.ரி. பக்.29.
8. லூயிஸ்வில் குறியர் ஜேர்னலுக்கு (7-11-65) அளித்த பேட்டி பார்க்க, ஏ.ரி.பக், 30
9. சண்டே ரைம்ஸ்க்கு (29-7-73)அளித்த பேட்டி. பார்க்க,ஏ.ரி.பக்.33
10. உவிமின்ஸ் உவெயர் டெயிலிக்கு(10.9.74) அளித்த பேட்டி. பார்க்க,ஏ.ரி.பக்,34-35
11. பார்க்க ,சி,ஜே, ஜனக்காரிஸ், பீற்றர் ஷாவ்வர், பக்,2-3
12. பார்க்க அதே நூல், பக்,27-43,
13. பார்க்க, ஏ.ரி.பக்,XVi,
14. பார்க்க த றோயல் ஹன்ற் ஒவ்த சன், (பென்குவின் நாடகங்கள் 1981)
15. பார்க்க ஏக்குஉஸ் ( பென் குவின் நாடகங்கள்) 1977
16. பார்க்க சி.ஜே.ஜனக்காரிஸ், பக், 127, இந்நாடகத்தை எண்பதுகளில் ஜேர்மனியில் பார்த்துச் சுவைக்கும் வாய்ப்பு இக்கட்டுரையாளருக்குக் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராஜன் நினைவாக

சில்லாலை மாதா பெற்ற
பல்கலை வேந்தர் செல்வ
நல்கலை ராஜன் என்பான்
சொல் செயல் சிந்தனையை
எல்லை இல்லாத காலம்
நிறுத்தியே சென்ற செய்தி
உறுத்தது நெஞ்சந் தன்னை.

நல்லதோர் நடிகனாக
நற்கவி வல்லோனாக
அற்புத விருந்தளிக்கும்
நாடகம் விருந்தளிக்கும்
நாடகம் படைக்குமாற்றல்
குவிந்த நற்சிந்தையாளன்.
பாடலைப் புனைந்து பாடும்
தான்தோன்றிக் கவிராயந்தான்.

திருமறைக் கலாமன்றம்
மருதானை டவர் அரங்கில்
ஒன்றொன் பதன்றில்
கலைவண்ணம் 95-இல்
கவியரங்கில் கொலுவிருந்து
கவிக்கோலம் நீ போட



கார்கோலம் கண்டுமயில்
தோகைவிரித் தாடுதல்போல்
சபையோர்கள் உளமகிழ்ந்தார்.

உடல் தளர்ந்த போதும்
உந்தன் உள்ளம் தளரவில்லை
வாழத்தான் வேண்டுமெனில்
வாழ்வதென்ன லேசாமோ?

என்ற கருப்பொருளை
வண்ணத் தலைப்பினிலே
மெல்லப் பொதிந்துவைத்து
தலைமைக் கவிஞனாயும்–சுவை
கிண்ணத்தில் பருகத்தந்தாய்

வாழ்க்கை வகுத்தளிக்கும்
பல்சுவைச் சவால்களுக்கு
வண்ணக் கவிதீட்டி
கண்ணில் படவைத்து
காலத்தை வென்றவனே
கருத்தில் செறிந்தவனே
உருக்குமுன் பிரிவெண்ணி
இருக்குமுன்
குடும்பத்தார்க்கு
இறையாசி வேண்டுகிறோம்.

*–திருமறைக்கலாமன்றம்*

*அன்பு என்பது இதயம்உள்ளவர்களுக்குமட்டுமே கிடைக்கும் பொக்கிஷம். ஒரே உணர்வுடைய இதயத்தை அன்பு செய்யதெரியாவிட்டால் இறைவனைஅன்புசெய்ய முடியாது.


*மனித தத்துவம் முரண்படலாம், காலதத்துவம் முரண்படாது.

*வாழ்க்கை குரூரமானதென மறுபடி மறுபடி நிரூபிக்கப்பட்டாலும்வாழ்வின் மீதானகாதலை யாராலும் உதறிவிடமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் நாடகம் ஓர் நோக்கு



### அரங்கக்கூத்தன்

இன்றைய சூழலில் சிறுவர்கள் பற்றியும் அவர்களின் எதிர்காலம் பற்றியும் சிந்திக்க வேண்டிய தேவை உண்டு. போர்க்காலச்சூழலில் வளரும் பிள்ளைளகளின் உளவளர்ச்சி பாதிப்புறா வகையில் கற்பித்தல் முறைகளும், கலை விளையாட்டு முறைகளும் சரணாலயம் அமைத்துக் கொடுக்க வேண்டும். அந்த வகையில் சிறுவரின் ஆளுமை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரியக் கூடியது 'சிறுவர் நாடகம்" எமது கல்வி முறைகளும் கற்பித்தல் வழிகளும் சுயமாக சிந்திக்கும் மனித சமூகத்தை உருவாக்கத் தவறிவிட்டன. இன்று ஆரம்ப கல்வி கற்பித்தலுக்கு பெரிதும் துணைபுரியுமென ஏற்றுக்கொள்ளப்பட்டதும் சிறுவர் உருவாக்கலில் பெரும் பங்கு வகிக்கக் கூடியதுமான சிறுவர் அரங்கு ஈழத்தில் தற்போது முனைப்புப் பெற்று வருகின்றது. இவ்அரங்கின் தன்மைகளையும் இது தொடர்பான பிரச்சனைகளையும் அலசுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிறுவர் அரங்கானது மேலை நாடுகளில் மிகவும் வளர்ச்சி பெற்றவொன்றாகக் காணப்படுகின்றது. இதற்கென பல சிறுவர் அரங்குகள் செயற்படுத்தப்படுகின்றன. ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, போலந்து, செக்கோசிலவாக்கியா போன்ற நாடுகளில் அரங்கு, சிறுவரின் அறிவூட்டல் சாதனமாக தொழிற்படுகின்றது. ஜேர்மனி போன்ற நாடுகளில் கல்வி அரங்காகவே (Educationnal Theatre) தொழில் படுகின்றது. இந்நாடுகளில் இன்றைக்கு பலவருடங்களுக்கு முன்னேயே இவ்அரங்கப் பயில்வும் எண்ணக்கருவும் உருவாகி இதனூடு வளர்த்தெடுக்கப்படும் சிறார்களின் தொகையும் அதிகம் சோவியத்தில் மட்டும் 150 நாடக அரங்குகள் இருந்ததாக சொல்லப்படுகின்றது. சிறுவர் தமது விருப்பப்படியே தாம் விரும்பும் துறைகளில் தம்மை வளர்த்துக் கொள்ள பல சுதந்திர அரங்குகள் செயற்படுத்தப்படுகின்றன. ஈழத்தில் சிறுவர் அரங்கானது மிகவும் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. 'சிறுவர் நாடகம்" சோமசுந்தர புலவர் போன்றவர்களால் எழுதப்பட்டாலும், சரியான எண்ணக் கருவை உள்வாங்கி முனைப்புடன் செயற்படத் தொடங் கியது. குழந்தை சண்முகலிங்கத்தால் எழுதப்பட்டு தார்சீசியசினால் நெறியாள்கை செய்யப்பட்ட 'கூடிவிளையாடு பாப்பா' வுடனேயேயாகும். பலவற்றை மேலைத்தேசத்தில் இருந்து பெற்றுக் கொண்ட நாம், இதனை பெறாது காலம் தாழ்த்தியது துரதிஷ்ட வசமானதே.

சிறுவர் அரங்கானது சிறுவரின் ஆளுமையையும், உளவளர்ச்சி, அறிவு விசாலிப்பு,தன்நம்பிக்கை உறுதி, கூட்டுத்தொழிற்பாட்டுணர்வு ஏற்றம், தலைமைப்பண்பு,தம்மிடையே இயைபட்டு ஒழுகல் விட்டுக் கொடுக்கும் போக்கு சமுதாய இயைபுஆகியன வளர்த்தெடுக்கப்படும் களமாகவும் சுயமாகச் சிந்திக்கும் செயலாற்றல்மிக்க சந்ததியை உருவாக்கும் பணிக்கூடமாகவும் அமைய வேண்டும். சிறுவர் நாடகங்கள் தனித்துவமானவை. சிறுவரின் மனோநிலை அனுபவ எல்லைக்குள், அவர்களின் விருப்புக்குரிய ஆடல் ,பாடல், நகைச்சுவை, விளையாட்டுஎன்பன விரவி நேரடிப் போதனைகள் வலிந்து புகுத்தப்படாத கவர்ச்சிகர அரங்க நிகழ்த்திக்காட்டுகையாக அமைதல் வேண்டும். சிறுவர் நாடக பணிக்கூடத்தின்மூலம் 67 திறன்கள் வளர்த்தெடுக்கப்படலாமென கூறப்படு கின்றது. இச்சிறுவர் நாடகமும் பெரியவர்களால் நடிக்கப்படுவதாகவும், சிறுவர்களால் நடிக்கப்படுவதாகவும் இருவகை மாதிரிக்குள் அடக்கப்படும் எனினும் இரண்டும் சிறுவரை மையப்படுத்தியே, சிறுவரையே இலக்குப்பார்வையாளராக (Target audiance) கொண்டு அமைக்கப்பட வேண்டியது.இதில் சிறுவருக்காக சிறுவர் நடிக்கின்ற நாடகம் தனித் துவமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணக்கருத்து

சிறுவர்விளையாட்டை விரும்புவர். எந்தக் குழந்தைக்கும் விருப்புக்குரியது விளையாட்டே.எனவே நாடகத்தில் விளையாட்டுப்பயன் படுத்தப் படலாம்.ஏன், நாடகத்தையே ஒரு விளையாட்டாகஆக்கும்போது சிறுவரின் உற்சாகத்திற்கு குறைவு இருக்காது .உளத்தடையின்றி ஈடுபடுவர். பார்வையாளர்களாகிய சிறுவரும் மனஎழுச்சியுடன் பங்குகொள்வர். ஆடலும் பாடலும் சிறுவரைக் கவர்கின்ற செயற்பாடுகள். எனவே இயன்றளவு சிறுவர் ஆடக்கூடிய இலகுவான ஆடல்முறைகளையும்(அதுசெம்மை யுற்று இருக்கவேண்டியஅவசியம் இல்லை) சிறுவரால் இலகுவாக உற்சாகத்துடன் பாடக்கூடிய பாடல் வகைகளையும் பயன்படுத்துவது சிறுவர் அரங்கை குதூகலத்தில் ஆழ்த்தக் கூடியது. இதனால் அரங்க உறவையும் (Theatrical relation) வன்மையாகவைத்திருக்க முடியும். நாடகத்தினூடுசொல்லப்படுகின்ற செய்தியும் நேரடி உபதேசம் போல் அமையாது அந்த நாடகத்தினூடு இழையோடத்தக்கதான அவன் அனுபவ எல்லைக்குள் சொல்லத்தக்கனவாக அதே வேளை களிப்பூட்டல்களூடு அடிபட்டுப் போகாது மிஞ்சுவதாகவும் அமைதல்வேண்டும்.

அதுமட்டுமன்றி சிறுவரின் மனங்கள் மாற்றத்தை விரும்புவன.எனவே அரங்கு இயங்கிக்கொண்டு இருப்பதாக அமையவேண்டும். வார்த்தைகளும் அசைவுகளும் தொய்வைஏற்படுத்தி சிறுவரின் இரசனையில் வெறுப்பை ஏற்படுத்தாது இயக்குவிக்கப்பட்டுக் கொண்டிருக்கவேண்டும்.வார்த்தைகளில் அதிகம் தங்கி இருக்காமல் இயன்றளவு உடல் மொழிகளையும் (Body Language) பயன்படுத்தவேண்டும்.

அடுத்து பல நிறங்களும், விநோதங்களும், அதிசயங்களும் சிறுவரை வெகுவாக கவரக்கூடியவை. எனவே மேடை காட்சி அமைப்புகளில் விநோதமானவற்றையும் (நாடக தேவையுடன்ஒட்டி.உதாரணமாக சிங்கம் மாலை அணிந்து முடி புனைந்துவருதல், நரி கண்ணாடி அணிந்திருத்தல், குரங்குகள் ஏறி இறங்கத் தக்க மரங்கள், அவை பாய்ந்துவரக் கயிறுகள், சிவப்புநிறக் காகம்) கண்கவர் நிறங்களையும் காண்பியங்களையும் பயன்படுத்தி அரங்கைக் கவர்ச்சிக் குரியதாக்கலாம். இவைசிறார்களுக்கு ஆர்வத்தை தரும் விடயங்கள். அதுமட்டுமன்றிபார்வை யாளர்களாயுள்ள சிறுவரையும் ஓரளவு பங்குகொள்ள வைக்கத்தக்க வகையில் அரங்கை நோக்கி கேள்வி எழுப்புவது, கரகோஷங்களை செய்யப்பண்ணுதல், அவர்களையும் உரையாடவைத்தல், மேடையில் இருந்து அவர்களிடம் இறங்கிச் செல்லுதல் போன்ற செயற்பாடுகளினால் அரங்க உறவையும் சிறந்த முறையில் பேணமுடியும்.

இவற்றை உள்வாங்கி திறம்பட வளர்த்தெடுக்கப்படும் அரங்கினூடு மாணவர்களின் அழகியல் உணர்வு, இரசனைப்போக்கு,ஆக்கத்தின் உளவியல்திறன், அவதானம், நிதானம், கற்பனை, பகுத்துப்பார்க்கும் திறன், பொதுநலப்போக்கு,தன்னம்பிக்கை, சுறுசுறுப்பு, பேச்சுப்பயிற்சி, உடல் விருத்தி போன்ற திறன்கள் மிளிருமென்பதில் ஐயமில்லை.

## அரங்க தயாரிப்பு

சிறுவர் அரங்கில் மிகமுக்கியமானது இவ்வரங்க தயாரிப்பு.எண்ணக்கரு சரிவர நிறைவேற்றப்படுதல் தயாரிப்பின் பொழுதிலேயே. ஏனெனில் இவ்வரங்க வெற்றியே சிறுவரை சுதந்திரமாகவும் உற்சாகமாகவும் ஈடுபட வைப்பதிலேயே தங்கி இருக்கின்றது. அவனுக்கு அங்கே எந்தவித உளத் தடையும் ஏற்படாதவாறு அவன்இதில்ஈடுபடவேண்டும். தயாரிப்பில் ஈடுபடுபவர் முதலில் சிறுவரின் வயது,பின்னணி,சமூகம்,வளர்ப்பு முறை, உளவியல் பண்பு போன்றவற்றை ஓர் ஆசிரியர் அறிந்திருந்திருப்பது கற்பித்தலுக்கு எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு ஓர் சிறுவர் நாடக தயாரிப்பாளரும்அறிந்திருக்க வேண்டும். சிறப்பாக சொல்லப் போனால் ஓர் உளவியலாளனாக அவர் மாறவேண்டும்.

ஏனைய நாடகங்களைப்போல எடுத்த எடுப்பிலேயே நாடகப்பிரதியை கொடுத்து வியாக்கியானம் தொடராமல், சிறுவர்களுடன் பழகி, கதைத்து, அவர்களைப்பற்றி அறிந்து அவர்களுடன்பாடி,ஆடி,விளையாட்டில்ஈடு பட்டு அவர்களின் உளத்தடைகளை உடைத்து,புதிதளித்தல் (Improvization)போன்றவற்றில் அவர்கள் திறன்களை இனங்கண்டு அவர்கள் அனைவரையுமே மிக நெருங்கி வரப்பண்ணிய பின்பே நாடகத்தை படிப்படியாக ஆரம்பிக்கவேண்டும். நடிபாக நிச்சயிப்பு(casting) முதலாக எவருடைய மனங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தாவகையில் நடாத்தப்பட வேண்டும்.சரியாக தயாரிப்பு நடைபெறுமாயின் பின்வருவனவற்றை அவதானிக்க முடியும். ஆரம்பத்தில் வெட்கப்பட்டு ஒதுங்கும் சுபாவமுள்ளவர்கள் படிப்படியாக சேர்ந்துவிளையாடுவதும், ஆடுவதும் பாடுவதுமாக இணைந்துகொள்வர். இசையையும் தாளத்தையும் உள்வாங்கி ஆடல்பாடல்களை திறமையாக செய்வார்கள்.எதற்கும் முண்டியடித்துக் கொண்டு முன்னுக்கு வருவார்கள், கூச்சமின்றிக் கதைப்பார்கள், பயமின்றி தங்கள் கருத்துக்களை கூறுவார்கள். பாடசாலையாயின் வரவுகள் அதிகரிக்கும். அதிக உற்சாகத்துடன் காணப்படுவார்கள், அவர்களின் திறமை வெளிப்பாட்டு வேகம் அதிகரித்துக்கொண்டு செல்லும். இவை நல்ல நாடகத் தயாரிப்பின் வெளிச்சக் கோடுகளாய் இருக்கும்.

பாத்திர தெரிவின் பின் பாத்திர வெளிப்பாடும் அவனூடாகவே வெளிப்பட வேண்டும். அவனின் உளப்பாங்கு, சிந்தனைப்போக்கு, ஆர்வம், கற்பனை விருத்தி போன்றவற்றை அறிந்து செயற்படுவதுஅவசியம். எதையும் திணிக்கக் கூடாது. தயாரிப்பாளர் பெரியோரின் கண்ணோட்டத்தில் பாத்திரவாக்கம் செய்துகாட்ட முயலல்ஆகாது. ஏனெனில் அவன் அனுபவ எல்லை கடந்துசிந்திக்கும்போது அவன் அப்படியே அவரைப் போலவே செய்ய (imitate) முனைவான். இது அவனுள் நேர்மையின்மையை தோற்றுவித்து ஓர் போலித்தனத்தை அவனுள் வளர்த்துவிடும். எனவே ஒன்றை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். பிள்ளைகள் ஒவ்வொருவரும் தனி ஆட்களே! ஒவ்வொரு பிள்ளைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு உள்ளார்ந்த ஆற்றல், நாட்டம், வெறுப்பு,தனித்துவம் என்பன இருக்கும். எனவே பிள்ளை தன்னைக் கண்டு பிடிக்கவும், (discovering)சூழலைப் புரிந்து கொள்ளவும், சுயவிமர்சனம் செய்யத் தக்கதுமான வழிமுறைக்கு இட்டுச் செல்ல தயாரிப்பாளர் ஓர் உந்து விசையாக செயற்பட்டு சிறுவனுள் உரைந்திருக்கும் திறமையுடைய 'தனித் துவமான மனிதனை'உலுப்பிவிட்டு இயக்கிடப்பண்ணல் வேண்டும்.

எனவே சிறுவர் நாடகம் செய்ய முற்படுபவர், சிறுவர் நாடக எண்ணக்கருவை தெளிவுற விளங்கிக் கொள்ளவேண்டும்.மேலைத் தேசங்களில் இந்நடாத்துனர்க்கே பலவருட பயிற்சிகள் நடாத்தப்படு கின்றன.எனவே சிறுவர் நாடகத்தில் ஆர்வமுள்ளவரும் பயிற்றுவிப்பவரும் நிச்சயம் தம்மை தெளிவுற தயார்ப் படுத்திக் கொள்ளவேண்டும்.

### எதிர் கொள்ளும் சிக்கல்கள்

ஈழத்தில் இப்பொழுது இரு வருடங்களாக கல்வித்திணைக்களம், நடாத்தும் மொழித்திறன் போட்டிகளில் தரமான பல சிறுவர் நாடகங்கள், மேடையேற்றப்படுவதனை காணக் கூடியதாகவுள்ளது. ஆயினும் இன்னும் பாடசாலைகள், நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், மன்றங்கள் போன்றவற்றில் சிறுவரைக் கொண்டு பெரியவர் களுக்கான நாடகம் நடிக்கவைத்து இரசிக்கும் அறியாமை காணப்படுகின்றது. இதுபற்றி நாம் சிந்தித்தல் அவசியம்.

இராமனாக,சீதையாக கண்ணகி, மாதவி,கோவலனாக ஐந்து வயதுப் பிஞ்சுகள் வேடமிட்டிருக்கும்,தன் வயதுக்கும் அனுபவத்துக்கும் அப்பால் நின்று காதல், வீரம் சோகமென விரலு க்கு மிஞ்சிய வீக்கத்துடன் வசனம் பேசி ஒப்பிவித்துக் கொண்டிருக்கும், அதனை பார்த்து இரசித்துக்கொண் டிருப்பார்கள் படைப்பின் திலகங்கள். இந்த தவறை அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. பங்கு கொள்ளும் பிள்ளைக்கு புரியாத களங்களையும், சூழலையும் பாத்திரங்களையும் படைத்து அதனை கொண்டு வந்து பிள்ளையிடம் திணித்து, 'இப்படி பேசு' 'அப்படிப் பேசு"என தமது பெருங்குரலால் பேசிக் காட்டி மனனத்திணிப்புச் செய்து; "நில்", 'திரும்பு", 'நட','இரு", எழு ம்பு" என அசைவுச்சித்திரவதை செய்து பிள்ளையைவாட்டி எடுக்கத் தொடங்குவர். ஒத்துவராத பிள்ளை யிடமிருந்து அதை பறித்து வேறு பிள்ளையிடம் கொடுப்பர். பறிகொடுத்த பிள்ளையின் மனப்பாதிப்பானது அவனுள் இருக்கும் தன்னம்பிக்கையை அறுத் தெறிந்து கலையிலேயே வெறுப்பை உருவாக்கிவிடும்.



தயாரிப்பாளனோ சர்வாதிகாரியாக நின்று கொண்டு அவனின் ஒவ்வொரு , அசைவு, பேச்சு எல்லாவற்றிலும் தானே நின்று கொண்டு பொம்மைகளாக பிள்ளைகளை இயக்குவிப்பர். அவர்கள் தமது சுயசிந்தனை, கற்பனை, ஆற்றல், எதனையும் பயன்படுத்தாது, போலியாக, பொம்மையாக, உள்ளுணர்வு உந்துதலின்றி அப்பாத்திரத்தை ஒப்பு விப்பர். இறுதியில் "நல்லாய் செய்தாய்" என்ற பாராட்டு மகிழ்வோடு பிள்ளை ஒதுங்கி விடும். தயாரிப்பாளனுக்கோ பெருவெற்றியின் உற்சாகம். அந்த சிறாரின் மனப்பாதிப்பும் உளரீதியான மழுங்கடிப்பும் அவருக்கு விளங்கு வதில்லை.

இவ்வாறே மரபு வழி நாடகங்களான 'கூத்து' இசை நாடகம் போன்றவற்றை சிறுவர்களுக்கு பழக்க நினைப்பவர்களும் சிறுவருக்குரிய கதைகளையோ, அல்லது இலகுவான இராகங்களையோ பயன்படுத்துவதில்லை. பழைய நாடகங் களையும் வாய்க்குள் நுழையாத அடுக்குத் தொடர்சொற்களைக் கொண்ட பாடல்களை பயன்படுத்தி, பெரியவர்க்குரிய மந்திரி, சேனாதிபதி யென பாத்திரங்களை கொடுத்து மரபை வளர்க்கிறோமென பழமைத்திணிப்பைச் செய்வர். இதனால் அவனுக்கு பழைமையே வெறுத்துப் போவதை தாம் உணரமாட்டார்.

இதில் மற்றுமொரு சித்திரவதை நாடகப்போட்டிகள்.போட்டிகளை நடாத்துவதற்கும், விதிகளை நிர்ணயிப்பதிலும் உற்சாகத்துடன் நிற்பவர்கள் போட்டி வேளைகளில் பொருத்தமான நடுவர்களை தெரிவ தில்லை. கல்வித்திணைக்களம் நடாத்துகின்ற போட்டிகளிலும் இத னைக்காணக் கூடியதாக இருக்கின்றது சிறுவர் நாடக எண்ணக்கருவை புரிந்து கொள்ளாதவர்கள் சிறுவர் நாடகத்திற்கு நடுவராகி தரமான சிறுவர் நாடகங்களை பின்தள்ளிவிட்டு, கதைக்காகவும் நாடக செம்மைக்கா கவும் சிறுவர் நாடகமல்லாத, இயந் திரமாய் இயக்கிவிடப்பட்ட சிறுவரின் நாடகங்களிற்கு, முதலாம் இடத்தை அளிக்கும் அறிவீனத்தின் மூலம் 'கலையை அறியார் தர்பாரில் அதனை ஏறி இசைத்தல் இழுக்கு'என்ற மகாகவியின் வாக்கினை நிரூபிக்கின் றனர். பல வருடங்களாக இந்த குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாமல் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. முன்பு தொடக்கம் சிறுவர் நாடகங்களை தயாரித்த பல பாடசாலைகள் தற்போது போட்டிகளுக்கு தம்மை தயார் செய்யாது விட்டுவிட்டன. பொதுவாக ஓர் கலைவடிவம் மதிப்பிடப்படமுடியாதது. ஏனெனில் யாருக்கும் ஒருவகைச் சிறப்பு நிலை இருக்கும்.அத்துடன் கலையும் பல முகங்களைக் கொண்டது. அதனை எந்த அளவீட்டில் மதிப்பிடுவது என்பது ஒரு பிரச்சனை.அது ஒரு புறம், ஆனால் சிறுவர் அரங்கை பொறுத்தவரை அதன் பார்வையாளர், சிறுவர்களும், சிறுவர் களின் சிந்தனையை, அனுபவ எல் லையை அறிந்துகொண்ட இவர்கள்மீது அநுதாபம்கொண்டசபையே பார்வை யாளராக அனுமதிக்கப்பட வேண்டு மென உளவியலாளர் கூறுகின் றார்கள். ஆனால் சிறுவர் நாடகம் பற்றிய எண்ணக்கருவையே விளங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளாத நடுவர்களை அனுமதிப்பது பன்றிகளுக்கு முன் முத்தை எறிவதற்கு ஒப்பாகும். சிறுவர் அரங்கின் செம்மை அவ்வளவு முக்கியத்துவமானதல்ல அதனூடு வளர்த்தெடுக்கப்படும் சிறுவரின் செம்மையே முக்கியத்து /வமானது. சிறுவர் வரைகின்ற சித்திரங்கள் எப்படி சிறுவருக்குரியதாய், பெரியவர்களின் சித்திரங்களுடன் ஒப்பிடவகை காணப்படுகின்றதோ அவ்வாறே சிறுவர் நாடகங்களும் சிறுவருக்குரியவை என்பதை உணராது செயற்படும்போது இவ் அரங்கை வளர்ப்பதற்குப்பதில், அழிப்பதையே மேற்கொள்கின்றனர் என்பதை இதில் ஈடுபடும் அமைப்புகள் உணர்ந்து கொள்வது நலம். அத்துடன் விதிகளும் புள்ளிமதிப்பீடுகளும் சரிவர ஆக்கப் படவும்வேண்டும். அவையெல்லாம் சிறுவர் அரங்கை உற்சாகத்துடன் வளர்த்துச் செல்ல உதவும்.

சிறுவர் அரங்கிலுள்ள மற்றுமொரு குறைபாடு சிறுவர்களுக்காக பெரியவர் நடிக்கின்ற நாடகங்களின் வளர்ச்சி குன்றிய நிலை. ஏன் 'கூடிவிளையாடு பாப்பா'வுடன் நின்றே விட்டது எனலாம். இதன் இலக்கும் சிறுவர்களுள் என்பதால் இதன் மூலம் பல காத்திரமான பணிகளை சிறுவருக்கு ஆற்றமுடியும். உளவியல் தாக்கத்துக்குள்ளான பிள்ளைகளுக்கும் குறைபாடுள்ள பிள்ளைககளுக்கும் (Diabled Childred) மேலைத் தேசத்தில் இவ்வரங்கு தளை நீக்க அரங்காகவும்(Theatre For Liberation) மகிழ்வளிக்கும் அரங்காகவும் கல்வி அரங்காகவும் (Educational Theatre)தொழில் படுகின்றது. ஆனால் எம்மத்தியில் யாரும் அக்கறையோடு இதை நோக்குவ தில்லை. ஏன் சிங்கள நாடக கலைஞர் சோமலதா சுபசிங்கா தனது( Lanka Children's and Youth Theatre Association)என்ற அமைப்பின் மூலம் சிறுவருக்காக பெரியவர் நடிக்கின்ற பல நாடகங்களை மேடையேற்றி வருகின்றார். அரங்கு நிறைந்த சிறுவர்கள் மிக உற்சாகத்துடன் இவ் அரங்கில் பங்கு கொள்வதை காண முடியும். நாடகத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளித்தல், கரகோசங்கள் செய்தல், பாடல்களை சேர்ந்து பாடுதல் போன்ற செயற்பாடுகள் அவர்கள் அரங்கோடு கொண்ட உறவையும், அந்த அரங்கின் காத்திர தன்மையையும் எமக்குணர்த்தி நிற்கின்றன. பெரியவர் சிறுவர்களாக மாறி நிகழ்த்திக் காட்டும்போது சிறுவர்களுக்கு அடக்கமுடியாத மகிழ்ச்சி ஏற்படும். இதனால் பல கருத்துக்களை அளிப்பது சுலபம். எனவே சிறுவரில் அனுதாபங்கொண்ட, சிறுவர் அரங்க வளர்ச்சிக்குப் பாடுபடுபவர் சிறுவருக்காக பெரியவர் நடிக்கின்றவகை நாடகங்களையும் ஊக்குவிக்க வேண்டும்.

ஒட்டு மொத்தமாக நோக்கின், இன்றைய, சிறுவர்கள் நாளைய சந்ததியினர். அவர்கள் சரியாக வார்த்தெடுக்கப்பட வேண்டும். அதற்குச் சிறந்த களம், இந்தச் 'சிறுவர் அரங்கு'. எனவே சிறுவர் அரங்கு தொடர்பானதும், சிறுவர் தொடர்பானதுமான எண்ணக்கருக்களை உள்வாங்கி ஒவ்வாத முறையில் காணப்படும் குறைபாடுகளை களைந்து ஆளுமை மிக்க மனிதனை உருவாக்க பிள்ளைகளுக்கு நீண்ட கால அடிப்படைக்கு நன்மை பயக்கவல்ல வலிமையான அரங்கை கூட்டி எழுப்ப முயல்வோம். இதுதான் சரி என்றதுமல்ல, இதுதான் வேதமென்றது மல்ல எந்த வழியை கையாண்டாலும் அது சிறுவருக்குரியது என்ற நோக்கில் அணுகு வோமாயின் அதுவே நன்மை பயக்கும்.

**இக்கட்டுரைக்கு 'கற்கைநெறியாக அரங்கு' நூலிலுள்ள 'சிறுவர்க்கான நாடகத் தயாரிப்பு' என்ற கட்டுரையும், 'தப்பிவந்த தாடிஆடு' நாடகத்தின் ஆசிரியர் உரையும், 'அன்னை பூபதி'2ம் ஆண்டுச் சிறப்பிதழில் உள்ள 'சிறுவர் நாடகம்' கட்டுரையும் உதவின.**

## அவன் செயலே

வீணர்களின் கொலையாம்
விதி விரித்த
வலையாம்
சாதகக் குறிப்பில்
உண்டாம்
வயதில்
தத்தென்று
யாரறிவார்

எவரால் என்று
பெயரறியார்
பெற்றவர் அறியார்
அறிந்தவன்
அவனே
அவன் செயலே
விதி என்றார்

ஜே. பிரபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "சுபமங்களா" கோமல் சுவாமிநாதனுக்கு அஞ்சலி

ஈழத்தின் இலக்கியக்களத்தில் பல்கலைவேந்தராய் எழுத்துப்போர் புரிந்து இறுதிமூச்சுவரை நிலைநின்ற சில்லையூர் செல்வராசனின் நினைவுகள் இன்னும் மறையவில்லை. மற்றுமொரு இழப்பு எம்மை உலுக்கிவிட்டது.ஈழத்து இலக்கியத் தளத்தில் உள்ள பெரும்பாலானவர்களிடத்தில் 'சுபமங்களா' ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதன் அமைப்பு, அதன் உள்ளடக்கம் அனைத்திலுமே புதுப்பொலிவுடன் வெளிவருகிறது.இதற்கு காரணமாக இருந்தவர் கோமல் சுவாமிநாதன் என்பதை இனங்காணமுடியும். கோமல் ஆரவாரம் இல்லாமல் இலக்கியத்தளத்தில் சாதனை செய்தவர். மிக அடக்கமாகவே நடந்துகொண்டவர் தனது இலட்சியத்திற்காக இறுதிவரைவிட்டுக் கொடுக்காமல் இலக்கியம் படைத்தவர்.

அவரது 'தண்ணீர்தண்ணீர்' சினிமாவைப் பார்த்தவர்கள் நிச்சயம் அவரது இலட்சிய வேட்கையை ஆன்ம தாகத்தை புரிந்து கொள்வார்கள். அவர் ஈழத்திற்கு வருகை தந்தபோது, திருமறைக்கலாமன்றம் கொழும்புக்கிளை அவரை வரவேற்றது. அவருடன் நாடகம்பற்றிய சத்தான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டது.

அவருடைய மறைவு குறித்து நாம் ஆழ்ந்த துயரமடைகிறோம்.அவரது மறைவால் துயருறும் இவரது குடும்பத்திற்கும், நண்பர்களுக்கும் நமதுஅனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"அமரர் கோமல் சுவாமிநாதனின் ஆன்மா, சுபமங்களாவிலும் வாழவேண்டும் என்று பிராரத்திக்கின்றோம்."

**திருமறைக்கலாமன்றம்**
கொழும்பு.

## கவிதைத்துளிகள்

### உழைப்பு

உழைப்பு ஏழையின் பிழைப்பு
இல்லை அவர்களிடம் சலிப்பு
இதுவே இவர்களின் சிறப்பு
இவர்கள் இறைவனின்
படைப்பு

### நாங்கள் தான் அகதிகள்

பசியை எங்கள் உணவாக்கி
தாகத்தை எங்கள் தண்ணீராக்கி
பாதத்தை எங்கள் செருப்பாக்கி
பூமியை எங்கள் படுக்கையாக்கி
கனவை எங்கள் வாழ்வாக்கி
மானத்தை எங்கள் தெய்வமாக்கி
சோகத்தை எங்கள்சொந்தமாக்கி
உயிரை எங்கள் சொத்தாக்கி
மரணத்தை எங்கள் தூக்கமாக்கி
அழியப்போகும் நாளை
எண்ணமாக்கி
வாழப்பணிக்கப்பட்ட நாங்கள்
அகதிகளா?

### வாராதோ?

ஒருபக்கம்
உரிமைப் போர்
மறுபக்கம்
அனுதினமும்
வாழ்க்கைப்போர்
இரண்டுக்கும்
நடுவில்
இரத்த வெள்ளம்
இனியும்
வாராதோ
இங்கு
சமாதானம்?

பா.ராகுலன்-யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாவது இதயத்தில் இருந்து....

ஜி. செனத்

**01. ஆடைகள் சுற்றும் பொம்மைகள்**

அவனை யாரும்
பார்க்கவில்லை
தெரு ஓரத்தில்
அவனது நிர்வாணத்தை
எவரும் மறைக்கவில்லை
அப்படியே கிடந்தான்
அவர்கள்
திருவிழாவிற்கு
ஆடை மேல், ஆடை
கட்டிக் கொண்டிருந்தார்கள்

**02. எச்சில் இலைகளில் மனிதத்துவம்**

எனக்கு
உங்கள் முத்தங்களிலும்
கை குலுக்கலகளிலும்
பேச்சுக் கலைகளிலும்
நம்பிக்கையில்லை.
சாயம் பூசிய உதடுகள்
சலவைக் கற்கள்
சிலவேளை
உங்கள் முகங்களில்
ஒட்டியிருக்கும் முக மூடிகள்
துர்அதிர்ஷ்ட வசமாக
கழன்று விழுந்தால்....?
போங்கள்-போய்
குப்பை மேடுகளில்
எச்சில் இலைகளை
விழுங்கி
வாழ்வைத் தேடும்
அவனிடம் மனிதத்துவம்
மேலதிகமாக இருக்கிறது
அவனிடம் போய்
கேளுங்கள் தருவான்

**03 கடைசி எச்சரிக்கை**

மீண்டும்
இம்முறை
நீ
நிர்வாணத்தை
மட்டும் மறைக்க
குடிசையில்
கந்தலோடு
பரதேசியாய் பிறந்து
அன்பு
சமாதானம்
உரிமை, சுதந்திரம்
பற்றி
வெளிப்படையாய்
பேசினால்
இன்னுமொரு
தடவை
உயிர்க்க முடியாது
அரக்கத் தனமாய்
சிலுவையில்
கொல்லப்படுவாய்
அல்லது
நீண்ட விசாரணையின்
பின்
காணாமல்
போவாய்

**04 இறத்தல்கள் = சோசலிசம் ?**

மிகுந்த
கவலையோடு
விடியும் காலை
வழமையாய்
பாடசாலைகள்
கோயில்களில் இருந்து
அச்சம் தோய்ந்து
அமைதியற்ற
இருளையும்
இரவையும் கழித்து
பாய்களுடன்
நிர்வாணக்
குழந்தைகளோடு
வீடு வரும்
நாங்கள்
கூடு மாறும்
குருவிகள்
அத் தெருக்களில்
சுவாசத்தை
திணற வைக்கும்
வாசனை பூசிய
மானுடங்களின்
அந்நியப்பட்ட
பார்வை வீச்சுக்கள்
திருவிழாவுக்கு
சென்று கொண்டிருந்தார்கள்

அதுதான்
''சோசலிசக் கொள்கை'
என்பது
விடுதலைக்கு பின்பு
மட்டுமல்ல
அது
விடுதலைக்கு முன்
இருக்கும்
குடிசைகளின்
கொட்டில்களையும்
சேர்த்துத் தான்
ஏனெனில்
'இறத்தல்களின்'
எண்ணிக்கை
மட்டும்
விடுதலையும்
சோசலிசமும்
அல்ல.

**05. ஏரோதுகளும் நம்பிக்கை**

இழப்புகளும்
எனது வயலும்
மண்ணும்
அன்று வைகறையில்
பறிபோனது
முற்றிப் பழுத்த கதிர்கள்
மீது
இலத்திகளை போட்டபடி
விரவி வந்த
செக் நாட்டு
இரும்பு வண்டிகளில்
அதே கழுகுகள்
எல்லாம்
இழந்து
கடவுளுக்கு
அருகில் இருந்த போது
பதிந்து
பறந்து வந்து
நம்பிக்கையை உடைத்து
போட்டு விட்டு
சென்று
புகையும்
புழுதியும் கலைய
நீண்ட நேரம் எடுக்க
அன்று ஏரோது
பிறந்த
ஒரு வயதுக் குழந்தைகளை
மட்டும்
கொல்ல
இன்று
நவீன ஏரோது
தாயின்
கருவறைக்குள்
தொப்புள் நாண்
அறுபடாது
ஒட்டிக்கிடந்து
கருவறைக் காலங்களை
நிறைவு செய்யாத
சிசுக்களை
வயற்றைக் கிழித்து
சதைக்குவியலாய்
''முன்னேற்றங்களை''
நடத்த
சுமைசுமந்து
வந்தவர்கள்
எல்லாம்
இழந்து.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருட்டுகள்

யோ. யோன்சன் ராஜ்குமார்



இருட்டுகள்தான் என் பகல் பொழுதுகள். மனிதர்களும் உயிரினங்களும் தாம் வாழ்வதையே மறந்து உச்ச உறக்கம் கொள்ளும் நடுச்சாம வேளையெல்லாம் நான் என் உணவுக்காக மூலைகள், பெட்டிகள், பரணுகளுக்கு கீழெல்லாம் நோன்பு காத்துக்கொண்டு ஒரு எலியாவது வராதா என்று ஏங்கியபடி இருந்த காலங்கள் அனேகம். இருட்டோடு இருட்டாக என் விழிகள் கலந்து உணவைத் தேடிய போதெல்லாம் நான் என் குணவியல்புகளை மாற்றிக் கொள்வதில்லை. சில வேளை எனது வேட்டை அதிகமாகவும் இருக்கும். நிரம்பிய என் வயிற்றுக்கு, மேல் மிச்சமான எலிகளை ஜீவகாருண்யம் பார்த்து போகவிட்டபொழுதுகளு முண்டு. ஆனால் பல வேளை பட்டினியில கழிவதுதான் வழமை. ஆனாலும் நான்சலிப்ப டைவதோ அலட்டிக் கொள்வதோ இல்லை. என்னுடைய கெடு காலம் நான்வந்த வீடும் சுத்தச் சைவம்.. மச்சம் வீட்டில் மணத்ததே கிடையாது... மரக்கறி தின்டே நாக்கு மரத்து ப்போகும் மனிதர்களில் ஏன் இப்படி மாறுபட்ட மனிதர்கள் இருக்கிறார்களென்று நான் யோசிக்கிறதுமுண்டு. எங்கள் இனத்தில் நான் அறிந்தவரை தாவர போசணிகளே கிடையாது... நானும் மாறவில்லை. அதனால்தான் இந்தச் சாமப்பொழுதுகளிலும் விழிகளைத் திறந்து வைச்சுக்கொண்டு அலையுறன்.

உலகமே உறங்கிக்கொண்டு இருக்கிறது.... இராப்பூச்சிகளின் சத்தம்... தூரத்தே நாய் குரைக்கும் சத்தம்... எங்கோ மரத்திலிருந்து அலறும் ஆந்தையின் குரல். இவைதவிர எந்த இடைஞ்சலுமில்லை. ஆனால் ..முன்பு அடிக்கடி அந்த அறையில் இருந்துவரும் விசும்பல் சத்தம் மட்டும் இப்போதில்லை. முன்பெல்லாம்அடிக்கடி அடிக்கடி அந்த அறைக்குச் செல்லும் என்னால் இப்போதுபோக முடிவதி ல்லை... அந்த நாளையும் என்னால் மறக்கமுடிவதில்லை. ஓடுகிற எலியைப் பிடித்து துடிக்கத்துடிக்கத் தின்னுகிற என்னால் கூட அந்த பொழுது ஜீரணிக்க முடியாததாகவே இருக்கிறது. அதை நினைக்கும் போது... அந்த கருகி எரிந்த மணம்... சுருண்டு சுருண்டு துடித்த உருக்கோலம் மீறி எழுந்த அவலச்சத்தம் இப்போதும் என்னை அதிரவைக்கிறது. மனிதர்களென்றால் எதுவும் நடக்கும் எப்பிடியும் நடக்கு மென்று நான் உணர்ந்துகொண்ட நாள் அது..

அந்த வீட்டிலேயே நல்லவள் அம்மாதான். "பூஸ் பூஸ்" என்னை அவள் கூப்பிடும் குரலிலேயே பாசத்தின் கனதி தொனிக்கும். அதிகாலையிலேயே எழுந்துவிடுவாள்... நல்ல பக்தியும் தோஞ்சு முடிச்சு சாமி கும்பிட்ட பிறகுதான் மிச்சவேலை. அவசரம்அவச ரமாக காலையில் எல்லா வேலைகளை யும் செய்துகொண் டிருப்பாள். ஐயா எழும்பமுதலே கட்டிலுக்கு பக்கத்தில தேத்தண்ணி கோப்பையுடன் நிற்பாள். ..ஐயா நிமிர்ந்து பார்க்கமாட்டார்.

"அதில வைச்சிற்றுப் போம்"– அவளைப்பார்க்காமலே பதில் சொல்லுவார். அவள் போனதும் எழும்பி தேத்தண்ணியைக் குடிச்சுப்போட்டு பள்ளிக்கூடத்திற்கு ஆயத்தமாகத் தொடங்குவார்.

ஐயா ஒரு வாத்தியார்... அம்மாவுக்கு ஏற்றவர்தான்... நல்ல பண்பானவர்... நிலம் நோக நடந்ததே கிடையாது. ஆனால் என்னால அவரை முழுமையாக விளங்கிக் கொள்ள முடியிறதில்லை. அம்மாவோட அவ்வளவு கதை இல்லை. முகத்தையே நிமிர்ந்துபார்க்க மாட்டார்.. ..தலையைக் குனிந்தபடியே சாப்பாட்டை முதலாக வாங்கிச் சாப்பிட்டுவிட்டுப் போயிருவார்... மனிதர்களெ ன்றாலே இப்படித்தானோ என்று நான் நினைக்கிறது முண்டு. வேலைகளை யெல்லாம் நாள் முழுதும் ஓடிஓடிச் செய்வாள். மத்தியானம் சாப்பாடு செய்துமுடிச்ச பிறகுதான் ஆறுதலாக கதிரையில வந்திருந்து யோசிச்சுக் கொண்டிருப்பாள். அவளின்ர அழகான முகத்துக்குள்ள ஏதோ... இனம் புரியாத ஒரு ஏக்கம் இருக்கும். சில வேளைகளில் என்னைத் தூக்கிமடியில வைச்சுக் கொண்டு ஆதரவாக தடவிவிட்டுக் கொண்டிரு ப்பாள். அவளின்ர கைகளில் ஒரு இனம் புரியாத பாசம் தெரியும். சின்ன மாலைகட்டி என்ர கழுத்தில போட்டிட்டுச் சிரிப்பாள். அவளின்ர மடியில இருக்கிறதென்டால் எனக்கு வலுசந்தோசம். ஆனால் என்னவோ தெரியாது சிலவேளையில எனக்கு அடிப்பாள். என்னை நெரிப்பாள். செவியில பிடிச்சுத்தூக்குவாள். பிறகு தூக்கி மடியில வைப்பாள். ஏன் அப்பிடி நடக்கிறாள் எண்டும் தெரியாது. பள்ளிக்கூடத்தால ஐயா வந்த பிறகு அவர் சாப்பிட்ட பிறகுதான் தான் சாப்பிடுவாள். சாப்பிட்ட ஐயா.. திரும்ப வெளிக் கிட்டிடுவார். பிறகும் அவள் தனிய த்தான். சிலவேளை அம்மாட சொந்த க்காரப் பெடியன் சுரேஸ் வந்திருந்து கதைச்சுக் கொண்டிருப்பான், அவனும் வலுசாது. வந்த உடனை என்னைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கி மடியில வைச்சுக்கொண்டுதான் கதை... அம்மாவும் அவனோட கதைக்கேக்க நல்ல சந்தோசமாய் கதைக்கும்... ஏனோ அம்மாவுக்கு நெடுக கதைச்சுக் கொண்டிருக்கிறதில சரியான ஆசை. ஐயா இரவு ஏழுமணிக்குத்தான் வருவேர். வந்த பிறகு ஒரே எழுத்துவேலை. அம்மா கிட்டப்போய் கதைச்சால நிமிர்ந்து பார்க்காமலே பதில் சொல்லுவார்.

இரவைத்தான் என்னால் புரிஞ்சுகொள்ள முடியிறதில்லை. ஐயா போய்படுத்த உடன் குறட்டைச்சத்தம் கேக்கும்... நானும் என்ர வேட்டையில இறங்கிமூலை முடுக்குகளெல்லாம் தேடின பிறகுதான் அந்த அறைக்குப் போவன். ஆனால் சாமத்திலையும் சிலவேளை விசும்பல் சத்தம் கேக்கும். அம்மா நித்திரைகொள்ளாமல் சிலையைப் போல எழும்பி இருப்பாள்.. பகலிலே நல்லாஇருந்த வள்இரவிலே ஏன் இப்பிடி?.. என்னால புரிஞ்சு கொள்ள முடியிரதில்லை. அடிக்கடி அவள்விடுகிற சூடான பெருமூச்சு அறைக்குள்ளேயே எதிரொலிக்கும்.. ஐயா ஒருஜடம் மாதிரி ஒரே நித்திரை.. ஒருநாள், "நிம்மதியா கிடக்க ஏலாது இங்க" ஐயா சொல்லிக்கொண்டே வெளியில வந்துபடுத்திட்டேர்... எனக்கு விளங்கயில்லை.... அம்மா அண்டைக்கு முழுக்க சிவராத்திரிதான்.. விடிய முகமே சிவந்துபோயிருந்தது.. .பகலிலே வழமைபோல இருக்கும் இரவில ஏன் இப்படி?

ஒருநாள் ஐயாவின்ர தாயும் தகப்பனும் வந்திருந்தினம். அம்மா ஓடிஓடி ஒரே வரவேற்பு. "மாமி, மாமி!" எண்டு அவையைச் சுத்திக்கொண்டிருந்தாள். அவைகளுக்கும் வலுதிருப்தி. ஆனால் என்னவோ, போகமுதல் சொன்ன கதை அம்மாவை சரியாய் குழப்பிப்போட்டுது.

"கடவுள் எல்லாத்தையும் தந்தான். என்ர மகன்ர யெண்டு சொல்ல ஒரு பூச்சிப்புழுவைத்தான் காண யில்ல...ம்..."பிறகு இரகசியமாகவும் ஏதோவெல்லாம் சொன்னாள். எனக்கு வடிவா விளங்கயில்லை.

"நான் சொன்ன விரதத்தை செய்யிள்ள" - அவர்கள் சொல்லிக்கொண்டு போனதுதான் தாமதம் அம்மா ஓடிப்போய் கட்டில்ல விழுந்துஒரே அழுகை. சாமி படத்துக்கு முன்னால போய் நின்டு கொண்டு "ஐயோ! கடவுளே என்னை ஏன் சோதிக்கிற... தன்னை தெரிஞ்சுகொண்டு.. என்னை ஏன் இந்த மனுஷன்... காலமெல்லாம் இப்படியே நான் .."

அப்பிடி என்ன சொல்லிச்சினம்?.. ஏன் அம்மா அழுகுது, ஒண்டும் விளங்கயில்லை. சிலவேளை மனுசராய் இருந்தாத்தான் அதுவிளங்குமோ என்னவோ... அண்டைக்கு ஐயா வந்த பிறகு ஒரே கலபுலவாகத்தான் இருந்திது... எனக்கும் வேட்டையில கவனம் இருந்ததில்லை. அந்த கவனம் இல்லாமல் போச்சுது. ஆனால் ஒண்டு இரண்டு வசனங்கள் மட்டும் மனதில நிக்குது.

"ஏழு வருசமா என்ன சுகத்தைக் கண்டன்... மாமியும் வந்து பூச்சி புழு எண்டு ஏதோ சொல்லிற்றுப் போறா"

ஐயா மௌனம் எனக்குப்பிரச்சினையாய் இருக்கிறது. சாப்பாடு மட்டுந்தான். அதுக்காகக் கூடநான் பெரிசா அலட்டிக்கொள்ளுறதே இல்லை... ஆனா இவைக்கு ..என்னென்ன பிரச்சினைகளோ

சிலவேளையில அம்மாவும் ஐயாவும் வெளிக்கிட்டு வெளியில போறதை ப்பார்த்தால் அவையைப் போல சந்தோசமான மனுசர் உலகத்திலையே இல்லை எண்டு போலத்தான் தெரியும். அப்பிடித்தான் அண்டைக்கும் கோயிலுக்காக இருக்கவேணும். ஐயா வேட்டி உடுத்த அம்மா வடிவான சாறியும் உடுத்திக்கொண்டு வெளிக்கிட்டிச்சினம். கண்ணே பட்டுப் போகும் போல இருந்துது. புதுத்தம்பதிகள் போல அவ்வளவு வடிவாக இருக்கினம்... அந்தக் கோலம் இப்பவும் கண்ணுக்க நிற்குது. ஆனால் என்ன நடந்துதோ?... போகேக்க இருந்தமாதிரி வரேக்க இல்லை ஐயாவின்ர முகம்பேயறைஞ்ச மாதிரி இருந்துது. அவர் செருப்பை கழட்டின விதத்திலயும் கதவைத் திறந்த விதத்திலும் குறுக்க வந்த என்னை மிதிக்கப்பார்த்ததிலும் அவற்ர நிலை தெரிஞ்சுது. அம்மாட முகத்திலும் பதட்டம்.

"அப்பிடி நான் என்ன சொல்லிப் போட்டன்?"

"ஒண்ணுமில்ல ஒண்ணுமில்ல"- இதுஐயா

எனக்கு ஒண்டுமே விளங்கயில்லை.

"எங்களுக்கு குடுத்துவைக்கேல்ல எண்டுதானே சொன்னான்..."

"அது சொல்லிற இடமா"

வெடியாக வார்த்தையை கொட்டிவிட்டு ஐயா வெளியில போற்றேர். அம்மா சாறியும் மாத்தாமல் கட்டில்ல விழுந்துகிடந்து ஒரே அழுகை.. என்ன வினோதப் பிறவிகளோ...

ஆனால் அண்டைக்குப்பிறகு ஐயாவின் செயற்பாடுகளும் வித்தியாசம் தான்... அம்மாவும் ஐயாவோட கதைக்க எத்தனிக்கிறது தெரியும்... ஆனால் ஐயா நிமிர்ந்துபார்க்கிற இல்லை. கதைக்கவும் சந்தர்ப்பம் குடுக்கிறதில்லை. அவளை கிட்ட நெருங்கவிடாத தன்மையிலும் ...கோபமாக இருக்கிறது போல காட்டிக்கொள்ளுறதிலையும் ஏதோ ஒரு கவசத்தை அவர் போட்டுக்கொண்டு இருக்கிறது போலத்தான் எனக்குத் தெரிந்தது. அம்மாவைப்பாக்க சில வேளை பாவமாகவும் இருக்கும்... சில நாளாக அவள் சாப்பிட்டதையும் நான் காணேல்ல... ஆனால் ஐயாவுக்குரிய எல்லா வேலைகளையும் செய்துகொண்டே இருந்தாள்... அம்மாவோட கதைச்சு சிரிக்கக்கூடியவன் சுரேஸ் தானெண்டு நான் நினைக்க அண்டைக்குப் பின்னேரமே ..சுரேஸ் வந்திட்டான். அவன் வந்தது எனக்கும் வலுசந்தோசம்... அம்மாவும் கவலையை மறந்துகனநேரம் கதைச்சுக்கொண்டே இருந்திது. அவன் வந்த பிறகுதான் அம்மாவோட முகம் கொஞ்சம்சிரிச்சிது எண்டு பார்க்க... திடீரென்று ஐயாவும் வந்திட்டுது. அவள் முகத்தில் அதே இறுக்கம்... சுரேஸ் பார்த்துச்சிரிச்சும் அவர் சிரிக்கவே இல்லை. தன்ர அறைக்குள்ள போனவர் வெளியில வரவும் இல்லை. ...அவனுக்கும் ஒருமாதிரி இருந்திருக்கும் போல அவனும் ..கொஞ்ச நேரத்தில் போற்றான்... அம்மா பிறகு தேத்தண்ணியும் கொண்டு அறைக்க போக ..ஐயாட குரல்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுது... அம்மாவும் ஏதோ சொல்லியிருக்கும் போல. ஒரே ரகளையாய் இருந்தது. அம்மா அழதழுது கதைச்சதும் கேட்டுது... ஐயா," நெடுக என்ன அவனோட கதை" அம்மாட சத்தமும் கோபத்தோட கேட்டுது...பிறகு அம்மா அழுதபடி விறுவிறெண்டு வெளியில வந்துது ..எனக்கு ஒண்டுமா விளங்கையில்லை...கொஞ்ச நேரத்தில குளிச்ச மாதிரி ஈர உடுப்போட கிறுகிறெண்டு வந்திது...அதின்ர முகம் சிவந்தே போயிருந்தது. அறைக்குள்ள போய் கதவை அடிச்சு சாத்திச்சிது.. உள்ளுக்குள்ள சொன்னது சாதுவாகத்தான் கேட்டுது.

" நான் இவ்வளவு நாளும் எனக்குள்ள எரிஞ்சுகொண்டிருந்தன். இண்டைக்கு உங்களுக்கு முன்னுக்கே எரியுறன். நீங்க தணிக்கமாட்டீங்க..ஏனெண்டால் உங்களால ஏலாது... உலகத்துக்காகவும் வாழ நினைக்கிறீங்க..இனியெண்டாலும் விளங்கிக்கொள்ளுங்க"

இதுக்குப் பிறகு திடீரெண்டு கதவிடுக்குக்குள்ள பெரிய நெருப்பு தெரிஞ்சுது... நெருப்புச் சுவாலை அறைக்கு வெளியிலையும் தெரிஞ்ச உடனதான் ஓடிப்போய் பாத்தன்..அந்தக் கோரம்...சொல்லவே ஏலாது. அம்மா சுருண்டு சுருண்டு எரிஞ்சுகொண்டிருந்தாள்... ஐயா சிலையாகவே நிண்டார். அம்மாவுக்கு மேல நெருப்புகள் மிளைச்சதுபோல வளர்ந்து நிண்டது. அவளின்ர ஓலம்..இப்ப நினைச்சாலும் என்ர மயிர் கூச்செறியும்...அதற்குப் பிறகு அம்மாவைக் காணவே ஏலாது என்டுறது. முதலாக இந்த மக்கு மூளைக்குப் பிறகுதான் விளங்கிச்சுது...பிறகு என்னென்னமோ எல்லாம் செய்திச்சினம்... எத்தனையோ ஆக்கள் வந்து ஐயாவை கட்டிப்பிடிச்சு அழுதினம்..

"ராசா உனக்கா இந்தக் கெதி."- என்டினம் சில பேர்


"இவனோட வாழத்தெரியாதவளும் ஒரு பொம்பிளையா"- என்டும் சொல்லுச்சினம்

" என்னென்னவோ ஆருக்குத் தெரியும்."-என்டும் கதைச்சினம்

பிறகு எத்தனையோ சடங்குகள், சாப்பாடுகள் எல்லாம் நடந்தது. அதுகள் நடந்தாலும் அம்மா வரமாட்டா எண்டு எனக்கு இப்ப தெரியும். ஆனால் என்ன இருந்தாலும் சில இருட்டுகள் வெளிச்சத்தில தெரிகிறதே இல்லை.. இருட்டோடையே கரைஞ்சு போயிரும்.

## சுவிட்சர்லாந்தில் ஓவியக் கண்காட்சி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வு பெற எழுந்திரு

எழில் வானைத் தொட்டிட
எழுகின்ற அலைகளும்
உடன்வீழ்ந்து மடிந்தாலும்
உருமாறிக் கலைந்தாலும்
ஓய்வதில்லை ஒருகணமும்

காற்றுத்தான் தினம்வீசி
தென்றலாகி புயலாகி
மூச்சில் தான் கலக்கிறது
நின்றுவிட்டால் உயிர்கள் ஏது

இயற்கைகூட ஓய்வதில்லை
இளைஞனே நீ ஏன்
இருட்டில் முடங்கிக் கிடக்கின்றாய்
ஓய வேண்டாம் ஒதுங்கவேண்டாம்
ஓலங்கள் நிற்கும்வரை


சிலுவையின் பாரத்தாலே
சில கணங்கள் மண்ணிலே
உடல்சாய்ந்த மாபரனும்
உடன்எழுந்து வழிநடந்தார்
உன் வாழ்வின் வழியானார்

நீமட்டும் நிம்மதியின்றி
நிர்க்கதியாய் நிற்பது ஏன்
உடன் எழுந்து நடந்திடு
உயர் இலட்சியப் பாதையிலே

**எம்.நேசராஜா**

## ஜேர்மனியில் ஓவியக் கண்காட்சி





## சுவை

தேவர்க்கு
தெய்வம் அமுதம்

பன்றிக்கு
பவ்வி அமுதம்

அமுதமும்
அவரவரின்
ஆன்மீக சுவையுணர்வின்
அளவுக்குள்
அடங்குங் காண்பாய்

**விதுரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்கால தமிழ் இசையும் கலையும்



பண்டைத் தமிழகத்தில் இசைக்கருவிகள் தோற்கருவி, நரம்புக் கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி என நான்கு வகைப்படும்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த அடியார்க்கு நல்லார் உரைமூலம் தெரியவரும் தோற்கருவிகள்:

| | |
|---|---|
| பேரிகை | சந்திரவலையம் |
| படகம் | மொந்தை |
| இடக்கை | முரசு |
| உடுக்கை | கண்விடுதூம்பு |
| மத்தளம் | நிசாளம் |
| சல்லிகை | துடுமை |
| கரடிகை | சிறுபறை |
| திமிலை | அடக்கம் |
| குடமுழா | தகுணிச்சம் |
| தக்கை | விரவேறு |
| கணப்பறை | பாகம் |
| தமருகம் | உபாங்கம் |
| தண்ணுமை | நாளிகைப்பறை |
| தடாரி | துடி |
| அந்தரி | பெரும்பறை |
| முழவு | |

நரம்புக் கருவிகளில் மிகவும் தொன்மை வாய்ந்தது யாழ். இது குறிஞ்சிநில வேடரின் வில்லிலிருந்து தோன்றியது என்பது அறிஞர் கூற்று. யாழ்களைப்பற்றி எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், சிலப்பதிகாரமும் புகழ்ந்து கூறும். சீறியாழை இசைப்பவர் சிறுபானர் என்றும் பேரியாழை இசைப்பவர் பெரும்பானர் என்றும் பெயர் பெற்றனர். இப்பொழுது இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணத்தவர் இவர்களில் ஒரு பிரிவினர் என்று கூறுவோரும்உண்டு. பலாமரத்தில் குடைந்து செய்யப்பட்ட இசைக்கருவி வீணை எனப் பட்டது. பொதுவாக யாழுக்கும் வீணை என்ற பெயர் உண்டு

பேரியாழ்

சீறியாழ்

மகரயாழ்

சகோடயாழ்

செங்கோட்டுயாழ்

பாலையாழ்

குறிஞ்சியாழ்

மருதயாழ்

நெய்தல்யாழ்

துளைக்கருவிகளில் முதன்மை பெற்றது குழல். வண்டுகளால் துளையுண்ட மூங்கில் மரத்தின் ஓசையறிந்த முல்லை நிலமக்கள் கண்ட கருவி குழலாகும். மற்றும் உலோகத்தினால் செய்யப்பட்ட கருவிகள் "கஞ்சக் கருவிகள்" எனப்பெயர் பெற்றன. இயற்கையால் அமைந்த மனிதனின் குரலை ''மிடற்றுக்கருவி" எனக்கூறினர்.

**இசைப் பண்கள்**

தமிழிசையில் பண் என்றும் திறமென்றும் இருவகை உண்டு. அவையாவன:

குரல்

துத்தம்

கைக்கிளை

உழை

இளி

விளரி

தாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிலிருந்து பிறப்பன திறங்கள் எனப்பட்டன. அவை பண்களுக்கு இனமானவை.

**தமிழ்பண்கள்**

குறிஞ்சிப் பண்

பாலைப் பண்

முல்லைப் பண்

மருதப் பண்

நெய்தற் பண்

இவ்வாறு ஐவகை நிலத்திற்கும் ஏற்ற பண்களை அமைத்து அதற்கேற்ற கருவிகளின் துணைகொண்டு இசை பயின்றனர் என்று சங்கநூல்கள் கூறுகின்றன.

**வரிப்பாடல்கள்**

கானல் வரி

கந்துக வரி

ஊசல் வரி

வேட்டு வரி

இவ்வாறான வரிப்பாடல்களையும் அதற்கேற்ற ஆடல்களையும் அறிந்திருந்திருந்தனர். மற்றும்,

அம்மானை

பொற்சுண்ணம்

சாழல்

தெள்ளேணம்

உந்திபறத்தல்

தோள்நோக்கம்

இன்ன பிற ஆடலுக்குரிய பாடல்களைளயும் பாடிவந்தனர்.

**நடனக்கலையும் நாடகக் கலையும்**

சங்ககாலப் பெண்கள்.

குரவைக் கூத்து.

ஆய்ச்சியர் குரவை.

துணங்கை.

போன்ற நாட்டிய வகைகளை நன்கு அறிந்திருந்தனர். குறிஞ்சிநில மக்கள் முருகனைப் புகழ்ந்து ஆடிய கூத்து ''குன்றக்குரவை''.

முல்லைநில மக்கள் மாயோனைப் புகழ்ந்து ஆடிய கூத்து ஆய்ச்சியர் குரவை

மகளிர் ஒருவரைஒருவர் தழுவிக்கொண்டு ஆடிய கூத்து ''துணங்கை''நாடகமடந்தை மாதவி பதினொரு வகையான ஆடல்களை அறிந்து தேர்ச்சி பெற்றிருந்தாள். அல்லியம், கொடு கொட்டி, குடை, குடம், மல், துடி இன்னபிற பதினொரு வகை ஆடல்களை அதற் கேற்ற ஆடை அணிந்து நாடகமேடையில் நயம்பட ஆடி னாள் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

சிறந்த நாடக மக்களுக்குத் ''தலைக்கோலி'' பட்டம் வழங்கப்பெற்றது. நாட்டியம் ஆடுவதில் தேர்ச்சிபெற்ற மகளிர் ''தோரிய மடந்தையர்'' என்றும் ''தலைக்கோல் அரிவையர்'' என்றும் அழைக்கப்பட்டனர்.

நாட்டியக்கலையைப் பயிற்றுவித்தவன் ''தலைக் கோலாசான்'' என்று அழைக்கப்பட்டான்.

நடனக்கலையில் தேர்ச்சி பெற்றவர் ''விறலி'' என்றும் ''ஆடுமகள்'' என்றும் ''ஆடுகளமகள் '' என்றும் அழைக்கப்பெற்றனர்.

**கூத்து**

பழந்தமிழகத்தில் நாடகம் என்பதுகூத்துக்கள் மூலம் வளர்ந்தது.

புகழ்க்கூத்து

வசைக்கூத்து

கருங்கூத்து

கழலைக்கூத்து

வள்ளிக்கூத்து

குரவைக்கூத்து

சாந்திக்கூத்து

என்று பலவகைக் கூத்துக்கள் இருந்தன. தொல்காப்பியம் கூத்துக்களை மட்டும் குறிப்பதோடு அல்லாமல் ''பண்ணை'' என்ற நாடகத்தையும் குறிக்கின்றது.

**நாடக இலக்கண நூல்**

முறுவல்

சயந்தம்

குணநூல்

செயிற்றியம்

போன்ற நாடக இலக்கண நூல்களையும், ''மதிவாணர் நாடகத் தமிழ்நூல்'' போன்ற நூல்களையும் அடியார்க்கு நல்லார் குறிக்கிறார்.

நன்றி

***'சங்க காலக்கலை'' எனும் கட்டுரை***

***நூல்: தமிழகக் கோயிற்கலைகள்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமுகம்
# KALAIMUGAM
*Quarterly Devoted to Literature and the Arts*
*Centre for Performing Arts*


N. 19, Milagiriya Avenue
Apartment No 5/6
Colombo 4


**Publisher**:
Thirumarai Kala Mandram

**Editor - in - Chief** :
*Prof.* N.M.Saveri (Xavier) *Adikal*

**Associate Editor** :
P.S. Alfred

**Art** (cover & inside) **& Layout** :
Samy

**Printing & Type Setting** :
Lanka Publising House


## KALAIMUGAM

தொடர்புகளுக்கு:


திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

ஹொட்டேல் இம்பீரியல்
அறை இல. 302
14/14- A -1, டுப்ளிகேசன் வீதி,
பம்பலப்பிட்டி,
கொழும்பு - 4
தொலைபேசி: 508722, 581257

164, BURNT ASH LANE
BROMLEY BRI 5 BU KENT
ENGLAND
TEL: 8571887

41,RUE DE LA MOTTE
93300 OBERVILLIERS
FRANCE
TEL: 00331 48336547


57, BUDEA CRESCENT,
SCARBOROUGH ONT,
CANADA
M1 R 4V5

VIA CAVOUR 41
FRASCATI RM
ITALY
TEL: 9419902

GERMANY
TEL: 20464 2430





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# நாடக அரங்கியற் கண்காட்சி



**Published By:**
**THIRUMARAI KALAMANRAM**
**Jaffna, Sri Lanka.**





LANKA PUBLISHING HOUSE - COLOMBO-13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org